
www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
1993
பக்கம் 20
දිනමුරසු වාරමලර්
ஆகஸ்ட் - செப்டெம்பர் 29 - 04. ரூபா 8/50

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 14



உள்ளூராட்சித் தேர்தல்களின் உள்நோக்கம் என்ன?
அரசியல் கட்சிகளோடு ஆலோசிக்காமல் அவசர முடிவு ஏன்? —எக்ஸ்ரே ரிப்போர்ட்—



உலக ரவுண்டப்

வர்ணப் படங்களோடு சினிவிசிட்



ஸ்போர்ட்ஸ்

தையல் குறிப்பு
அழகுக் குறிப்பு
வீட்டுக் குறிப்பு
லேடீஸ் ஸ்பெசல்

ஒற்றனின் நகர ரவுண்டப்

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கென்னடி இன்னும் உயிரோடு இருக்கிறார் - திடுக்கிடும் தகவல்

[illegible] டையாடும் ஓநாய் மனிதன் — உண்மைச் சம்பவம்

சிறுகதைகள் கவிதைகள்

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

அன்புடன் உங்களுக்கு
வணக்கம்.

வியக்கவும்-நெகிழவும் வைக்கும்
வாசக நெஞ்சங்களை
வசப்படுத்த முடிந்ததில் வசீகரமான
சந்தோசம்.

சென்ற வாரம்-கொழும்பில்-
முரசின் விளம்பர சுவரொட்டிகளை
சுவர்களில் விதைக்க
அலுவலகத்தில் இருந்து சென்றார்கள்.

சுவரொட்டிகளைக் கண்டதும்,
வாசக நெஞ்சங்கள் பலர்,
தடுத்தும் கேளாமல் தாமே முன்வந்து
உற்சாகமாய் ஒத்துழைத்தார்கள்.

இன்னொரு நெகிழ்ச்சி.
சுவரொட்டிகள் போடப்பட்டுக்
கொண்டிருக்கையில்
அவ்வழியே வந்தனர் ஒரு குடும்பத்தினர்.
தாய்.மகன்-மகள்.
முரசின் சுவரொட்டி என்று கண்டதும்
அளவற்ற சந்தோசத்தோடு அளவளாவினர்.
"அண்ணா எமக்கும் சுவரொட்டி
தாருங்கள்.
எமது வீட்டருகிலும் போடுவதற்கு"
என்று கேட்டு-பசை பூசித் தரச் சொல்லி
ஆர்வமாய் பெற்றுச் சென்றனர்.

இப்படியே-சென்ற இடமெங்கும்
சிந்தை குளிரும் பாசப் பிடிப்புக்கள்
தனக்கென்று ஒரு தனிப் பாணியோடு
தினமுரசு வாரமலர்-
சாதனையின் சிகரங்களில் தடம்
பதிக்கிறதெனில்
உங்கள் உற்சாகமே உந்துதல்.

■

பேனா நண்பர் அரங்கம்
வாசக நெஞ்சங்களது வலுவான
கோரிக்கையால்
உருவான பகுதி.
எண்ணவியலாத தொகையில்
அரங்கம் நோக்கி வந்துள்ள மடல்கள்.
நல்ல நண்பர்களை
சேகரிப்பதில் அத்தனை ஆர்வம்.
கரம் வந்து சேர்ந்த ஒழுங்கின்படி
உங்கள் பெயர்களும் இடம் பெறும்.
அதனால்
இன்னும் வரவில்லையே என்கின்ற
அன்புத் தொல்லை தவிருங்கள்.

■

இஸ்லாமிய வாசக நெஞ்சங்களுக்கு
மீலாத் வாழ்த்துக்கள்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை-

அன்புடன்
—ஆசிரியர்—

**தினமுரசு**
**போன்: 820265**


**அறிவித்தல்**
**இலங்கை எங்கும்**
**தினமுரசு வாரமலர்**
**ரூ. 8.50 மட்டுமே.**

### அட... அல்பம் ரெடி
### நீங்கள் ரெடியா?

உங்களிடம் கமரா இருக்கிறதா? இருந்தால் இப்போதே புறப்படுங்கள். உங்கள் சூழலில் கண்ணில் படும் வியப்பான - வித்தியாசமான காட்சிகளை கமராச் சிறைக்குள் மடக்குங்கள். பத்திரமாய் எமக்கு அனுப்புங்கள். சிறந்தவை பின் அட்டையில் 'அட .... அல்பம்' பகுதியில் இடம்பெறும். கலர் படங்களே விரும்பப்படுகின்றன.

முகவரி-
தினமுரசு வாரமலர்
அட...அல்பம்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-5.

## கவிதைப் போட்டி இல-14



பாருங்கள் படத்தை. உள்ளத்தில் உற்பத்தியாகும் எண்ணத்திற்கு மடலிலே உருவம் கொடுத்து அனுப்புங்கள். தபாலட்டை போதும். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி- 4.9.93.

-முகவரி-
கவிதைப் போட்டி இல:13
தினமுரசு வாரமலர்
88/14, சேர்மாதேவி பிளேஸ்,
கொழும்பு-5

## கவிதைப் போட்டி இல-11

களம் வந்த கவிதைகளில் வெற்றி முகம் கண்ட கவிதையும்- வியக்கவைத்தவையும்.

### பரிசுபெறும் கவிதை

**நம்பிக்கை**

கால் போனாலும்
கவலையில்லை...!
நம்பிக்கை வை
தாகம் என்ன...
சோகம் கூட
சோர்ந்து போகும்!
பேராதனை மு. விஜேந்திரா.

**கலைக்கு விலை**

காரோடும் (அருணகிரி)
வீதியிலே
கலை உந்தன் கலையே!
தலைவா உன் புன்னகைக்கு
விலை
இந்த உலகே!
ஆர்.காஞ்சனாதேவி
திருகோணமலை.

**வி(ச)தி!**

ஓ....
விதியின்
அரவணைப்புச்
சின்னமொன்று வீதியோரம்
விழா
எடுத்துக் கொண்டிருக்கின்றது.
ஷஹிர்ஷா தாஸிம்
தர்கா நகர்.

**விதியின் தீர்ப்பு**

உள்ளத்துக்கு
உரம் இருக்கு.....
இயற்கைக்கு
இதயம் இருக்கு.....
வாழ்க்கைக்கு
வழி இருக்கு....
சியானி ஜப்பார்
அக்குறனை.

**நம்பிக்கை**

தன்மானத்தின்
முன்னிலையில்
தன்னம்பிக்கை
உயிர்வாழ்கின்றது
சைரந்தி சிவலோகநாதன்
கொழும்பு-06



**நம்பவேண்டாம்**

ஓ.....
பத்திரிகைக் காரங்க
படமெடுத்துட்டாங்க.
அங்க
காவிரி தண்ணிக்கு
"ஜெ" உண்ணா
விரதமாம்.
இங்க
குழாய் நீர் குறைவெண்டு
நானும்
உண்ணா....
.......
நம்பவேணாமுங்க.
நான்
குளிக்கத்தான் வந்தன்
முருங்கைத்தீவான்
நிந்தவூர்.

**பாடம்**

என் கால்கள் மட்டும் தான் முடம்
என் மனதில் இருக்கிறது திடம்-இது
உங்களுக்கோர் பாடம்.
இரா.குணசீலன்
பூண்டுலோயா.

மனம் ஊனமுற்று
மிருகமான மனிதனிடையே
உன் குறை
பெரிதல்ல.
மஸ்தீரா.என்.
தெஹிவலை.

**முடியுமா அதனால்?**

எவ்வளவுதான்
விஞ்ஞானம் வளர்ந்தாலும்
என் கால்களை
திருப்பித்தர
ஒரு விஞ்ஞானி இல்லையே!
செ.குணரத்தினம்.
மட்டக்களப்பு.

**முயற்சி**

முடத்தால் தனித்து விட்டேன்
திடத்தால் நிமிர்ந்து விட்டேன்
செந்தில்குமார் சன்முகம்
லிந்துலை.

"ஊனக் கால்களிருந்தென்ன
உறுதியான மனமுண்டு
ஞாலத்தில் நம்மைப் போல்
பலருமுண்டு நாளைப்பொழுது
நன்னீர் நல்லபசி தீர்க்கும்......!"
அமிர்த-சந்திரபாலன்
திருகோணமலை.

முட்களின் நடுவிலும்
மலரும் றோஜா....
உன் உதட்டில்
ஆ.ஜெகசேதி
திருகோணமலை.

**சிரிப்பது நானல்ல**

குண்டுகள் வெடித்து
நொறுங்கிப் போயின கால்கள்;
புதிய வாழ்க்கை
மூன்று சில்லுகளில்
முளைத்திருக்கிறது.
கழுவப் போவது
துணிகளை மட்டுமல்ல
சோகங்களையும் தான்.
சிரிப்பது நானல்லவே..
நம்பிக்கை!
காத்தான்குடி அனு

**விலை—மனிதம்**

விஞ்ஞான மோகத்திற்கும்
வீதியின் தாகத்திற்கும்
விலைப் பொருள்!
"மனிதம்"
து.கலைவாணி
வத்தளை.

**உற்சாக உள்ளம்**

மக்கள் மத்தியில் ஊனமுற்றவன்
மனத்தில் உள்ளே ஊனமற்றவன்
தவிக்கும் போது உதவியற்றவன்
தன்கையே தனக்கு உதவியென்றவன்
-பிரேம்-

கொம்புத்தேன்
இல்லாவிட்டாலும்
குழாய் நீராவது
கிடைக்கிறதே
க.ஹட்சன்
செங்கலடி.


**வ.கி.கு**

வடக்கும்
கிழக்குமா?
குழாயடியில்!!
எம்.ஐ.எம்.முஸாதீக்
மருதமுனை.

என்ன சிரிக்கிறாய்.....
தேசத்தில்
குழாய் நீருக்காவது
சுதந்திரம் இருக்கிறதே
என்றா!
ஏ.எல்.உவைஸ்
அக்கரைப்பற்று.

வேறு என்ன சொல்ல-
"நீ
கொடுத்து வைத்தவன்"
ராஜன் நசூர்தீன்
நமடகஹவத்தை.

# வாசக(ர்)சாலை



**அன்பு தினமுரசே...**

"செவிக்கு விருந்தாகும் முரசைக் கண்டிருக்கிறேன்.

விழிக்கு விருந்தாகும் முரசை இன்றுதான் பார்க்கின்றேன்.

உனக்குள் இருக்கும் முத்துக்கள்
படிக்க வேண்டிய சொத்துக்கள்
நீ வாழ வேண்டும்-உன்னால்
நாமும் வாழ வேண்டும்-"

**திருமதி சாந்தினி சந்திரன்**
**வத்தளை.**

வண்ணம் கொண்ட
அட்டையுடன்,
வஞ்சி இவளின்
வாசலில்,
வெள்ளி அன்று
வந்து நிற்கும்,
வண்ண மலரே
என் முரசே!
உனக்காக என்
வீட்டு வாசல்
மட்டுமல்ல,
என் இதயவாசல்
கூட
திறந்தபடி
நீ சுமந்து வரும்
சங்கதிகளை
பகிர்ந்து கொள்ள
பார்த்திருக்கும்.

**ஷர்மிளா பானு**
**ஹட்டன்.**

வண்ணமலரே என் வண்ணத்துப் பூச்சியே வியாழன் தோறும் வியக்க வைக்கும் பல தரப்பட்ட விடயங்களை எமக்கு குறைவிலாது வழங்கி எம்மை உன் பால் ஈர்த்து விட்டாய். உன் சீரான பணி தொடர என் உளமார்ந்த நன்றிகள் பற்பல.

**ராமன் ராமதாஸ், பொ.புவனி**
**இராமனூர், புளியங்குளம்.**

முத்து முத்துக்களான கதைகள் கவிதைகள் குடும்ப வாழ்க்கைக்கு தேவையான அனைத்து அம்சங்களும் தாங்கிவரும் தினமுரசே நீ வழங்கும் சுவையான அம்சங்கள் எம்மை "ஜெட்"

சுவையான அம்சங்கள் 'ஜெட்' வேகத்தில் கவர்ந்து விட்டன.

**செல்வராணி சுப்பிரமணியம்**
**கொட்டகலை.**

அன்பின் முரசே!

வெள்ளி விடியும் போதே உன்னை பெற்றுவிட ஆசை. நீ அள்ளி வழங்கும் அத்தனை அம்சங்களும் பிரமாதம். முரசே உன் சேவை மென்மேலும் வளர என் இனிய வாழ்த்துக்கள்.

**ஆர்.கே.தங்கராஜ்**
**பண்டாரவளை.**

முக்கனிச்சுவையாய்
முழுமனமும் நிறைந்து விட்ட
தித்திக்கும் தேன் சுவை
தினமுரசு சிறப்பிதழ்;
வாரந்தோறும் நம் கரம்தனில்
வர்ண ஜாலங்களால்
வட்டமிடும்
வாரமலரே...
திக்கெட்டும் உன் புகழ்
சேர்கிறது.
சிறியோர் முதல் பெரியோர் வரை
எல்லா உள்ளங்களையும்
ஈர்த்துவிட்ட
இன்பத் தினமுரசே
உன் சேவை என்றும் சிறக்க
என் மனம் திறந்த வாழ்த்துக்கள்.

**ஹன்ஸா கமால்**
**பேருவளை.**

அன்பு தினமுரசே!

மாதமொரு முறைதான் நான் எனது காதலியைச் சந்திக்கிறேன். ஆனால் உன்னை ஒவ்வொரு நாளும் சந்திக்கிறேன். காரணம் உன் ஒவ்வொரு பக்கமும் பார்க்கப் பார்க்க இனிக்கிறதே!

**எம்.ஐ.அப்துல் காதர்**
**அக்கரைப்பற்று-04**

இங்கிரியாவில் தினமுரசு கண்டேன்

மனதில் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை உமது சேவைக்கு பல கோடி வாழ்த்துக்கள்

**ம.ஸ்ரீகாந்தன்**
**இங்கிரிய.**

தினமுரசே நீ ஊருக்கு புதுசுதான். மங்கையர்களுக்கு இதயத்தில் மகிழ்ச்சிதான். பாப்பாவுக்கோ அறிவு வளர்ச்சிதான். ஆண்களுக்கோ சிறு கண்ணோட்டம்தான். இள வட்டங்களுக்கு சினி விசிட்டில் ஒரு கவர்ச்சிதான்.

ஆனால், என் மனசுக்கு என்றும் வரப்பிரசாதம். பல்லாண்டு காலம் முரசு மலர என் வாழ்த்துக்கள்.

**கணேசன் கௌரி**
**தலாத்து ஓயா.**

இதயத்தின் ஒளி வீசும் தினமுரசே உன் சேவை தொடர எம் வாழ்த்துக்கள்

**சித்தி முப்பாஸா, பதுறுநிஸா**
**புதிய காத்தான்குடி-06.**

டியர் தினமுரசே....நீ அள்ளி வழங்கும் அத்தனை அம்சங்களும் என்னை தித்திக்க வைக்கிறது. அதிலும் 'கண்ணே மதுமிதா' வீறுநடை போடுகிறாள்.

**ஏ.சந்திரலேகா**
**மாபேரியதென்ன.**

அன்பின் தினமுரசு 'வாரம்லரே' நீ சுமந்து வரும் கண்ணே மதுமிதா என்ற தொடர் விறு விறுப்பாகச் செல்கின்றது. உனது சேவை என்றும் மலர எனது வாழ்த்துக்கள்.

**மு.ந.ஷர்மிளா**
**மூதூர்.**

'வாரமலரே' என் இனிய தினமுரசே....

உன் தேன் நிறைந்த ஆக்கங்களினால் என் போன்ற பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் உள்ளத்தை கொள்ளை கொண்ட உனை இட்டோம்! சிறையில் ஆம் எம் இதய சிறையில் நீ ஆயுள் கைதி.

**செல்வி.எஸ்.விஜி**
**கொழும்பு-14.**

எந்த பத்திரிகையிலும் இல்லாத ஒன்று அட ஏதோ.....உன்னிடம் இருக்கிறது. சிந்தனை எல்லாம் சிறகினை விரிக்க சிந்திடும் அம்சம் அதுவா அதுவா.... வண்ணத்தில் வந்து எண்ணத்தில் இனிக்கும் எழில் கோலங்கள் அதுவா அதுவா?........?

**சுல்பிகா ராசிக்**
**ராஜகிரிய.**

தினமும் நீ வந்து விடுவாயோ-என்
முகம் மலர-உன்
ரசனையை
சுடச்சுடத் தந்திடுவாயோ.

**கௌரி யோகராஜா**
**மதுரங்குளி.**

வியாழன் தோறும் விஜயம் செய்து எம் உள்ளங்களில் பாலை வார்த்ததைப் போல் இன்பத்தை ஊட்டி இணையில்லா இடத்தை பிடித்து விட்ட என் அபிமான தினமுரசுக்கு என் வாழ்த்துக்கள்.

**பெரியசாமி யோகநாதன்**
**வகுவப்பிட்டிய.**

என் உள்ளத்தை கொள்ளை கொண்ட கள்ளனே, உன் வரவுக்காக காத்திருப்பேன் கடையிலே, என் இதயத்தை ஆளும் அரசே, வெள்ளி தோறும் தவளும் தினமுரசே,

உன் வளமான வாழ்வுக்கு என் இதமான வாழ்த்துக்கள்

**சந்திரகலா**
**தலவாக்கலை.**

முரசு சுமைகளில் தாங்கும்,
சிறுகதைகள் பல விதம்
கவிதைகள் ஒரு விதம்
பாப்பா முரசு தனி விதம்
கண்ணே மதுமிதா வியக்கும் விதம்
சிந்தியா பதில்கள் புது விதம்
மொத்தத்தில் யாவுமுள்ள விதம்
எந்தனுக்கு நீயே சரி விதம்.

**எஸ்.மபாஹிரா ஷாபி**
**அளிசாவளை.**

தினமுரசே உன்னை 30.07.93 அன்றுதான் முதன் முதலில் பார்த்தேன். பார்த்த உடனே உன் மேல் காதல் கொண்டு விட்டேன். உன் ஆக்கங்கள் அனைத்தும் வெரி வெரி பைன். வாழ்க வளர்க என்றென்றும் என வாழ்த்துகின்றேன்.

**செல்வி நிஹாரா ஜுனைதீன்.**
**தெல்தோட்டை.**

என்னய்யா! போகிற போக்கைப் பார்த்தால் தமிழக பத்திரிகைகளையே விழுங்கி ஏப்பம் விடுவீர்கள் போல் தெரிகிறதே!

மனிதனின் நிழல் சிறுகதையில் உள்ள மிகச் சிறிய எழுத்துக்களை தவிர்க்கலாமே. தினமுரசின் வயது கூடிய வாசகர்களின் ரசனைக்கேற்ப-பார்வைக்கேற்ப செயற்படலாமே.

**மா.குமார்-திருகோணமலை.**

ஆக்கங்களை அதிகம் தரும் விருப்பமே எழுத்து சிறிதாகக் காரணம். இனிக் கவனிக்கலாம். (ஆ-ர்)

# இராணுவத் தளபாடங்கள் வடக்கில் இறக்கம்

## பாரிய இராணுவ நடவடிக்கைக்கு திட்டம் என்கிறது புலிகள் இயக்கம்!

# விமானங்கள் நோட்டமிடுகின்றன

யாழ் குடாநாட்டின் மீது பாரிய இராணுவ நடவடிக்கைக்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக புலிகள் அமைப்பினர் யாழ்ப்பாணத்தில் அறிவித்துள்ளனர்.

துருப்புக்களும், இராணுவத் தளபாடங்களும் வடக்கே கொண்டு வந்து குவிக்கப்படுவதாக புலிகள் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு, மன்னார் பகுதிகளில் இருந்து படையினர் யாழ் குடாநாட்டில் உள்ள இராணுவ முகாம்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டிருப்பதாகவும் அவர்கள் கூறியிருக்கின்றனர்.

பாதுகாப்புப்படை வட்டாரங் களோடு தொடர்பு கொண்டு கேட்ட போது கருத்துக் கூற அவை மறுத்துவிட்டன. மௌனம் சம்மதத்தின் அறிகுறியாக இருப்பதும் உண்டு.

இதே நேரத்தில் யாழ் குடா நாட்டில் விமானப்படை விமானங் களும் ஹெலிகளும் தாழ்வாகப் பறந்து நோட்டமிடுவதை அவதானிக்க முடிகிறது.

வசாவிளான், பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல் பகுதிகளில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் மீது சமீபத்தில் புலிகள் அமைப்பினர் எறிகணைத் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர். இராணுவத் தினரும் பதிலுக்கு ஷெல், பீரங்கித் தாக்குதல்களை நடத்தினார்கள்.

மண்டைதீவில் அமைந்துள்ள இராணுவக் காவலரண்கள் மீது தாம் தாக்குதல் நடத்தியபின் இராணு வத்தினர் நடத்திய பதில் தாக்குதலில் பொதுமக்களில் மூவர் காய மடைந்தனர், இரு வீடுகள் சேத மடைந்தன என்று புலிகளின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

இராணுவத்தினர் ஏவிய ஷெல் ஒன்று நல்லூர் கந்தசுவாமி கோயில் சுற்றாடல் பகுதியில் விழுந்துள்ளது.

யாழ்ப்பாணம் கொட்டடியில் விழுந்த ஷெல் ஒன்றினால் 4 பேர் காயமடைந்தனர்.

யாழ் குடாநாட்டில் பாரிய இராணுவ நடவடிக்கைகள் எப்போது ஆரம்பமாகப் போகின்றன என்பது உடனடியாகத் தெரியவில்லை. ஆனாலும் கூட தற்போதும் அங்கு யுத்தச் சூழ்நிலையே நிலவுகிறது.

## அகதிகளிடம் கெடுபிடி. திருமலையில் சோதனை!

இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பிய அகதிகள் திருமலையில் வந்து இறங்கினார்கள். சொந்த மண்ணில் காலடி வைத்த திருப்தி முகங்களில் தெரிந்தது.

நீண்டகாலம் தமிழ் நாட்டில் அகதிகளாகத் தங்கிவிட்டதால் அங்கிருந்து வரும்போது பெருந் தொகையான பொருட்களோடும் பொதிகளோடும் அகதிகளில் பலர் வந்திறங்கினார்கள்.

அகதிகள் தமது பொருட்களோடு சென்ற போது பொலிசார் இடையே மறித்து சோதனையிட்டனர். பொருட்களுக்கான பற்றுச்சீட்டுக்களை பொலிசார் கேட்கவும் அகதிகள் செய்வதறியாது திகைத்துப் போயினர். எல்லாவற்றுக்கும் எப்படி பற்றுச் சீட்டு கொண்டுவந்திருக்க முடியும்?

அகதிகள் என்பது தெரிந்தமையால் பொலிசார் அனுசரித்து நடந்து கொண்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு நடந்து கொண்டதாகத் தெரியவில்லை. சில பொருட்கள் பறிமுதலானதாகவும் அகதிகளில் சிலர் கவலை தெரிவித்தனர். ஆனால் இது மேலதிகாரிகளுக்கு தெரிந்து நடக்கவில்லை என்றும் கூறப்படுகிறது. அப்படியானால் பொருட்கள் போனது எங்கே?

சிலரது சொந்தத் தேவைகளுக்காக அகதிகள் சோதனைக்கும் வேதனைக்கும் உள்ளானார்களா? மேலதிகாரிகள் இவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

## கட்டிமுடித்தால் போதுமா? கவனிக்க வேண்டாமா? திரும்பிப் பார்க்கப்படாத பேருந்து நிலையம்!

(நிந்தவூர் நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் முக்கிய பட்டினங்களுள் ஒன்றான சம்மாந்துறையில் இயங்கிவந்த பஸ் நிலையத்தையே இங்கு படத்தில் காண்கிறீர்கள்.



கிழக்குப் பிராந்திய போக்குவரத்து சபை இயங்கிய கால கட்டத்தில் இங்கு பஸ் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு இயங்க வேண்டியதன் அவசியம் உணரப்பட்டதால் உருவான இந்த பஸ் நிலையம் சில வருடங்களாக கைவிடப்பட்டு இன்று இந்த அவலநிலையில் தூங்கிக் கொண்டிருப்பதுடன், ஆடு மாடுகளின் உறைவிடமாகவும் மாறியிருக்கின்றது.

பஸ் வண்டிகள் புறப்பட்டுச் செல்வதற்கான 'கியூ' வரிசைகளின் முன்னால் கல்முனை, நெய்னாகாடு, கொழும்பு, போன்ற இடங்களின் பெயர்ப்பலகைகள் இன்னும் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

இந்த பஸ் நிலையக் கட்டிடத்தின் இன்றைய அவல நிலையையிட்டு மக்கள் கவலை தெரிவிப்பதுடன், சம்பந்தப்பட்டவர்கள் இந்த பஸ் நிலையத்தை மீண்டும் இயங்கச் செய்ய முன்வரமாட்டார்களா? என்றும் அங்கலாய்க்கின்றனர். கவனிக்க வேண்டிய கண்கள் திறக்குமா? காரியம் நடக்குமா?

## வருஷாபிஷேக உற்சவம் வெகுசிறப்பான ஏற்பாடுகள்!

குருணாகல் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயிலின் வருஷாபிஷேக உற்சவமும் நகர் உலாவும் இம்முறை வெகு சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் நடை பெற்றுள்ளன. இம்மாதம் இருபத்து ஏழாம் திகதி விசேட பூசையுடன் ஆரம்பமான உற்சவம், புரட்டாதி ஐந்தாம் திகதி நகர் உலாவுடனும், மறுநாள் வைரவர் மடை, அன்ன தானத்துடன் நிறைவுபெறும்.

ஏறக்குறைய நூற்று இருபது வருடங்கள் பழமை வாய்ந்த இவ்வாலயத்தின் உற்சவத்தினை "வேதாகமக் கிரியை பிரதிஷ்டா சிரோன்மணி" சாமி விஸ்வநாதக் குருக்கள் வெகு சிறப்பாக நடத்தவுள்ளார். இப்பகுதியில் வாழ் இந்து, பௌத்த, முஸ்லிம் அடியார்கள் அனைவரினதும் ஒத்துழைப்புடன் இவ் உற்சவம் நடைபெறுகிறது.

குருணாகலையூர் ரமேஷ்–

## சட்டத்தரணிகளுக்கு கட்டணம் வாங்க கட்டுப்பாடு! புலிகளின் நீதிமன்றங்கள் யாழில் ஆரம்பம்!

(யாழ் நிருபர் வர்மா)

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் புலிகள் அமைப்பினரின் கட்டுப் பாட்டில் உள்ள பகுதிகளில் 'நீதிமன்றங்கள்' உருவாக்கப் பட்டுள்ளன.

"தமிழீழ நீதிமன்றங்கள்" என்று அவற்றிற்கு பெயரிடப்பட்டுள்ளது.

முதலாவது நீதிமன்றம் யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் இரு வழக்கு களும் விசாரிக்கப்பட்டன. அத்தோடு 40 சட்டத்தரணிகள் புலிகள் அமைப்பின் அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலன் முன்னி லையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். புலிகள் அமைப்பின் தலைமைத்துவத்திற்கும், பிரபாகர னுக்கும் விசுவாசம் தெரிவிக்கும் வாசகங்கள் சத்தியப் பிரமாணத்தில் இடம்பெற்றிருந்தன.

புலிகள் அமைப்பின் நீதி-நிர்வாகப் பிரிவுக்கு பரராஜசிங்கம் பொறுப்பாக இருக்கிறார். இவர் முன்னாள் ஈரோஸ் அமைப்பின் தலைவர்களில் ஒருவர்.

செய்தியாளர்களுக்கு தமது 'நீதிமன்ற' நடவடிக்கைகள் பற்றி பரராஜசிங்கம் விளக்கமளித்தார்.

'உலக அளவில் பார்க்கும் போது குற்றவாளிகளும் நிரபராதிகள் ஆகும் நிலை ஏற்படுகிறது. இங்கு அப்படி ஏற்படாது. எமது சட்டங்கள் யாவற் றையும் பிரபாகரன் உருவாக்கி யுள்ளார். எமது நீதிமன்றங்களில் வாதிடும் சட்டத்தரணிகள் பணம் பெறுவதாக இருந்தால் நூற்றி ஐம்பது ரூபாய்க்கு மேல் பெறமுடியாது என்று அவர் விளக்கினார்.

## மட்டக்களப்பில் விசர் நாய்கள் தாண்டவம்! தடுப்பூசி போட வேண்டியவர்கள் எங்கே?

மட்டக்களப்பில் விசர்நாய்க் கடி அதிகரித்துள்ளது. கடந்த மூன்று வருடங்களாக நாய்களுக்கான தடுப்பூசி போடப்படவில்லை என்று கூறப்படுகிறது.

வன்செயல்களால் பெரும்பாலான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். அவர்கள் இடம் பெயர்ந்து சென்றுவிட உணவின்றித் தவிக்கும் நாய்களுக்கு விசர் பிடித்துவிடுகிறது.

1989இல் 375 பேரும், 91இல் 550 பேரும், 92 இல் 625பேரும் விசர்நாய்க் கடியால் பாதிக்கப்பட்டனர். இவ்வருடம் பாதிக்கப்பட்டவர்கள் தொகை மேலும் கூடுதலாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

## ஸ்ரீ ராகவேந்தர் விழா

ஸ்ரீ ராகவேந்திரர் சுவாமி களின் பிருந்தாவன பிரவேச தினம் கொழும்பில் கொண்டாடப் படுகிறது.

செப்டெம்பர் 3ம் திகதியன்று கொழும்பு இந்துக்கல்லூரியில் நடைபெறும். நிறைவுநாள் நிகழ்ச்சியில் திருமதி லட்சுமிதேவி பாலகிட்ணர், திருமதி தேவகி பிரதீப் ஆகியோர் இன்னிசைக் கச்சேரி வழங்கவுள்ளனர்.

## கவலைக்கிடமான வைத்தியசாலை கண்டவர் அதிர்ந்தனர்! கவனிப்பதாகக் கூறினர்!!

பொத்துவில் வைத்திய சாலையை உடனடியாக திருத்தி யமைப்பதோடு, இந்த வைத்திய சாலையின் தரத்துக்கேற்ற சகல வசதிகளையும் செய்து கொடுக்கு மாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

அண்மையில் பொத்துவிலுக்கு விஜயம் செய்த ஸ்ரீலங்கா மும் காங்கிரஸ் தலைவரும் இந்த மாவட்ட எம்.பியுமான ஜனாப் எம்.எச்.எம்.அஷ்ரப் தலைமை யிலான முஸ்லிம் காங்கிரஸ் உயர்குழு இந்த வைத்திய சாலையைப் பார்வையிட்டது. டாக்டர் ஏ.எஸ்.அமீனுதீன் தூதுக்குழுவுக்கு வைத்திய சாலையின் அவல நிலையை எடுத்து விளக்கினார்.

35,000 மக்களைக் கொண்ட பொத்துவில் பிரதேசத்துக்குள்ள ஒரேயொரு வைத்தியசாலையான இதன் கவனிப்பாரற்ற நிலையைக் கண்டு அதிர்ச்சி அடைந்த தூதுக்குழுவினர் இந்த அவல நிலையை அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்து உடன் உரிய நடவடிக்கை எடுக்கவைப்பதாக உறுதியளித்தனர்.

## இந்து, முஸ்லிம் ஒற்றுமைக்கு ஒரு விழா! மிரட்டலை மீறி அயோத்தியில் சாதனை!

இந்தியாவின் மத ஒற்றுமைக்கு சவால் விட்ட நிகழ்வுதான் அயோத்தியின் பாபர் மசூதி இடிப்பு.

மத ஒற்றுமையையும், மக்களின் ஐக்கியத்தையும் விரும்பும் சக்திகள் கடுமையாகக் கண்டித்த நிகழ்வு அது.

சமீபத்தில் அயோத்தியில் புது டில்லியைச் சேர்ந்த சப்தர் ஹாஸ்மி கலைக்குழுவினர் கலை நிகழ்ச்சிகளை நடத்தினார்கள்.

இந்து மதவாத அமைப்பான விஸ்வ ஹிந்து பரிஷத் விடுத்த மிரட்டலையும் மீறி விடிய விடிய கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

46 ஆண்டுகளுக்கு முன்னர் அயோத்தியில் நேருஜி ஆற்றிய உரையின் ஒரு பகுதி ஒலிபரப்பப்பட்டது. இந்தியப் பிரதமராக பதவி வகித்த அமரர் நேரு "விதியுடன் ஓர் ஒப்பந்தம்" என்ற வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த உரையின் ஒரு பகுதியே அதுவாகும்.

இந்தியாவெங்கும் இருந்து வந்திருந்த முன்னணிக் கலைஞர்கள் தங்கள் அபாரமான திறமையை வெளிப்படுத்தினார்கள்.

மத சார்பின்மை, வகுப்புவாத எதிர்ப்புக் கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டன.

4ஆயிரம் பொலிசார் பாதுகாப்பில் ஈடுபட்டனர்.

அமைச்சர் அர்ஜுன் சிங்கும் கலை நிகழ்ச்சி காண வந்திருந்தார்.

## செயற்கை மழைக்கு செல்வி உத்தரவு! தலைக்கு மேலே தொங்கும் வாள் இறங்குமா?

(தமிழகத்திலிருந்து ஏழுமலை)

தமிழ் நாட்டில் ஜெயலலிதா எத்தனை காலம்தான் முதல்வராக நீடிக்கப் போகிறாரோ என்ற சந்தேகம் தொடர்ந்து நிலவுகிறது.

முதலில் ஜெயலலிதாவின் பிடிவாதப் போக்குகளுக்கு விட்டுக் கொடுத்த மத்திய அரசு இப்போது கொஞ்சம் கடுமை காட்டத் தொடங்கியிருக்கிறது.

காவேரி நீரை தமிழகத்துக்கு கொண்டு வரும் விடயத்தில் மத்திய அரசுக்கு அதிர்ச்சி ஏற்படுத்த நினைத்தார் ஜெயலலிதா.

சாகும் வரை உண்ணாவிரதம் என்று அறிவித்துவிட்டு பிரதமரிடம் இருந்து நேரடியாக செய்தி வரும் என்று காத்திருந்தார்.

பிரதமர் வாய்திறக்கவில்லை. தனது அமைச்சர் ஒருவரையும் தமிழக ஆளுநரையும் அனுப்பியே உண்ணா விரதத்தை முடிக்கச் செய்துவிட்டார்.

உண்ணாவிரதப் போராட்டம் ஜெயலலிதா சொல்வது போல வெற்றியல்ல. தோல்விதான் என்று தி.மு.க.தலைவர் மு.கருணாநிதி கூறியிருக்கிறார்.

ஜெயலலிதா உண்ணாவிரதம் இருந்த போது மழை பெய்தது. வானம் கண்ணீர் சிந்துவதாக அவரது ஆதரவாளர்கள் சொல்லிக் கொண்டார்கள்.

வானம் கண்ணீர் சிந்தியதோடு சரி. காவேரித் தண்ணீர் மட்டும் இன்னும் வரவேயில்லை.

ஆகஸ்ட் 19ம் திகதி நடைபெறவிருந்த



பழனி மற்றும் ராணிப் பேட்டை இடைத் தேர்தல்களும் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டு விட்டன.

பிரச்சாரத்திற்கு ஹெலிகாப்டரில் போய் இறங்கிய இடத்தில் தேர்தல் தள்ளிவைப்பு செய்தி கிடைத்தது.

இந்திய தேர்தல் ஆணையாளர் சேஷன் ஒரு பொல்லாத ஆள். அரசின் அனுமதிக்குக் கூட காத்திராமல் திடீர் முடிவுகளை எடுத்து விடுவார்.

தேர்தல் தள்ளிவைப்பு ஜெயலலிதாவை சினமூட்டியிருக்கிறது.

இதற்கிடையே காங்கிரஸ் கட்சி பின்கத வால் உறவு கொள்ளப் பார்க்கிறது என்று தமிழக அமைச்சர் எஸ்.டி.சோமசுந்தரம் ஒரு அறிக்கை விட்டார்.

அது முழுப்பொய் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் திரு வாழப்பாடி ராமமூர்த்தி மறுத்துள்ளார்.

தமிழ் நாட்டுக்கு நிலக்கரியை இறக்குமதி செய்ய தமிழக அரசு முடிவு செய்தது. அவ்வாறு செய்யக்கூடாது என்று மத்திய அரசு கண்டித்திருக்கிறது.

வெறுப்பேறிப்போன ஜெயலலிதா 1 1/2 கோடி ரூபாய் செலவில் அமெரிக்க தொழில் நுட்ப உதவியுடன் தமிழகத் தலைநகரான சென்னைக்கு செயற்கை மழை கொண்டு வரும் உத்தரவில் கையெழுத்திட்டுள்ளார்.

எதிரும் புதிருமாக மத்திய-மாநில அரசுகள் செயல்படும் நிலையில் தமிழக முதல்வரின் தலைக்கு நேரே ஆட்சிக்கலைப்பு அச்சுறுத்தல் என்னும் வாள் இப்போதும் தொங்கிக் கொண்டிருக்கிறது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

### சிறு விளம்பரப் பகுதி

தேவை

கொழும்பிலுள்ள சலவை நிலையம் ஒன்றுக்கு ஸ்திரி போடுவதில் அனுபவம் உள்ள, காசாளராகவும் பணியாற்றக்கூடிய ஒருவர் தேவை. உரிய சான்றிதழ்களுடன் விண்ணப் பிக்கவும். அல்லது நேரில் வரவும்.

Doyle's Quick Cleaners
No.3, 1st Chapel Lane,
Colombo -6

## ஒரு வீதி நதியாகிறது!

**(கிண்ணியா நிருபர்)**

கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவின் 3ஆம் வட்டாரம், "ஹிஜ்ரா வீதி" நீண்ட வருடகாலமாக எவ்விதமான திருத்தப் பணி வேலைகளும் மேற் கொள்ளப் படாது கவனிப்பாரற்ற நிலையில் உள்ளது.


மாரி காலத்தில் இவ்வீதி நீர் நிரம்பி ஒரு நதியாக காட்சியளித்துக் கொண்டிருக்கும். மாரித் தவளையின் பேரிரைச்சலையும் கேட்கலாம்.

கோடை காலத்தில் இவ்வீதி ஒரு பாலைவனமாகவே தோற்றமளிப்பதுமுண்டு.

கோடை காலத்தில் இவ் வீதியில் காற்றினால் தூசி வீசப்படுவதாகவும், இதனால் பெரும் நோய்த் தாக்கங்களினால் குடியிருப்பாளர்கள் மிகவும் கஷ்டத்திற்குள்ளாவதாகவும் ஜனாப் ஜிப்ரி (ஆசிரியர்), ஜனாப் எம். மாஹீர், எமது நிருபரிடம் கருத்து தெரிவித்தனர்.

எனவே மேற்படி வீதி குடியிருப்பாளர்களின் விதியை மாற்ற உயர் மட்ட அதிகாரிகள் உரிய காலத்தில் நடவடிக்கை மேற் கொள்ள ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றனர்.

**கவிஞர் ரீ.எல். ஜவ்பர்கானின் "ரணங்கள்" நூல் வெளியீட்டு விழாவில் சிறப்புப்பிரதியை காத்தான்குடி - பூ நொச்சிமுனை வித்தியாலய முதல்வர்-ஏ.எல்.எம். சித்தீக் பெறுவதையும், மேடையில் வட-கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் திரு சி. பற்குணம், விரிவுரையாளர் பால.சுகுமார், கவிஞர் சாந்தி முகைதீன் ஆகியோர் இருப்பதையும் காணலாம். (படம் - காத்தான்குடி நிருபர்)**



## வரவேற்கவிருந்தனர் - வரமுடியவில்லை!

(கண்டி நிருபர்)



மலையக மக்கள் முன்னணியின் தலைவரான திரு.எஸ். சந்திரசேகரன் மத்திய மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்டவர். அவர் தற்போது தடுப்புக்காவலில் உள்ளமையால் அவரால் மாகாண சபை உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்ய முடியவில்லை. தடுப்புக்காவலில் இருந்து சத்தியப்பிரமாணம் செய்வதற்கு அவருக்கு முதலில் அனுமதி கிடைத்தது. செய்தியறிந்த ஆதரவாளர்கள் மத்திய மாகாணசபைக்கு வெளியே வரவேற்கக் காத்திருந்தனர். ஆனால் நீதி மன்றம் முடிவை மாற்றிக் கொண்டதால் திரு.சந்திரசேகரன் வர முடியவில்லை. காத்திருந்தவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினார்கள்.

## தபாலட்டை தட்டுப்பாடு!!

அக்கரைப்பற்றுப் பிரதான தபாலகத்தில் கடந்த ஒரு வருடமாக தபாலட்டையே வாங்க முடிவதில்லை. கேட்டால் இன்று வரும் நாளைவரும் என்கிறார்கள். இப்போது பத்திரிகை, வானொலிகளில் போட்டிகளுக் கெல்லாம் தபாலட்டையில் அனுப்புவதையே சேர்க்கின்றனர். எனவே இத் தபாலகத்தின் தபாலட்டைப் புறக்கணிப்பால் எங்கள் திறமைகள் மழுங்கடிக்கப்படுகின்றன.

**மா.யோகராஜன்**
**அக்கரைப்பற்று-08.**

## வெல்லத் தமிழ் மெல்லத் தேய்க்கிறதோ?

**விந்த இடத்தில் வாரும் பொது கொண்டு வாரும் பொஷது சாமான்கன் தாங்கவே பொருப்பாலி நெந்த காரனதது கொடும் ஆந்த சமன் இந்த காதவில வகுவேருககு வேல் வோக வெருக் தொடுமாகலுக வேன்டம்**

மேலே குறிப்பிடப்பட்டதை வாசிக்கத் தலை சுற்றுகிறதா? தமிழ் மொழியும் அரசகரும மொழியாக அங்கீகரிக்கப்பட்ட ஸ்ரீலங்கா நாட்டின் தலை நகரான கொழும்பு மாநகரில் நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்த மக்கள் வந்து செல்லும் கொழும்பு மத்திய பஸ் நிலையத்தில் அமைந்துள்ள மலசல கூட வாசலில் தொங்கும் அறிவித்தல் பலகையில் உள்ள புதிய "தெமில பாஷே" அறிவிப்பு.

தமிழில் அறிவித்தல் போடாவிட்டாலும் சிங்களமோ ஆங்கிலமோ வாசிக்கக் கூடிய 75 சதவீதம் தமிழ் பேசும் மக்கள் வாழும் தலை நகரில் தமிழ் மொழிக்கு ஏற்படும் அவலத்தை இதற்குப் பொறுப்பானவர்கள் கவனிப்பார்களா?

**பங்கஜா தவயோகநாதன்**
**நிந்தவூர்.**

## புகார் பெட்டி

## எடுத்துச் சொல்லியும் கிடைக்காத உதவிகள்

1985ம், 1990ம் ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட வன்செயல்களினால் எல்லைக் கிராமமாகிய கறுவாக்கேணி கடுமையாக பாதிக்கப்பட்டது. ஆனால் இது வரை கீழ் குறிப்பிடும் அரச நிவாரண உதவிகள் கிடைக்கவில்லை.

1. மீள் குடியேற்ற நிதி
2. தொழில் இழப்பு நிதி
3. மானிய வீடுகள்
4. வீதிப்புனரமைப்பு

இவை பற்றி அரச அதிபர், புனர்வாழ்வு அமைச்சர் வீடமைப்பு, ராஜாங்க அமைச்சர் ஆகியோருக்கு பல தடவைகள் தெரிவித்தும் ஏதும் நடைபெறிவில்லை. சனசக்தி நிவாரணம் பெற்றுவரும் இக்கிராம மக்கள், படும் கஷ்டம் சொல்லுந்தரமன்று. மட்டக்களப்பு தேசிய வீடமைப்பு அதிகார சபையும், இது விடயமாக மௌனம் சாதிப்பது ஏன் என்று தெரியவில்லை. இரண்டு தடவைகள் ஜனாதிபதி இடம் பெயர் சேவையின் போது மகஜர்கள் கையளித்தும் பலனேதும் கிடைக்க வில்லை. எனவே தயவு செய்து இந்த அதிகாரிகள் உடன் மனிதாபிமான உணர்வோடு நடவடிக்கை எடுப் பார்களா?

**முத்துமாதவன்.ஜே.பி**

## விரயமாகும் மின்சாரம் பகலில் எரியும் மின்விளக்குகள்!

கல்முனைக்குடி வீதிகளில் உள்ள மின்கம்பங்களில் பொருத்தப்பட்டுள்ள அனேக மின் விளக்குகள் பகலிலும் எரிந்து கொண்டிருக்கின்றன.

இரவில் மின் ஒளி பரப்பும் மின் விளக்குகள் பகலில் அணைக்கப் படாதது ஏன் என்பது புரியாத புதிராகவே இப்பகுதி மக்களுக்கு உள்ளது.

மின் பாவனையாளர்களுக்கு அவ்வப் போது பல சட்ட திட்டங்களை விடுக்கும் இலங்கை மின்சார சபை ஏன் இவ்விதம் மின்சாரத்தை வீண் விரயம் செய்கிறது? அதிகாரிகளின் அசட்டையா? ஊழியர்களின் உறக்கமா?

**எம்.சி.கலீல்**
**கல்முனை-05.**

## தீருமோ இந்தக் குறை

ஊவா மாகாணத்தில் பசறை தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள ஹொப்டன் அம்பலாங் கொட தோட்டத்தில் பல ஆண்டு காலமாக மல்சல கூடம் வசதியில்லாமல் இத்தோட்ட மக்கள் பெரும் இன்னல்களை அடைந்து வருகிறார்கள்.

ஆகவே இம்மக்களின் குறையை தீர்த்து தருவதற்கு எமது அதிகாரிகள் கவனம் செலுத்து வார்களா?

**எஸ்.பி.சந்திரகுமார்**
**ஹொட்டன்.**

## பொகவந்தலாவை பொலிவூட்டப்படுமா?

சுமார் ஐம்பதாயிரம் மக்கள் வாழ்கின்ற பிரதேசத்தின் மத்தியில் பொகவந்தலாவ நகரம் அமைந்துள்ளது. இந்த நகரம் சுமார் நூறுவருடங்களர்க எவ்விதமாற்றமுமின்றி பழைமை பேணி வருகின்றது. இலங்கையின் முக்கிய அரசியல் வாதிகள் இந்த நகரத்தினுள் காலடி எடுத்து வைத்துள்ளார்கள்.

இந்நகரத்தில் வாசிகசாலை ஒன்றில்லை. ஒழுங்கான மலசலகூட வசதி இல்லை. மழைகாலங்களில் நகர பிரதானவீதியில் நடப்பதை தவிர்த்து நீச்சலடித்துத்தான் செல்ல வேண்டும். பாதையில் குழியும் பள்ளமாகவும் உள்ளது. நகரத்தின் பிரதான நுழைவாயில் பாலம் உடையும் தறுவாயில் தொடுத்துக் கொண்டிருக்கிறது. நகரின் பிரதான கால் வாய்கள் ஒழுங்காக திருத்தப்படுவதும் இல்லை. இத்தைத்தவிர நகரத்தினுள் கடாக்களின் (ஆடு) தொல்லை வேறு. இவ்வாறாக பொகவந்தலாவ நகரம் பிரச்சனைகளின் முழு உருவமாக காட்சியளிக்கிறது.

இங்குள்ள கிராமோதய சபை, பிரதேச சபை என்பன வெறும் சபைகளாக மட்டுமே உள்ளன. பொறுப்பானவர்கள் இந்நகரத்தின் தேவைகளை உணர்வார்களா? ஏங்குவது நான் மட்டுமல்ல இப்பிரதேசத்தின் மக்களும் தான்.

**சோ.ஸ்ரீதரன்-பொகவந்தலாவை.**

## குறுக்கெழுத்துப் போட்டி இல-13

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | ■ | 2 | 3 |
| | 4 | 5 | ■ | 6 | | |
| | | | 7 | | | |
| 8 | | | | ■ | | |
| | ■ | | | ■ | | |
| | 9 | | | | ■ | ■ |
| | | ■ | | ■ | 10 | |

**இடமிருந்து வலம்**

1. தீவிரவாதிகள் இதனை ஏற்றுக் கொள்வதில்லை.
2. கம்பிகளுக்குப் பின்னால் இருப்பவர்கள்.
6. இசையில் ஓர் அங்கம். (வலமிருந்து இடமாக உள்ளது)
7. பாட்டில் இதுவும் வரும்.
8. தற்காப்புக்கு இதுவும் தேவை.
9. தேவர்களின் எதிரி.
10. இது மிரண்டால் காடு கொள்ளாது.

**மேலிருந்து கீழ்**

1. கலைஞர்கள் அறிமுகமாகும் முதலிடம்.
2. மோதல்களில் இதுவும் ஒருவகைதான்.
3. இந்தப் பெயரில் ஒரு திரைப்படமும் வந்திருக்கிறது.
4. ஆண்டிகள் தங்குமிடம் (குழம்பியுள்ளது)
5. கண்ணதாசனை இப்படியும் அழைப்பதுண்டு.
7. 'சின்னக்கவுண்ட'ரில் இது சம்பந்தப்பட்ட காட்சி மிகவும் பிரபலம்.
9. இதுபட்டால் தான் சிலருக்குப் புத்திவரும் என்பார்கள்.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டை ஒன்றில் மட்டும் வெட்டி ஒட்டி 4.9.93 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல.-13**
**தினமுரசு வாரமலர்**
**88/14, சோமாதேவி பிளேஸ்,**
**கிருலப்பனை**
**கொழும்பு-05.**

**சரியான விடையை எழுதி அனுப்பும் பத்து அதிஷ்டசாலிகளுக்கு பரிசுப்பணம் ரூபா 500/- பகிர்ந்தளிக்கப்படும்.**

### குறுக்கெழுத்துப் போட்டி இல-11க்கான சரியான விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 கு | ங் | கு | 2 ம | ம் | ■ | 3 ம |
| ஷ் | 4 பி | 5 ர | தி | ■ | 6 வ | ரி |
| 7 பூ | ச் | சி | ய | ம் | ■ | யா |
| ■ | சை | க | ம் | ■ | 8 சீ | தை |
| 9 டி | ■ | ன் | ■ | 10 நா | ய் | ■ |
| கு | 11 தி | ■ | 12 பி | ண | க் | 13 கு |
| 14 ம | னை | வி | ■ | ல் | ■ | கை |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.11இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. நயினார் சிவசுப்பிரமணியம் தலவாக்கலை.
2. திருமதி வள்ளியம்மா கலஹா.
3. சுபைர் எம். கலீல் திருகோணமலை.
4. எம்.எச்.எம். இஷ்ராம் புத்தளம்.
5. முஹம்மத் ரிபான் கண்டி.
6. எஸ். நிரஞ்சனா மட்டக்களப்பு.
7. வி. ரட்ணகுமார் நீர்கொழும்பு.
8. ஆர். எஸ். இர்பான் கண்டி.
9. கே. நிர்மலா மொரட்டுவ.
10. என். அமால்டீன் பேருவளை.

இந்த அதிஷ்டசாலிகளுக்கு பரிசுப்பணம் ரூபா 500/= பகிர்ந்தளிக்கப்படும்.

## பருவகாலச் சீட்டைக் காட்டினால் புருவம் உயர்த்தி சீறுகிறார்கள்!

கண்டியிலிருந்து நுவரெலியாவிற்குச் செல்லும் இ.போ.ச. பஸ்கள் (கெப்படிப் பொல டிப்போவைச் சேர்ந்தவை) பாடசாலை மாணவர்களை அறவே ஏற்றுவதில்லை. அவை மக்கள் மயமாக்கப்பட்ட பஸ்கள் தானே ஏன் நிறுத்துவதில்லை என்றே தெரியவில்லை. மாணவர்கள் மாதாந்த பருவச்சீட்டினைப் பயன்படுத்தியே பாடசாலை சென்று வரவேண்டியுள்ளது. ஆகையால் வெதமுள்ள என்ற இடத்திலிருந்து சுமார் பதினேழு மைல் தூரம் சென்று புசல்லாவை க/சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவனான நான் காலையில் செல்லும் போது மட்டும் பஸ்சில் ஏற்றுகிறார்கள். ஆனால் பாடசாலைவிட்டு வரும் போது எந்த வொரு இ.போ.ச பஸ்வண்டியும் நிறுத்தப்படுவதில்லை. இவ்வாறிருந்தால் நானும் என் போன்ற மாணவர்களும் எவ்வாறு கல்வி கற்பது? நான் சில பஸ்களில் ஏறியும் என்னை சீசன் எடுப்பதில்லை என்று கூறி சிறிது தூரம் சென்றவுடனும் இறக்கிவிட்டிருக்கிறார்கள். பருவச் சீட்டும் பணம் கொடுத்து வாங்கியது தானே. ஏன் அதை ஏற்க மறுக்கிறார்கள்...? இதற்கு இ.போ.ச. ஒரு முடிவைத் தரும் என்று எதிர்பார்க்கிறேன். என் முரசு கேட்காவிட்டாலும் தினமுரசு கேட்கும் என்று எதிர்பார்க்கும் இவன்-

**கந்தையா விநாயகமூர்த்தி- வெதமுள்ள.**

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

—நாரதர்—

# உள்ளூராட்சித் தேர்தல்களின் உள்நோக்கம் என்ன?

இனப்பிரச்சனை என்பதே இலங்கையில் கிடையவே கிடையாது என்று நமது ஜனாதிபதியின் செயலாளர் எழுதிய கடிதம் உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் ஆச்சரியங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

ஜனாதிபதியின் செயலாளர் திரு. கே.எச்.ஜெ. விஜயதாச நேற்றுத்தான் பதவிக்கு வந்த புதியவரல்ல. மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் பதவிக் காலத்தில் இருந்தே செயலாளராக இருப்பவர். அறிவுபூர்வமானவர். அனுபவம் வாய்ந்தவர். அப்படிப்பட்டவரிடமிருந்து இப்படிப்பட்ட கடிதம் ஒன்று எப்படி வந்தது என்பது ஆச்சரியத்தை மேலும் அதிகப்படுத்தியிருக்கிறது.

இனப்பிரச்சனை தீர்வில் இதய சுத்தியோடு அக்கறையுள்ளவர்கள் அதிருப்தியடைந்துள்ளார்கள்.

முன்னரும் இவ்வாறான கருத் துக்கள் தெற்கில் இருந்து எழுந்த துண்டு.

திரு.ஜே.ஆர் ஜெயவர்த்தனா ஜனாதிபதியாக இருந்தபோது, தமிழர்களுக்கு கொடுக்க வேண்டியதையெல்லாம் கொடுத்துவிட்டேன். இனிக்கொடுப்பதற்கு எதுவும் இல்லை என்று கூறியிருந்தார்.

அதன் பின்னர் அவரே முன்னின்று இலங்கை, இந்திய ஒப்பந்தத்தை உருவாக்கினார்.

இனப்பிரச்சனை தீர்வில் இந்தியா கொண்டிருந்த ஈடுபாடும் அந்த ஒப்பந்தம் உருவாக முக்கிய காரணமாக இருந்தது.

வெளியார் தலையீடுகளை எந்தவொரு நாடும் விரும்புவதில்லை.

ஆனால் தமிழருக்கு இனிக் கொடுப்பதற்கு எதுவும் இல்லை என்று கூறிய திரு.ஜே.ஆர். ஜெயவர்த்தனா மாகாண சபை மூலமான ஒரு தீர்வுக்கு முன்வரக் காரணமாக இருந்தது இந்தியாதான் என்பதை மறந்துவிட முடியாது.

நாங்கள் புத்திசாலிகளாக இல்லாதபோது அடுத்தவர் வந்து புத்திசொல்ல வேண்டியேற்படுகிறது. புத்திசொல்ல வருகின்றவர்களை குற்றம் சொல்வதை விடவும் அடுத்தவர் வந்து புத்திசொல்ல வேண்டிய தேவை இல்லாமல் நாம் நடந்து கொள்ள வேண்டும்.

ஆனால், இனப்பிரச்சனையே இங்கில்லை என்று முற்றாக மறுப்பதானது உள்நாட்டுக்குள் பிரச்சனைக்கு தீர்வுகாண்பதற்கான அடிப்படைகளையே உடைத்துப் போட்டு விடுகிறது.

அம்புலியைக் காட்டி பிள்ளைக்கு சோறூட்டுவதைப் போல, புலியைக் காட்டி கவனத்தை திசைதிருப்ப முயல்வது எவ்வகையிலும் எரியும் பிரச்சனைக்கு தீர்வுகாண உதவாது. சர்வதேச சமூகம் கூட அதனால் திருப்தியடையப் போவதில்லை.

புலிகள் தமது விவேகமற்ற செயல்பாடுகளால் வெளியுலக அபிப்பிராயத்தை தமக்கெதிராக உருவாக்கியுள்ளார்கள்.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை, இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா கொலை போன்றவற்றை வெளிநாட்டு ராஜதந்திரிகள் அப்பட்டமான பயங்கரவாதச் செயல்பாடுகளாகவே நோக்குகின்றனர்.

கொல்லப்பட்ட இரு தலைவர்களும் இலங்கைத் தமிழர்களின் முற்று முழுதான எதிரிகளாகக் கருதப்பட்டவர்களல்ல.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு புலிகளோடு பேசும் விருப்பம் இறுதிவரை இருந்தது என்றே கூறப்படுகிறது. தான் கலந்து கொண்ட இறுதிக்கால தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில். கூட அவர் புலிகளைக் கண்டிப்பதை விடவும், இனப்பிரச்சனை உருவாக காரணமாக இருந்தவர்கள் என்று எதிரணியினர் மீதே கண்டனம் வெளியிட்டார்.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி பிரதமராக இருந்த காலத்தில் திரு.பிரபாகரனுக்கு குண்டுதுளைக்காத சட்டை ஒன்றை பரிசளித்தார் என்றும் பேசப்பட்டது.

தவிர இலங்கையில் தமிழர்கள் மத்தியிலும் இரு தலைவர்களும் பெரிய விரோதத்தை சம்பாதித்துக் கொண்டவர்கள் என்று கூறிவிட முடியாது.

எனவே, அவர்கள் கொல்லப்பட்டமையானது புலிகள் அமைப்பினர் சமாதானத் தீர்விற்கான சூழல் ஒன்றை தோற்றுவிப்பதில் நாட்டம் கொண்டவர்கள் அல்ல என்ற நினைப்பையே உருவாக்கியிருக்கிறது.

வெளியுலக அபிப்பிராயத்தை தனக்குச் சாதகமாக்க அரசு முனைவது தவறல்ல. ஆனால் அந்த முயற்சி எரியும் பிரச்சனையை புலிப் பிரச்சனை என்ற திரையால் மறைக்கும் முயற்சியாக மாறக்கூடாது.

புலிகளுக்கு எதிரான போரில் வெற்றிபெறுவதே அரசின் குறியாக இருக்கிறது.

அரச படைகளை தோற்கடித்து தமது வெற்றியை நிறுவிக் கொள்வதே புலிகளின் இலக்காக இருக்கிறது.


ஆனால் இரு தரப்பினருமே தங்களைத் தாங்களே தனிமைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மக்களின் மனங்களை வென்றெடுப்பதிலும், தமக்குரிய நேச சக்திகளை இனம் கண்டு இணைந்து செல்வதிலும் இரு தரப்புமே அக்கறை கொள்ளவில்லை.

புலிகளின் தரப்பில் ஆயிரம் தவறுகள் இருக்கலாம். ஏனைய தமிழ் அமைப்புக்கள் கூறுவது போல புலிகளின் நோக்கம் தமது இயக்கத்தின் மேலாதிக்கத்தை நிலைநாட்டும் இலக்காக இருக்கலாம்.

ஆயினும், புலிகள் தமது செயல்பாடுகளை நியாயப்படுத்தக் கூடிய பிரச்சனைகள் இருக்கவே செய்கின்றன. புலிகள் சொல்கிறார்கள் என்பதற்காக அந்தப் பிரச்சனைகள் பொய்யானவை என்று ஆகிவிடாது.

பிரச்சனை என்ற ஒன்று இருப்பதால்தான் அந்தப் பிரச்சனைகளை முன்வைத்து அமைப்புக்கள் உருவாக முடிகிறது. அந்தப் பிரச்சனைகளை அவை எந்த நோக்கத்தோடு பயன்படுத்துகின்றன என்பது வேண்டுமானால் விவாதத்துக்கு உரியதாக இருக்கலாம். அதனால் பிரச்சனைகளே இல்லையென்று ஆகிவிடாது.

அவ்வாறான ஒரு தவறான அர்த்தப்படுத்தலில் அரசாங்கம் ஈடுபடுமானால் முழுத் தமிழ் பேசும் மக்களின் நம்பிக்கைகளையும் இழக்கும் நிலைதான் ஏற்படும்.



அந்த நாள் ஞாபகம்

1986இல் யாழ்ப்பாணத்தில் உள்ள நல்லூரில் அமரர் விஜய குமாரணதுங்க. ஆயுதத்தோடு அருகில் நிற்பது புலிகள் அமைப்பின் ரகீம் (இப்போது கனடாவில்)

**செய்யலாமே!**

**அமரர் விஜய குமாரணதுங்க இனப்பிரச்சனை தீர்விற்கு இதயசுத்தியோடு உழைத்தவர். பெரும்பான்மை இனத்தின் மத்தியில் இருந்து வருகின்ற நம்பிக்கையூட்டல்களே தமிழ் பேசும் மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைக்கும் என்று நம்பியவர். தானே முன்வந்து அதற்காக உழைத்தவர்.**

**அவர் இன்றில்லை. ஆயினும் என்ன? அவர் விட்டுச் சென்ற முன் உதாரணங்களை பின்பற்றலாம் அல்லவா? இனப்பிரச்சினை தீர்வுக்கான களத்தை பண்படுத்தலாம் அல்லவா? தலைவர்களே யோசியுங்கள்.**

## இடைக்கால நிர்வாகமும்-புலிகளின் அவசர நிராகரிப்பும்!

இருக்கின்ற இனப்பிரச்சனையை இல்லை என்று சித்தரிப்பதை விடவும், இனப்பிரச்சனையே இல்லை என்று சொல்லத்தக்க இதயசுத்தியோடான தீர்வை சாதிப்பதே இன்றைய தேவை.

இதே சமயத்தில் புலிகள் தவிர்ந்த தமிழ்க் கட்சிகள் அநேகமாக அனைத்தும் இடைக்கால நிர்வாகம் ஒன்று வடக்கு, கிழக்கில் உருவாக்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளன.

அந்த இடைக்கால நிர்வாகம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதில் ஒருமித்த முடிவு எட்டப்படவில்லை யெனினும் இடைக்கால நிர்வாகம் அவசியம் என்பதில் ஒத்த கருத்து உருவாகியிருக்கிறது. முஸ்லிம் காங்கிரசும் இடைக்கால நிர்வாக யோசனையை ஏற்றுள்ளது.

அரசுக்கும் அக் கோரிக்கை எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

சபாநாயகர் எம்.எச்.முகமட் இடைக்கால நிர்வாக யோசனை பற்றி அறிவித்தல் வெளியாகியிருந்தது.

யுத்தத்தை தீவிரப்படுத்தும் நோக்கத்தோடு இடைக்கால நிர்வாக யோசனை முன்வைக்கப்பட்டதாக புலிகள் கூறியிருந்தனர்.

ஆனால் அரசாங்கமோ இடைக்கால நிர்வாக யோசனையை நிராகரித்திருக்கிறது. அரசியல் சட்டத்தில் அதற்கு இடமில்லை என்று கூறியும் இருக்கிறது.

மனம் உண்டானால் இடமுண்டு. இடைக்கால நிர்வாக விடயத்தில் பெரிய சட்டச் சிக்கல்களுக்கு இடமில்லை. ஏற்பட்டால் கூட அரசு விரும்பினால் சீர் செய்ய இடமுண்டு என்று அரசியல் சட்ட அறிஞர்கள் சிலர் கூறுகின்றனர்.

ஏனைய தமிழ் அமைப்புக்கள் தமக்குரிய அங்கீகாரத்தை தேடிக் கொண்டு விடக்கூடாதே என்கின்ற அவசரம்தான் புலிகளின் நிராகரிப்பில் வெளிப்படுகிறது.

இடைக்கால நிர்வாக யோசனைக்கு அரசியல் சட்டத்தில் இடமில்லை என்று ஏனைய பெரும்பான்மை அரசியல் கட்சிகளுக்கும் தெரிவித்திருந்தார்.

இடைக்கால நிர்வாக யோசனை எந்த அடிப்படையில் முன்வைக்கப்பட்டுள்ளது. அதன் நோக்கங்கள் என்ன? போன்ற விபரங்கள் எவற்றையும் அறியாமல் அறியும் விருப்பமே காட்டாமல் புலிகள் அமைப்பினர் உடனடியாகவே அந்த யோசனையை நிராகரித்துவிட்டனர்.

லண்டனில் இருந்து நிராகரிப்பு அறிவித்த அரசாங்கம் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தப் போவதாக அறிவித்துள்ளது.

கிழக்கிலும், வவுனியாவிலும் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இடைக்கால நிர்வாக யோசனையை முன்வைத்த தமிழ் கட்சிகளோடு ஆலோசித்துக் கூடப்பார்க்காமல் அரசாங்கம் தனது முடிவை தடாலடியாக அறிவித்துவிட்டது.

வடக்கு-கிழக்கில் புலிகளின் பிடி இல்லாத பகுதிகளில் அமைதி நிலவுவதாகக் காட்டுவதே அரசின் நோக்கமாக இருக்கிறது.

அதன் மூலமாக புலிகள் தான் பிரச்சனை, அவர்கள் இல்லாத பகுதிகளில் பிரச்சனை இல்லை என்ற கூற்றை உறுதிப்படுத்தலாம் என்று அரசு கருதுகிறது.

ஆயினும் தற்போது கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் கூட புலிகளின் நடமாட்டம் இருக்கவே செய்கிறது.

இரவு நேரங்களில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் புலிகள் வந்து செல்கிறார்கள். தமக்கு விரோதமானவர்களை எச்சரிக்கிறார்கள். கடத்தியும் செல்கிறார்கள்.

கிழக்கில் உள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள் பலர் புலிகளின் மிரட்டல்களுக்கு பணிந்து செயல்படுவதையும் அவதானிக்க முடிகிறது.

இந்நிலையில் உள்ளூராட்சித் தேர்தலை புலிகள் நிராகரிக்கும் நிலையில் யார் போட்டியிட முன்வருவார்கள் என்ற கேள்வி எழுந்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் கிழக்கில் நடந்தால் அங்கு புலிகளால் இரத்த ஆறு ஓடும் என்று முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்பும் கூறியிருக்கிறார்.

ஏனைய தமிழ்க் கட்சிகள் உள்ளூராட்சித் தேர்தலில் எவ்வாறான நிலைப்பாட்டினை எடுத்தாலும் கூட ஆளும் கட்சி தன் வேட்பாளர்களை நிறுத்தியே ஆகவேண்டிய நிலையில் இருக்கிறது.

வேட்பாளர்களாக யார் முன்வரப் போகிறார்கள் என்பது தான் பிரச்சனை.

எப்படியிருப்பினும் அரசாங்கம் நினைத்தால் தேர்தலை நடத்தி முடிப்பது ஒன்றும் கஷ்டமல்ல.

ஆனால் அத் தேர்தல் பற்றிய அவநம்பிக்கைகள் உருவாகுவதை அரசாங்கம் தடுக்க முடியுமா என்பதே கேள்வியாகும்.

நடைபெறப்போகும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் இராணுவத்தினரின் பாத்திரம் என்னவென்பதும் வரையறுக்கப்பட வேண்டிய விசயமாகும். இல்லாது போனால் பல்வேறு அபிப்பிராயங்கள் உருவாகுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி முடிப்பதன் மூலம் வடக்கு - கிழக்கில் குறிப்பிட்ட பகுதிகளில் அமைதி திரும்பி விட்டதாக அரசாங்கம் கூறலாம்.

அத்தோடு இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வுகாணும் முயற்சிகளுக்கும் மூடுவிழா நடந்துவிடாமல் இருந்தால் சரிதான்.

வடக்கு-கிழக்கில் தேர்தல்கள் நடத்தப்படுவதால் மட்டுமே பிரச்சனைகள் தீர்ந்துவிட்டதாக அர்த்தமாகாது.

இந்திய அமைதிப்படையின் காலத்திலும் தேர்தல்கள் அங்கு நடத்தப்பட்டன. மாகாண சபை கூட உருவானது.

அடிப்படை பிரச்சனைகள் தீராது பிரச்சனைகள் உள்ளவரை புலிகளும் இருப்பார்கள். யுத்தமும் இருக்கும். ■



## அதிரடி அய்யாத்துரை

**வி**டிஞ்சாக் கல்யாணம் எண்டு சொல்வது மாதிரி திடீரென்று உள்ளூராட்சித் தேர்தல் என்று அறிவிச்சுப் போட்டினம். ஆனா பொண்ணும் ரெடியில்லை மாப்பிளையும் ரெடியில்லை. அறிவிப்புக்கள் பெரிய விசயமில்லைப் பாருங்கோ. எப்படி நடத்தி முடிக்கிறது எண்ட விசயம்தான் பிரச்சனையே. தமிழ் கட்சிகள் இடைக்கால நிர்வாகம் எண்டு கேட்க அரசாங்கம் இடைக்கால தேர்தல் நடத்த முடிவு செய்து போட்டுது. தேர்தலை நடத்தப் போறது எந்த நிர்வாகம் எண்டுதான் விளங்கவேயில்லைப் பாருங்கோ. இராணுவ நிர்வாகம் தேர்தலை நடத்தினால் அது சோக்குத்தான்.

**தே**ர்தல் என்ற அறிவிப்புக் கேட்ட கையோடு ஒரு பழைய நினைவு. மலரும் நினைவுகள். முந்தி வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தல் காலத்தில இரண்டெழுத்துக்காரர் தேர்தலில் நிற்கவில்லை. ஆனால் சிலருக்கு கட்டுக்காசு கொடுத்து சும்மா ஒரு போட்டி நடத்த பிளான் என்று கதை பரவியது. உடனே காந்தி தேசப் படை உஷாராகி வேட்பு மனுத்தாக்கல் நடந்த தினங்களில யாழ்ப்பாணத்தில பயங்கர செக்கிங். 100 ரூபாய்க்கு மேலே யார் பொக்கற்றில காசு வச்சிருந்தாலும் வேட்பு மனுத்தாக்கல் முடியும் நேரம் மட்டும் ஆளை அசையவிடேல்ல. மீன்வித்துப் போட்டு வந்த வியாபாரிகள் சிலரும் மாட்டுப்பட்டு முழிச்சுக்கொண்டிருந்தவை. எப்படி நம்பி விடுறது. காசைக் கட்டி வேட்பு மனுத்தாக்கல் செய்தா என்ன செய்யிறது? அதுதான் அத்தனை முன்னேற்பாடுகள். பிறகுதான் 'ஜனநாயகத் தேர்தல்' நடந்து முடிஞ்சது. என்ன இழவோ இப்ப போய் அந்த மலரும் நினைவு வந்து தொலைக்குது பாருங்கோ. நான் என்ன செய்ய?

**தி**ருமலையிலை வெள்ளைவான் பவனி நடக்குது. அதுக்குள்ளே இருக்கிறது முன்னாள் இயக்ககாரர்தானாம். நாலுபேர் கூட்டமாக நிண்டாப் போச்சு. இறங்கி விளாசி விலாசம் காட்டுகினமாம். பரமசிவன் கழுத்தில் இருந்து பாம்பு கேட்டதாம் கருடா சௌக்கியமா? அந்தக் கதைதான். சனம்தான் சௌக்கியமில்லாமல் தவிக்குது.

**சி**ல பெரும்பான்மை இன மீனவர்கள் வங்கிக் கடனுக்கு கணக்குக்காட்ட இரண்டு எழுத்துக்காரரில பழி போடுகினமாம். படகை ஒளிச்சு வைச்சுப்போட்டு அவை கடத்திப் போட்டினம் எண்டு கதைவிடுறது காதுல பூ சமாச்சாரம்தானே.

**இ**ந்திய-இலங்கை கிரிக்கட் ஆட்டத்தின் கடைசி நாளன்று சிலர் தண்ணி முகபாத்தியில அநாகரிகமாக நடந்து கொண்டது தேசிய அகௌரவம். போட்டியைப் பார்க்க வந்திருந்த பக்கத்து நாட்டு ஆக்கள் (பெண் பிரசுகள்) உட்பட இருந்த பகுதியை நோக்கி கேலி செய்து போத்தில்களால எறிஞ்சு தங்கட தரத்தைக் காட்டிப் போட்டினம். தண்ணி கண்ணையும் மறைக்கும். கண்ணியத்தையும் மறைக்கும்.

**யா**ழ்ப்பாணத்தில இரண்டெழுத்துக்காரர் மூல வளத்தை பெருக்குவது பற்றி கூட்டம் நடத்தினவை. நல்ல விசயம்தான். ஆனாப்பாருங்கோ மூளை வளக்காரர்தான் ஓடிக் கொண்டிருக்கினம். அவையை ஏன் ஓடுறியள் எண்டு கேட்டா துவக்குக்கு மூளை இல்லை அதுதான் எங்கட மூளையைப் பாதுகாக்க ஓடுறம் எண்டு சொல்லுகினம்.

**யா**ழ்ப்பாணத்தில் மேலே விமானம். கீழே எந்த நேரமும் எதுவும் நடக்கலாம். தேவை அவதானம். ஆனாலும் எங்கட ஆக்கள் சிலர் இப்பவும் சாதி பேசுகினம். கொதி வந்தா சிலருக்கு சாதி இழுத்துப் போசினாத்தான் ஒரு ருசி. சித்தர்களுக்குள் பொஸ்ட் கிளாஸான ஆள் சிவபாக்கியர் அவர் என்ன சொன்னவர் தெரியுமோ?

சாதியாவது ஏதடா சலம் திரண்ட நீரலோ
பூத வாசல் ஒன்றலோ பூதம் ஐந்தும் ஒன்றலோ
காதில் வாளி காரை கம்பி பாடகம் பொன் ஒன்றலோ
சாதிபேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையோ?
சொன்னவர்தான் சித்தர்.

எங்கட ஆக்கள் சிலர் பட்டும் அறியாப் பித்தராய் இருக்கினம். என்ன செய்யிறது? ●

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## உலக ரவுண்டப்

### இறங்கி வருகிறார் இஸ்ரேலிய பிரதமர்

# நிராகரித்த அமைப்போடு பேச விரும்புகிறார்கள்! மத்தியகிழக்கு பிரச்சனையில் மற்றொரு கட்டம்!!



பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை பயங்கரவாத இயக்கம் என்று வியாக்கியானம் செய்து வந்த இஸ்ரேல் பிரதமர் இப்போது கீழே இறங்கியிருக்கிறார்.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தோடு தனது மந்திரி சபையைச் சேர்ந்தவர்கள் சமாதானப் பேச்சில் ஈடுபடலாம். தடுக்க மாட்டேன் என்று கூறியிருக்கிறார்.

பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத், இஸ்ரேல் இறங்கி வந்திருப்பதை அலட்சியப் படுத்தவில்லை.

சமாதானப் பேச்சில் ஈடுபடுவதற்காக நியமிக்கப்பட்ட பாலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதிகளை அழைத்து புதிய நிலமைகள் பற்றி அவர் ஆராய்ந்துள்ளார்.

இதே வேளையில் இஸ்ரேலிய அமைச்சரவையில் ஒரு பகுதியினர் பேச்சுக்களில் இஸ்ரேல் நேரடியாக ஈடுபடுவதையே விரும்புகின்றனர். இடைத்தரகராக அமெரிக்காவோ அல்லது வேறு சக்தியோ இருப்பதை அவர்கள் விரும்பவில்லை.

இரு தரப்புகளுமே தமது பிடிவாதங்களை விட்டு இறங்கி வந்திருப்பதாகவே அவதானிகள் கருதுகின்றனர்.

பேச்சுவார்த்தைகளுக்கு அடிப்படையாக மூன்று அம்சத் திட்டமொன்றை இஸ்ரேல் முன்வைத்துள்ளது.

1. பாலஸ்தீன சுய ஆட்சி நிர்ணயிப்பதற்கு இடைக்காலக் கெடுவாக 5 வருடங்கள் விதிக்கப்படும். இக்காலக் கெடுவுக்குள் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தின் எதிர்கால அந்தஸ்து நிர்ணயிக்கப்படும். அதுவரை ஜெருசலம் இஸ்ரேலின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வரும்.
2. இப்பிரதேசங்களிலுள்ள யூதர்களின் குடியிருப்புக்கள் பாலஸ்தீன அதிகாரத்துக்குள் விடப்படமாட்டாது.
3. சுயாதிக்க நிலைக்கான முடிவு நிர்ணயிக்கப்படும் வரை இப்பிரதேசத்தின் பாதுகாப்பு முழுவதும் இஸ்ரேலியர்கள் வசமே இருக்கும். இருப்பினும் பாலஸ்தீனம் தனது பொலிஸ் படையை வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படும்.

அரபாத்தும் தன்னுடைய பழைய விடாப்பிடிகளை ஓரளவு தளர்த்துவார் என்றே இஸ்ரேல் நம்புகிறது. பாலஸ்தீன சுயாதீன எல்லைக்குள் கிழக்கு ஜெருசலமும் இணைக்கப்பட வேண்டும் என்று அரபாத் விரும்புகிறார் என்பது அண்மையில் அவர் தெரிவித்துள்ள கருத்துக்களிலிருந்து அறியக்கிடக்கிறது. அத்துடன் ஜெருசலப் பட்டினத்தின் தன்னாதிக்கம் பற்றிய முடிவினை பின்னர், வருங் காலங்களில் நடைபெறும் பேச்சு வார்த்தைகளின் போது தீர்மானிக்கலாம் என்று அவர் நம்புகிறார்.

அரபாத்தின் மனமாற்றத்துக்கான மற்றுமொரு காரணமுமுண்டு. தனது மக்களின் நியாயபூர்வமான அபிலாசைகளின் ஒரு பகுதியையாவது வென்றெடுத்தவர் தானே, என்று வரலாறுகளில் இடம் பெற வேண்டும் என்ற ஆசையும் அவருக்குண்டு. இது தவிர குவைத்தை சதாம் ஹுசைன் ஆக்கிரமித்ததை யாசிர் அரபாத் பகிரங்கமாக ஆதரித்தார். இதனைத் தொடர்ந்து பா.வி.இயக்கத்துக்கு வளைகுடா நாடுகள் வழங்கிய பொருளாதார உதவிகளை நிறுத்திவிட்டன. இவ்வுதவிகளை மீண்டும் பெறுவதானால், மத்திய கிழக்கில் நிரந்தர அமைதி ஏற்பட்டாக வேண்டும். அப்போது பாலஸ்தீனத்தைக் கட்டியெழுப்பவாவது இந்நாடுகள் தங்கள் உதவிகளை வழங்கத் தொடங்கிவிடும். அவரின் மனமாற்றத்துக்கு இதுவும் காரணமாகும்.

கடந்த 25 ஆண்டுகளாக பாலஸ்தீனப் பிரச்சனையை முன்வைத்து பலகளங்களைக் கண்ட அரபாத்தை இதுகால வரை அங்கீகரிக்கவோ பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான ஆலோசனைகளை அவரிடம் பெறவோ இஸ்ரேல் முன்வரவில்லை. இன்று அந்த மனிதருடன் பேசியே அமைதிகாண வேண்டிய நிர்பந்தத்துக்குள் இஸ்ரேல் தள்ளப்பட்டுள்ளது.



## நெருக்கடியில் யெல்ட்சின்!

சோவியத் யூனியன் உடைந்து சிதறிய பின்னர் ரஷ்ய ஜனாதிபதியான யெல்ட்சின் சர்ச்சைக்குரிய மனிதராகி விட்டார்.

ரஷ்ய பாராளுமன்றம் யெல்ட்சினோடு ஒத்துழைக்க மறுக்கிறது. கம்யுனிசக் கருத்துக் கொண்டவர்களின் கைகள் பாராளுமன்றத்தில் இன்னமும் ஓங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பின் மூலம் யெல்ட்சின் தனது பலத்தை நிரூபித்த போதும் பாராளுமன்றம் அவருக்கு விட்டுக் கொடுக்கத் தயாரில்லை.

ரஷ்யாவில் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது. தேர்தலையும் அறிவிக்க முடியாது. பாராளுமன்றத்தின் ஒப்புதல் பெறவேண்டும். ஆனால் தேர்தலை நடத்தப் போவதாக யெல்ட்சின் சொல்லி வருகிறார்.

ரஷ்ய இராணுவம் என்ன நினைக்கிறது என்று தெரிய வில்லை. ஜனாதிபதியும், பாராளுமன்றமும் இரு துருவங்களாகப் பிரிந்து மோதிக் கொண்டிருக்க இராணுவத்தின் செல்வாக்கு உயர்கிறது.

நெருக்கடிகளுக்குள் இருந்து யெல்ட்சின் எப்படி மீளப் போகிறார்? அமெரிக்கா போன்ற நாடுகள் யெல்ட்சின் விழுந்து விடாமல் இருக்க வேண்டும் என்றே விரும்புகின்றன. அவரைவிட்டால் வேறு நம்பிக்கையான ஆள் கிடையாது.

யெல்ட்சின் கவிழ்ந்தால் கம்யுனிசக் கோட்டை மீண்டும் எழுந்து விடும் என்று அவை நினைக்கின்றன.

யெல்ட்சின் விழுவாரா? மீள்வாரா? வரும் நாட்கள் பதில் சொல்லும்.

## கண்ணுக்கெட்டாத தொலைவில் தீர்வுகள்! கண்ணுக்கு தெரிபவையோ எலும்புக் கூடுகள்!!

தென்சூடான் வறுமையின் கோரத்தாண்டவத்தில் சுடுகாடாகிக் கொண்டிருக்கிறது.

மழையில்லை. அதனால் விளைச்சல் இல்லை. என்ற நிலை இன்றில்லை; ஆனாலும் பட்டினிக் கொடுமைக்கு குறைச்சல் இல்லை.

உள்நாட்டுப் போர் ஓய்வின்றி நடக்கிறது. போருக்கும் கடும் பசிதான்! அப்பாவி மக்கள் விழுங்கப்படுகிறார்கள்.

கிறிஸ்தவ போராளிக் குழுக்கள் தமக்குள் . மோதிக் கொண்டு அழிந்து கொண்டிருக்கின்றன. தீர்வுகள் கண்ணுக்கெட்டாத தொலைவில் தான் இருக்கின்றன.



உணவுத் தேவைகள் கைக்கு எட்டாத நிலையில் எலும்புக் கூடுகளாக, எழுந்து நடக்க முடியாதவர்களாக தவழ்கிறார்கள் மக்கள். அந்தப் பரிதாபத்துக்குரியவர்களில் ஒருவரைத் தான் படத்தில் காண்கிறீர்கள்.

### நகர ரவுண்டப்

-ஒற்றன்-

## காரில் தேடிவந்த பைங்கிளி



"ஆண்கள் மட்டும்தான் பெண் தேடி காரில் வருகிறார்கள் என்று நினைக்க வேண்டாம் தம்பி"

என்று மீண்டும் சொல்லி விட்டு நம்மைப் பார்த்து மர்மப் புன்னகை ஒன்றை மலரவிட்டார் கடைக்காரர்.

இடையிலே ஒருவர் வந்து திவயின பேப்பர் கேட்டார்.

பாவனை தடை செய்யப்பட வேண்டிய மோட்டார் சைக்கிள் ஒன்று காதடைக்க வைத்தபடி கடைதாண்டிச் சென்றது. எல்லோர் கவனத்தையும் கவரத் தான் இப்படியொரு உத்தியோ தெரியவில்லை. அது போட்ட சத்தத்தில் கொழும்பே திரும்பிப் பார்க்கும் போல் இருந்தது.

அம்புலன்ஸ் வண்டிகள் வேறு இடைக்கிடையே அவலக் குரலெழுப்பி கொழும்பைச் சலனப் படுத்துவது போதாது என்று, பாவனைக்குதவாத வண்டிகளின் இரைச்சல்கள். புகை வீசல்கள்.

அம்புலன்ஸ் வண்டிகள் போடும் சத்தம் பற்றி சொல்லும் போது ஒரு காட்சி நினைவுக்கு வருகிறது. சில அம்புலன்ஸ் சாரதிகள் தமது சொந்த அவசரத்திற்கும் அலாம் ஓசை எழுப்பிக் கொண்டு பறப்பதுண்டு. வேகமாய் பறந்த அம்புலன்ஸ் ஒன்று தெகிவளையில் ரீக்கடை முன்னால் போய் நின்றது. சாரதி ஹாயாக ரீ ஓடர் பண்ணிக் குடித்துக் கொண்டிருக்க விசர் தான் வந்தது.

திவயினவை கொடுத்து விட்டு கடைக்காரர் வெகு சுவாரசியமாகத் தொடர்ந்தார்.

"நாகரிகம் மாறிப் போச்சு காலம் கெட்டுப் போச்சு."

புதிர் போட்டுப் பேசிக் கொண்டிருந்தார்.

இன்னமும் விசயத்திற்கு வரவில்லை. எனவே அண்ணரை விசயத்திற்கு கொண்டுவர கயிற்றைக் கொடுத்தோம்.

"காலம் மாறித்தான் போச்சு. எல்லாம் தலைகீழா நடக்குது"

"அப்படிச் சொல்லும். நாலு நாளைக்கு முன்பு ஒரு கார் வந்து நின்றது. தற்செயலாப் பார்த்த நேரத்தில ரைவிங் சீற்றிலே இருந்தது ஒரு பெண். காருக்குள் வேறு யாரும் இல்லை"

சொல்லிவிட்டு நிறுத்தினார். ஒரு மர்மக் கதையைக் கேட்கும் சுவாரசியத்தில் நம்மையறியாமலேயே . வாய் திறந்து கொண்டிருந்தது.

"ரைவிங் சீற்றில் இருந்தபடி பெண் பார்வையை வீச கடையிலே சிகரெட் வாங்கிக் கொண்டிருந்தவன் கண்ணில் பட்டிருக்கிறான். அது ஒரு மாதிரிப் பார்க்க, இவனும் சிகரெட்டை வாயில் வைத்துக் கொண்டு வழிய, ந. பமாட்டிர் தம்பி அது கையைக் காட்டி கூப்பிட இவன் காருக்குக் கிட்ட போனான்"

அந்த நேரம் பார்த்து வெற்றிலை கேட்டு வந்தவரைப் பார்க்க நமக்கு ஆத்திரமாக வந்தது. கடைக்காரரும் கதை சொல்லும் சுவாரசியமான அவசரம். வேக வேகமாய் வெற்றிலையைக் கொடுத்து விட்டு விட்ட இடத்தில் இருந்து மீண்டும் பிக்கப் பண்ணத் தொடங்கினார்.

"இவன் கிட்டப் போக அது ஏதோ சிரித்தபடி பேசியது. பிறகு பின் கதவைத் திறந்து அவன் ஏற கார் சீறிப் பறந்தது"

சொல்லி விட்டு தலையில் அடித்துக் கொண்டார்.

நமக்கு ஒரு சந்தேகம். கேட்டோம். வித்தியாசமாய் நினைக்கிறீர்கள்?"

"அதை ஏன் நீங்கள் வித்தியாசமாய் நினைக்கிறீர்கள்?"

"விசயம் தெரிஞ்சபடியாத் தான் நினைக்கிறான். பெண் விபச்சாரிகள் மாதிரி இப்ப ஆண் விபச்சாரிகளும் எக்கச் சக்கம் தம்பி. அவனே மறுநாள் வந்து சொன்னவன். நல்ல காசும் கொடுத்து இடைக்கிடை வரச் சொல்லியும் அனுப்பி வைச்சுதாம். கரும்பும் தின்று கூலியும் வாங்கியிருக்கிறான். இது எப்படியிருக்குத் தம்பி"

நமக்கு தலை சுற்றியது. அவசர உலகம். எல்லாமே இயந்திரமயமாக மாறிவருகிறது. சிலருக்கு வீட்டில் மனைவி இருப்பதே மறந்து போய்விடுகிறது. மனதை புரிந்து கொள்வதைவிட பணம் மட்டும் போதும். பணம், பங்களா, கார் இந்த வசதிகள் போதும். இப்படித் தான் நினைக்கிறார்கள். இதனால் பெண்ணின் உணர்வுகள் நசுக்கப்படுகின்றன. அதுவே இவ்வாறான விதிவிலக்கான சில நிகழ்வுகளுக்கு காரணமாகி விடுகிறது.

"என்ன தம்பி யோசிக்கிறீர். இப்பிடி ஒரு சம்பவம் இல்லை. பல சம்பவங்கள் இதுக்கு ஒரு கௌரவமான பேரும் வைத்திருக்கிறார்கள்."

"அதென்ன பேர்"

"கம்பனி கொடுப்பது"

சொல்லிக்கொண்டே மீண்டும் தலையில் அடித்துக் கொண்டார்.

"தாமே வாகனம் செலுத்தி வருகிறார்கள். ஒதுக்குப் புறமான இடங்களில் வாகனத்தை நிறுத்தி விட்டு நோட்டம் பார்த்து வாய்ப்பானவர்கள் கிடைத்தால் சர்வ சாதாரணமாக கம்பனி தர முடியுமா என்று கேட்கிறார்கள். இது கொழும்பில் மெல்ல மெல்ல பரவிவருகுது தம்பி. பேப்பரில போட்டு புத்தி சொல்லுங்கோ.. சிங்களப் பேப்பருக்கும் சொல்ல வேணும்"

அக்கறையாகக் கூறினார்.

ஆமோதித்துவிட்டு கவலையோடு நடையைக் கட்டினோம்.

நமது தகவல் வங்கியாளர் அவசரமாக வந்து சந்திக்குமாறு சொன்னதை இதுவரை மறந்து விட்டோம்.

சொல்லப்பட்ட நேரத்திற்கு அவர் முன்னால் ஆஜரானால் தான் உண்டு. இல்லாவிட்டால் வேறு வேலையிருக்கிறது. பின்னர் பார்க்கலாம் என்று பஸ் அடித்து விடுவார்.

இன்று என்ன தகவல்கள் வந்திருக்கிறதோ என்ற எதிர்பார்ப்போடு வழியில் வந்த மினிபஸ்சில் தாவினோம். காத்திருங்கள் மறுவாரம் சந்திப்போம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# இந்தியா போய் தென்னாபிரிக்கா வந்தது


## அலசுவது — இராஜதந்திரி

இந்திய கிரிக்கெட் அணி தனது இலங்கைச் சுற்றுப் பயணத்தை நிறைவு செய்ததையடுத்து, தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி தற்சமயம் இலங்கை வந்துள்ளது.

இலங்கையில் ஒன்றன்பின் ஒன்றாக இந்திய, தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிகளின் சுற்றுப் பயணங்கள் இடம்பெறுவது, இலங்கை கிரிக்கெட் இரசிகர்களுக்கு தரமான கிரிக்கெட் பந்தயங்களை நேரில் பார்வையிடும் வாய்ப்புக்களை வாரி வழங்குவதாக இருக்கின்றது.

ஆனால் மறுபுறத்தே இந்த இந்திய, தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிகளின் சுற்றுப் பயணங்கள் முக்கியமான சில வரலாற்று நிகழ்வுகளை மீண்டும் ஞாபகப்படுத்தி அசைபோட வைப்பதாகவும் காணப்படுகின்றன.






இந்திய, தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிகளின் சுற்றுப் பயணங்கள் இலங்கையில் இடம் பெற்றுள்ள இத்தருணத்திலேயே, தென்னாபிரிக்காவில் மகாத்மா காந்தியடிகள் காலடி எடுத்து வைத்து ஒரு நூற்றாண்டு காலமும் பூர்த்தியடைந்துள்ளது.

இன, மற்றும் நிறவாதத்தை அடிப்படையாகக் கொண்ட அடக்குமுறைகளும், கொடுமைகளும் நிறைந்திருந்த தென்னாபிரிக்காவிலேயே மகாத்மா காந்தியின் அஹிம்சைப் போராட்டம் முதலில் துளிர்விட ஆரம்பித்தது.

**"காந்தியின் சாத்வீகப் போராட்டம் 21ம் நூற்றாண்டுக்கும் ஏற்புடையதாகவே இருக்கின்றது."**
**-டாக்டர் நெல்சன் மண்டேலா-**



தென்னாபிரிக்காவில் மகாத்மா காந்தி பெற்ற அனுபவங்களே பிற்காலத்தில் இந்திய சுதந்திரப் போராட்டத்தை அவர் அஹிம்சா வழியில் முன்னெடுப்பதற்கும் பெருமளவில் துணை புரிந்திருந்தன.

1893ம் ஆண்டு–

தென்னாபிரிக்காவில் புகையிரத நிலையமொன்றில் இருந்து புறப்பட்ட புகைவண்டி ஒன்று இடை நிறுத்தப்பட்டது. தொடர்ந்து அந்த புகையிரத வண்டியின் முதலாம் வகுப்புப் பெட்டியின் கதவொன்று பலமாகத் திறக்கப்பட்டது. இதனையடுத்து மெலிந்த உடலமைப்பைக் கொண்ட இளைஞன் ஒருவன் அப்பெட்டியிலிருந்தும் வெள்ளை இன ரயில் சிப்பந்தி ஒருவரால் வெளியே புகையிரத மேடை மீது தூக்கி வீசப்பட்டான்.

அந்த இளைஞனின் பயணப் பெட்டியும் அவனுடனேயே சேர்ந்து புகையிரத மேடை மீது வந்து விழுந்தது.

முதலாம் வகுப்புப் பெட்டியிலிருந்து தன்னை வெளியே தள்ளிய அந்த வெள்ளை இன ரயில் சிப்பந்தியை நோக்கி "நான் என்ன தவறு செய்தேன்? என்னிடம் முதலாம் வகுப்பில் பயணம் செய்வதற்கான பயணச்சீட்டு இருக்கின்றது. என்ன காரணத்துக்காக என்னை நீ வெளியே தள்ளினாய்? என்று அந்த இளைஞன் தனது கோபத்தை அடக்க முடியாதவனாகச் சத்தமிட்டான்.

அப்போது அந்த தென்னாபிரிக்க வெள்ளை இன ரயில் சிப்பந்தி மெலிவான, அதே வேளை கச்சிதமாக மேற்கத்தைய பாணியில் உடை அணிந்திருந்த அந்த இளைஞனை நோக்கி "நீ வெள்ளையன் அல்ல; எனவே உனக்கு முதலாம் வகுப்புப் பெட்டியில் பயணஞ் செய்வதற்கான அருகதை இல்லை" என்று மிரட்டலாகச் சத்தமிட்டான்.

இதனைக் கேட்டு செய்வதறியாது அந்த இள்ளைஞன் திகைத்து நின்ற வேளை, அவன் பயணஞ் செய்யவிருந்த புகையிரத வண்டியும், அவனை நோக்கி ஏளனஞ் செய்வது போல தனது கரும் புகையைக் கக்கியவாறு அந்த ரயில் நிலையத்திலிருந்தும் நகர்ந்து சென்றது.

இவ்வாறு அவமதிப்புக்குள்ளான அந்த இளைஞன் வேறு யாருமல்ல. பிற்காலத்தில் மனித குலத்தின் உதாரண புருஷர்களில் ஒருவராக 'மகாத்மா' என்று போற்றப்பட்ட மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியே அந்த இளைஞர் என்பது குறிப்பிடத்தக்கது.

மோகன்தாஸ் காந்தி தென்னாபிரிக்காவுக்கு ஒரு சாதாரண நபராகச் செல்லவில்லை. அப்போது அவருக்கு வயது 23 ஆகும். அத்துடன் இங்கிலாந்தில் பயின்று பட்டம் பெற்ற ஓர் இளம் சட்டத்தரணியாகவே (Barrister) காந்தி தென்னாபிரிக்கா சென்றிருந்தார்.

தென்னாபிரிக்காவில் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த இந்திய வர்த்தகர் ஒருவருக்கு வழக்கொன்றில் துணை புரியும் வகையிலேயே காந்தி தென்னாபிரிக்கா வந்திருந்தார். ஒரு வருட காலம் மட்டுமே தென்னாபிரிக்காவில் தங்கியிருப்பதற்கு காந்தி உத்தேசித்திருந்தார்.

இது தவிர தென்னாபிரிக்காவின் உள்விவகாரத்திலோ, அல்லது அரசியலிலோ ஈடுபடும் எண்ணம் கூட காந்தியிடம் இருந்திருக்கவில்லை.

தென்னாபிரிக்காவின் இன மற்றும் நிறவாதப் போக்கினால் தாம் நேரடியாகப் பாதிக்கப்பட்டதுடன், மற்றும் தம்மைப் போன்ற ஆயிரக் கணக்கான இந்திய வம்சாவளியினரும், கூடவே தென்னாபிரிக்காவின் கறுப்பினத்தவர்களும் வெள்ளையர்களின் அடக்குமுறைக்குள்ளாகியிருந்ததையும் காந்தி அனுபவபூர்வமாக அறிந்திருந்தார்.

இதனையடுத்து தென்னாபிரிக்காவில் ஒரு வருடம் மட்டுமே தங்குவது என்ற முடிவை மாற்றி அந் நாட்டிலேயே தங்கியிருந்து தமது சட்டத் தொழிலை காந்தி மேற்கொள்ளலானார்.

தென்னாபிரிக்காவின் திரான்ஸ்வால், (Transvaal) நட்டால் (Natal) ஆகிய மாநிலங்களில் மொத்தம் சுமார் 65 ஆயிரம் இந்தியவம்சாவளியினர் வாழ்ந்து வந்தனர். இவர்களில் அநேகர் கூலியாட்களாகவும், வேறு பலர் வர்த்தகர்களாகவும் இருந்தனர்.

இருந்த போதிலும் இந்தியர்களும், கறுப்பினத்தவர்களும் எதுவித உரிமையுமற்றவர்களாக அடிமைகளைப் போன்றே வெள்ளையர்களால் நடத்தப்பட்டனர்.

இந்தியர்களையும், கறுப்பினத்தவர்களையும் காணுமிடங்களிலெல்லாம் வெள்ளை இனத்தீவிரவாதிகள் தாக்கிவந்தனர். காந்தி கூட பல சமயங்களில் நடைபாதைகளில் வெள்ளையர்களின் ஏளனங்களுக்கும், அவமதிப்புக்குமுள்ளானார்.

இருந்த போதிலும் தமக்கு நேர்ந்த கஷ்டங்களுக்கெல்லாம் அமைதியாகவும், சாத்வீகமான முறையிலுமே காந்தி எதிர்ப்பைக் காட்டிவந்தார்.

தென்னாபிரிக்காவில் இந்தியர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவென பல அமைப்புக்களை காந்தி உருவாக்கினார். இதனையடுத்து பல ஆயிரக்கணக்கான இந்தியர்கள் ஒடுக்கு முறைகளுக்கெதிராக காந்தியின் கீழ் ஒன்று திரண்டனர்.

காந்தி பல சாத்வீக போராட்டங்களை தென்னாபிரிக்காவில் நடத்தினார். இதனால் காந்தியும், அவருடன் ஒன்று திரண்டிருந்தவர்களும் பல்வேறு கெடுபிடிகளுக்குமுள்ளாகியிருந்தனர். பல தடவைகள் அவர்கள் சிறை சென்றும் வந்தனர்.

ஆயினும் சாத்வீகப் போராட்டத்தில் அவர்கள் நம்பிக்கை இழக்கவில்லை.

காந்தி தென்னாபிரிக்க வெள்ளை இனத்தவர்களை பகைவர்களாகப் பார்க்கவில்லை. பல்வேறு சந்தர்ப்பங்களில் வெள்ளை இனத்தவர்களையும், கறுப்பினத்தவர்களையும் ஒன்று சேர்த்து விருந்துபசாரங்களையும் அவர் நடத்தியிருந்தார்.

எனவே அடக்கு முறையாளர்களையே காந்தி சாத்வீக ரீதியாக எதிர் கொண்டாரே தவிர, ஏனையோரோடு சகோதர வாஞ்சையுடன் நடந்து கொண்டார். இதன் காரணமாக காந்தியின் மீது பல தென்னாபிரிக்க வெள்ளை இனப் பிரமுகர்களும், கல்விமான்களும் பேரபிமானம் கொள்ளலாயினர்.

அக்காலத்தில் ரஷ்யாவின் பிரபல எழுத்தாளராக இருந்த லியோ ரோல்ஸ்ரோய் (Leo Tolstoy) கூட காந்தியின் தென்னாபிரிக்க நடவடிக்கைகளைப் பாராட்டியிருந்தார். ரோல்ஸ்ரோய் காந்திக்கு அன்று எழுதிய கடிதமொன்றில், காந்தியின் சாத்வீக போராட்டத்தையும், அப்போராட்டத்தின் மீது அவர் கொண்டிருந்த அசைக்கமுடியாத விசுவாசத்தையும் மெச்சியிருந்தார்.

எனவே 1893ம் ஆண்டு முதல் 1914ம் ஆண்டு வரை 21 வருட காலங்கள் தென்னாபிரிக்காவில் தங்கியிருந்து வெள்ளை இன ஆட்சியாளர்களின் கெடுபிடிகள், அடக்குமுறைகளுக் கெதிராகப் போராடிய பின்னரே காந்தி இந்தியா திரும்பி ஆங்கிலேயர்களை எதிர்த்து இந்திய சுதந்திரப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தார்.

பின்னர் அப்போராட்டத்தையும் அஹிம்சை வழியிலேயே மேற்கொண்டு காந்தி இந்தியாவை பிரிட்டிஷ்காரரின் பிடியிலிருந்தும் சுதந்திரமடையச் செய்திருந்தார்.

எனவே காந்தியின் அஹிம்சை வழியைப் பின்பற்றியே இலங்கையிலும் இனவாதத்துக்கெதிராக தமிழ் அரசியலாளர்கள் தமது எதிர்ப்பை ஆரம்பத்தில் வெளியிடலானார்கள். அத்துடன் இந்த அஹிம்சாவழிப் போராட்டத்தில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டவர்களாகவும் அவர்கள் காணப்பட்டனர்.

ஆனால் பேரினவாத அரசியலாளர்கள் தமிழ்த் தலைவர்களின் சாத்வீகப் போராட்டத்தை ஏளனஞ் செய்யும் வகையிலேயே காலத்துக்குக் காலம் நடந்து கொண்டிருந்தனர்.

1956ம் ஆண்டு தந்தை செல்வநாயகம் தலைமையில் காலிமுகத்திடலில் சாத்வீக ரீதியாக சத்தியாக்கிரகப் போராட்டமொன்றை தமிழர்கள் மேற்கொண்டபோது, ஆட்சியாளர்கள் மிகவும் கேவலமான முறையில் சத்தியாக்கிரகிகளை அணுகியிருந்தனர்.

குண்டர்களையும், காடையர்களையும் ஏவி சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டவர்களை மோசமான முறையில் பேரினவாத சக்திகள் தாக்கியிருந்தன.

இதனைத் தொடர்ந்து 1958ம் ஆண்டிலும் இனக்கலவரத்தை உண்டுபண்ணியதுடன், தமிழ் பேசும் மக்கள் சாத்வீக வழி நின்று ஜனநாயக நடைமுறைகளில் நம்பிக்கை கொண்டு முன்வைத்த நியாயமான கோரிக்கைகளையும் ஆட்சியாளர்கள் தட்டிக் கழிக்கலானார்கள்.

இந்நிலையிலேயே தந்தை செல்வா தமது பாராளுமன்ற நாட்களில் இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு தீர்வாக சமஷ்டி ஆட்சி முறையை வலியுறுத்தி நிகழ்த்திய உரையொன்றில் "தமிழர்களின் பிரச்னைக்கு சமஷ்டி முறையே ஒரு நல்ல தீர்வாக அமைய முடியும். இல்லையேல் எதிர்காலத்தில் பிரிவினைக் கெதிரான போராட்டத்தை ஆட்சியாளர்கள் சந்திக்க வேண்டிய சூழ்நிலை தோன்றுவது தவிர்க்க முடியாததாகிவிடும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

# கத்தியின்றி, இரத்தமின்றி அமைதி வழித் தீர்வே இன்று தேவை!

எனவே தந்தை செல்வா அன்று தீர்க்கதரிசனத்துடன் கூறியவையே இன்று நிதர்சனமாகிவிட்ட நிலை காணப்படுகின்றது.

இருந்த போதிலும் இன்று தமிழர்களின் உரிமைகளுக்கான போராட்டம் என்பது வெறும் பித்தலாட்டமானதாகவே காணப்படுகின்றது.



பேரினவாதிகளின் அடக்கு முறைகளுக்கு மட்டுமல்லாமல், தமது சொந்த மண்ணில் தம்மவர்களாலேயே தமிழர்கள் அடக்குமுறைக்குள்ளாகியுள்ள தன்மையே இன்று வடக்கு–கிழக்குப் பகுதிகளில் காணப்படுகின்றது.

தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்கும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டமானது இன்று தமிழர்களையே நாளுக்கு நாள் பலியெடுப்பதாக மாற்றமடைந்துள்ளது.

தமிழ் பேசும் மக்கள் இன்று ஒரு நல்ல தலைமைத்துவத்தை கொண்டிருக்க முடியாதவர்களாகக் காணப்படுகின்றனர்.

இந்நிலையிலேயே இன்று தென்னாபிரிக்காவில் இடம் பெற்று வரும் சம்பவங்களும் எமக்கு நல்ல படிப்பினையாக இருந்து வருகின்றன.

இன்றைய தென்னாபிரிக்க ஜனாதிபதி திரு டி.கிளார்க் முன்னைய தென்னாபிரிக்க தலைவர்களில் இருந்தும் வேறுபட்டவராக, தென்னாபிரிக்காவில் சகல இனத்தவர்களும் பங்குபற்றும் பொதுத் தேர்தல் ஒன்றை அடுத்த ஆண்டில் நடத்த முன்வந்துள்ளார். இத்தேர்தலின் மூலம் கறுப்பினத்தவர்களும் தென்னாபிரிக்காவில் ஆட்சியதிகாரங்களைக் கைப்பற்றும் சந்தர்ப்பத்தை ஜனாதிபதி கிளார்க் உருவாக்கியுள்ளார்.

தென்னாபிரிக்க கறுப்பினத்தவர்களின் தலைவரான டாக்டர் நெல்சன் மண்டெலாவும் ஜனாதிபதி கிளார்க்கிற்கு கறுப்பினத்தவர்கள் குறித்த பிரச்னையைத் தீர்ப்பதில் தமது ஒத்துழைப்பை அவ்வப்போது வழங்கி வருகின்றார்.

தென்னாபிரிக்காவில் வெள்ளை இனத்தவர்கள் ஆட்சியாளர்களாக இருக்கின்ற போதிலும், கறுப்பினத்தவர்களே அங்கு பெரும்பான்மையினராக இருக்கின்றனர்.

வெள்ளை இனத்தவர்கள் தென்னாபிரிக்காவின் மூலவளங்களைச் சுரண்டி தம்மைப் பலப்படுத்தியுள்ளதுடன், கறுப்பினத்தவர்களை எதுவித உரிமையுமற்றவர்களாகவே நடத்திவந்தனர்.

வெள்ளை இனத்தவர்களின் அடக்கு முறைகளுக்கெதிராக இதுவரை பல்லாயிரக்கணக்கான கறுப்பினத்தவர்கள் உயிரிழந்துள்ளனர். அத்துடன் அவர்களது இருப்பிடங்களிலிருந்தும்கூட கறுப்பினத்தவர்கள் வெள்ளை இனத் தீவிரவாதிகளால் அடிக்கடி துரத்தியடிக்கப்பட்டு வந்துள்ளனர்.

இருந்தபோதிலும் தென்னாபிரிக்க கறுப்பினத் தலைவர்கள் ஜனநாயக ரீதியிலான நடைமுறைகளிலேயே நம்பிக்கை வைத்து தமது போராட்டங்களை முன்னெடுப்பதில் ஆர்வங்காட்டியிருந்தனர்.

அத்துடன், கறுப்பினத் தலைவர்கள் தமது பிரச்னையை சர்வதேச ரீதியாகவும் தகுந்த முறையில் அணுகியிருந்தனர். இதன் காரணமாகவே, இன்று டாக்டர் நெல்சன் மண்டேலா உலகத் தலைவர்கள் வரிசையில் முக்கியமானவராக மதிக்கப்படுகிறார். இதுதவிர தென்னாபிரிக்காவின் ஜொஹனர்ஸ்பேக் நகர பேராயரான அதிவண டெஸ்ட்மண்ட்டுட்டுவும், சாத்வீக ரீதியிலான போராட்டத்தையே முன்னெடுப்பவர்களாகக் காணப்படுகின்றார்.

தென்னாபிரிக்க கறுப்பினத்தவர்களிடையே இன்று பல தீவிரவாதத் தலைவர்கள் தோன்றியுள்ள போதிலும், நெல்சன் மண்டேலா, ஆயர் டெஸ்ட்மண்ட்டுட்டு ஆகியோர் துணிச்சலாக தமது உறுதிப்பாட்டைப் பேணி வருகின்றனர்.

மறுபுறம் தற்போதைய தென்னாபிரிக்க ஜனாதிபதி டி. கிளார்க் வெள்ளை இன தீவிரவாதிகளுக்கும் இடம் கொடாமல் கறுப்பினத்தவர்களின் பிரச்னையைத் தீர்ப்பதில் ஆர்வங்காட்டி வருகின்றார்.

டாக்டர் நெல்சன் மண்டேலா ஒரு காந்தீய அபிமானியாவார். அண்மையில் அவர் நிகழ்த்திய உரையொன்றில் கூட மகாத்மா காந்தி போதித்த சாத்வீகப் போராட்டம் 21 ம் நூற்றாண்டுக்கும் ஏற்புடையதாகவே இருக்கின்றது எனக் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையின் தற்போதைய அரசியல் சூழ்நிலையிலும், இரத்த வெறி பிடித்த போராட்டங்களை விட அமைதி வழியில் பேச்சுவார்த்தைகள் மூலமான தீர்வே இன்று அத்தியாவசியமானதாகின்றது.

எதிரும், புதிருமாகவிருந்த தென்னாபிரிக்க ஜனாதிபதி டி. கிளார்க், கறுப்பினத்தலைவர் டாக்டர் நெல்சன் மண்டேலா ஆகியோர் இன்று தம்மிடையேயான வேறுபாடுகளை களைந்தெறிந்த நிலையில் துணிச்சலாக ஒரு தீர்வைக்காண முன்வந்துள்ளனர்.

இத்தகைய துணிச்சலே இலங்கையில் இன்று சிங்கள, தமிழ் அரசியலாளர்களிடமும் தோன்றுவது இன்றியமையாததாகின்றது.



## அதிர்வெடியாக வெளியான செய்தி!
## அடித்துச்சொல்கிறார்கள் கென்னடி சாகவில்லை!!

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த போது அகில உலகின் செல்வாக்குள்ள மனிதராக விளங்கியவர் ஜோன் எஃப் கென்னடி.

வெறி கொண்ட கொலைஞன் ஒருவனின் துப்பாக்கிப் பசிக்கு 1963ல் தீனியாகிய போதும் இன்றும் பேசப்படுகின்ற முன்னாள் ஜனாதிபதி அவர்.

இப்போது அதிர்ச்சி தரும் செய்தி ஒன்று வெளியாகி யிருக்கிறது.

அமெரிக்கர்கள் அனைவரும் வியப்போடு அந்தச் செய்தியை நோக்குகின்றனர்.

நம்பவும் முடியவில்லை.

ஜோன் எஃப் கென்னடி இன்னமும் உயிரோடுதான் இருக்கிறார். அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் அவரைப் போய் சந்தித்து ஆலோசனையும் பெற்றுக் கொண்டார் என்கிறது அந்தச் செய்தி.

செய்தி மட்டும் என்றால் அலட்சியமாக இருந்து விடலாம். ஆனால் ஜோன் எஃப் கென்னடியை முச்சக்கர வண்டியில் வைத்து பில் கிளின்ரன் தள்ளிச் செல்லும் காட்சியையும் மறைந்திருந்து புகைப்படம் எடுத்து வெளியிட்டுள்ளார்கள்.

பிரபல எழுத்தாளரும் கென்னடியின் மிக நெருக்கமானவருமான திரு. ஜாக்சன் என்பவர்தான் அச் செய்தியை வெளியிட்டிருக்கிறார் என்பது மேலும் வியப்பளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அவர் வெளியிட்டுள்ள செய்தியை கீழே தருகிறோம்.

கடந்த ஜுன் மாதம் 16ம் திகதி பில் கிளின்ரனும் ஜோன் எஃப் கென்னடியும் சந்தித்துக் கொண்டனர்.

அமெரிக்க ஜனாதிபதிகளின் ஓய்வு விடுதியாக விளங்கும் காம்ப் பேவிட் என்ற இடத்திற்கு 76 வயதான, கென்னடி ஜெட் விமானம் மூலம் அழைத்துவரப்பட்டார். வாஷிங்டனிலிருந்து வந்து சேர்ந்த பில் கிளின்ரன் அவரோடு உரையாடினார்.

இரண்டு மணி நேரம் பேச்சுக்கள் நடந்தன. எழுந்து நடமாட முடியாத நிலையில் உள்ள கென்னடி பில் கிளின்ரனுக்கு முக்கியமான பல அறிவுரைகளைக் கூறியுள்ளார்.

கென்னடியை பில் கிளின்ரன் சக்கர நாற்காலியில் இருத்தி அழைத்துக் செல்லும் காட்சியை தொலைவில் இருந்து புகைப்படம் எடுக்கப்பட்டது. அந்தப் புகைப்படத்தை வெள்ளை மாளிகை அதிகாரிகளே தன்னிடம் இரகசியமாக தந்தனர் என்கிறார் ஜாக்சன்.

கிளின்ரனுடன் கென்னடியின் சந்திப்பு வெளியானதால் வெள்ளை மாளிகை அதிகாரிகள் கோபமடைந்துள்ளனர். அதனால் அது ஒரு கட்டுக்கதை என்று மறுக்கின்றனர் என்றும் ஜாக்சன் கூறியிருக்கிறார்.

"கென்னடி நேற்றும் இன்றும் நாளையும்" என்றொரு நூலையும் ஜாக்சன் எழுதியுள்ளார். அது அடுத்தமாதம் வெளியாக இருக்கிறது.

ஜோன் எஃப் கென்னடி உயிரோடு இருப்பதாக முன்னரும் பல செய்திகள் வெளியாகின. தலைச் சிறந்த நரம்பியல் நிபுணர் டாக்டர் சோனியா ஃபாரன் 1988 ஆகஸ்டில் வெளியிட்ட தகவலில் கென்னடி உயிரோடிருப்பதாக கூறினார். டாக்டர் சோனியா கென்னடி ஜனாதிபதியாக இருந்த போது அவரது அந்தரங்க மருத்துவராக இருந்தவர்.

"கென்னடிக்கு தலையில் குண்டடி பட்டதனால் பயங்கரமான காயம் ஏற்பட்டது. ஆனால் அவர் இறக்கவில்லை. உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட கென்னடிக்கு அவசர சிகிச்சை செய்யப்பட்டது. இதற்கிடையே கென்னடி இறந்து போனதாக செய்தி பரவியது. அவரைப் பற்றிய அந்தரங்க தகவல்களும் பரவின. எனவே அமெரிக்காவில் வாழ விரும்பாத கென்னடி ஐரோப்பாவில் விளம்பரம் ஏதுமற்ற ஒரு பகுதியில் சென்று வாழத் தலைப்பட்டார்." என்று அவர் கூறினார்.

டாக்டர் சோனியா இன்னொரு தகவலையும் வெளியிட்டுள்ளார். கென்னடியை அடுத்து பதவியேற்ற ஜனதிபதிகளில் ஜோன்சனைத் தவிர ஏனையோர் அனைவரும் கென்னடியை சந்தித்துள்ளனர்.

இவ்வாறான செய்திகள் அமெரிக்காவில் பல சர்ச்சைகளை உருவாக்கியுள்ளன. சுவாரசியமான சர்ச்சைகள் தான்.




என்னவோ
நடக்குது
மர்மமாய்
இருக்குது!






நம்புவதற்கரிதான அதிசயமான இந்தப் புகைப்படம் நடமாட முடியாது ஊனமுற்றிருக்கும் ஜே.எஃப் கென்னடியை ஜனாதிபதி பில் கிளின்ரன் சக்கர நாற்காலியில் வைத்துத் தள்ளிக் கொண்டு போவதைக் காட்டுகிறது. காம்ப் டேவிடில் வைத்து வெகு தொலைவிலிருந்த வண்ணம் 'டெலிஃபோட்டோ லென்ஸ்' காமிராவினால் பாதுகாப்பு அதிகாரி ஒருவரால் எடுக்கப்பட்டதாம் இப்படம்.

## தகவல் பெட்டி

# ஏழு பொலிசாரை தாக்கியது
# இரை தேடி அலைகிறது
# வெல வெலக்க வைக்கும்
# மனித ஓநாய்!!

## ஒழி அல்லது ஒழிந்து போவாய். ஓநாய் தேடப்படுகிறது!

அமெரிக்க மாநிலமான அலபாமாவிலுள்ள மோபைல் என்ற இடத்தில் ஏழு பொலிசாரைத் தாக்கி அவர்கள் பயணம் செய்த வாகனத்தைக் குடை சாய்த்ததுடன் தென் பிராந்திய வனப் பிரதேசத்தில் பயங்கர அட்டகாசங்களை ஒரு மனித ஓநாய் செய்திருக்கிறது.

கடந்த 5 மாதங்களாக இத்தகைய சம்பவங்கள் பற்றிய தகவல்கள் வெளிவந்து கொண்டிருப்பதனால் அங்கு வாழும் மக்கள் பயந்து போயுள்ளனர். குதிரைகள், மாடுகள் மற்றும் பன்றிகள் ஆகியவற்றை இது தன்னுடைய கொடிய விரல் நகங்களால் பிராண்டித் தாக்கியும் கூரிய பற்களால் கடித்துக் குதறியுமிருக்கின்றது என்று நேரில் சில சம்பவங்களைக் கண்டவர்கள் கூறுகின்றனர்.

"இந்த மிருகத்தை ஒழித்துக் கட்டாவிட்டால் விரைவில் பல மனிதர்களின் கீறிக் கிழிக்கப்பட்ட சடலங்களை கண்டெடுக்க வேண்டி வரும். இதுவரை அவ்வாறு மனிதர்களுக்கு நடை பெறாமல் போனமை கடவுள் செயலே" என்று வன விலங்குகளின் பாதுகாப்பு அலுவலர் கூறுகிறார்.

கடந்த பெப்ரவரியில் மொபைலில் 7 பொலிசாரைத் தாக்கிய இந்த மனித ஓநாய் அவர்கள் பயணம் செய்த வாகனத்தையும் குடை சாய்த்து விட்டது. எப்படியோ இதனைப் பிடித்து அலபாமாவில் மொபைல் நகருக்கருகாமையிலுள்ள உச்சகட்ட சிறையில் பாதுகாத்து வந்தனர். ஆனால் இது சிறையிலிருந்து தப்பி காடுகளுக்குள் ஒடி மறைந்து விட்டது.

இந்த மனித ஓநாயால் இது வரை ஏற்பட்ட சம்பவங்கள் வருமாறு:

பாட்டன் றோக் என்ற இடத்திலிருந்து 14 மைல் தொலைவிலுள்ள ஓர் இடத்தில் பெற்றார் தங்கள் இரு பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு நீரோடைக்கருகில் ஓய்வாக அமர்ந்திருந்தனர். இதே நேரத்தில் அருகேயிருந்த வனத்துள்ளிருந்து இப்பிராணி அவர்கள் அருகே வந்திருக்கிறது. மனைவியும் பிள்ளைகளும் பயந்து கத்திய போது குடும்பத் தலைவர் தன்னுடைய துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தார். இப்பிராணி பயந்து காட்டுக்குள் சென்று மறைந்து விட்டது.

"அதனுடைய முகம் பயங்கரமாக இருந்தது. உடலிலும் முகத்திலும் ஊசி போன்ற உரோமம் படர்ந்திருந்தது. காதுகள் மேல் நோக்கி கூர்மையாகக் காட்சி தந்தன். கண்கள் மனிதக் கண்களைப் போல் குத்திட்டு நின்றன. மூக்கும் சற்று நீண்டிருந்தது. பற்கள் மிகவும் பயங்கரமாகத் தென்பட்டன. உறுமிக் கொண்டிருந்த அதன் வாயில் நுரை தள்ளியிருந்தது" என்று குழந்தைகளின் தாயார் கூறினார்.

மொபைலில் அட்டகாசம் செய்த அதே பிராணிதான் இவர்கள் கண்டதும் என்று அடையாளங்கள் தெரிவிக்கின்றன.

அர்க்கன்சாஸ் மாநிலத்தில் இரண்டு குதிரைகள், எட்டு பசுக்கள் மற்றும் பல பன்றிகள் இதனால் கொல்லப்பட்டுள்ளன. பண்ணைகளுக்குள் புகுந்து இந்த மனித ஓநாய் கோழிகளையும் கவர்ந்துள்ளது.

ரெனெசி மாநிலத்திலுள்ள ஜாக்சன் நகர்ப்புறத்தே மோட்டாரில் சென்ற ஒருவர்தன்னுடைய வண்டிச் சக்கரத்தை மாற்றுவதற்காக வண்டியை பாதையோரம் நிறுத்தியிருந்தார். இந்த மிருகம் அவருடைய முதுகைக் கடித்தது. முகத்தி லும் கைகளிலும் தனது கூரிய நகங்களால் கீறியிருக்கிறது.

புளோரிடாவிலுள்ள பென்சக்கோளாவில் ஒரு வோக்ஸ் வாகன் வண்டி நிறுத்தப்பட்டிருந்தது. இதில் பயணம் செய்தவர்கள் இந்த வண்டியிலிருந்து சற்றுத் தூரம் சென்றதும் இவர்களுடைய காதில் விழுந்த ஒருவகை ஓசை கேட்டுத் திரும்பிப் பார்த்த போது இவர்களுடைய மோட்டார் வண்டியை ஓர் அதிசயப்பிராணி தூக்கி அருகேயுள்ள மரத்தில் மோதியிருக்கிறது. "இது ஒரு சினிமாவில் வரும் பயங்கரக் காட்சியைப் போன்றிருந்தது" என்று அவர்கள் கூறினர்.

"இது ஒரு மனித உருக்கொண்ட வன விலங்கு" என்று பலரும் தெரிவித்துள்ளனர்.

மனித உருக் கொண்ட ஓநாய்கள் பல காலங்களில் பல இடங்களில் தென்பட்டுள்ளன. அமெரிக்காவின் பல மாநிலங்க ளில் மொத்தம் 1000 வரை இப்பிராணிகள் இருப்பதாக நம்பப்படுகிறது.

பிரேஸில் நாட்டில் 1990ல் 46 பேர் மனித ஓநாய்களால் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 37 பேரின் உடல்கள் தாறுமாறாகக் கிழிக்கப்பட்டிருந்தன. பிரான்ஸ், ஸ்பெயின், பிரிட்டன் ஆகிய நாடுகளிலும் இவை இருப்பதாகக் கூறப்படுகிறது.

மேலை நாட்டு இதிகாசங்களில் தேவதைகளின் சாபத்துக்குள்ளானவர்கள் மனித ஓநாய்களாக மாறி காடுகளில் திரிவது போன்ற கதைகள் உள்ளன.



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# லேடீஸ் ஸ்பெசல்

## நீங்களும் தைக்கலாம்

### ரியூனிக் சேட்

சிறுவர்களுக்கான மேற்சட்டை


| | |
|---|---|
| நெஞ்சுச் சுற்றளவு | 23" |
| நீளம் | 15" |
| முதலாவது குறுக்களவு | 5" |
| இரண்டாவது குறுக்களவு | 4 7/8" |
| செங்குத்து குறுக்களவு | 6 1/4" |

**வரையும் முறை:**


**முன்பக்கம்:**

நெஞ்சுச் சுற்றளவு 23" த்தை 4 ஆல் பிரித்து 5 3/4" த்தோடு 1" த்தைக் கூட்டி வரும் அளவான 6 3/4" த்தை அகலமாகவும் 15" த்தை நீளமாகவும் கொண்ட நீள்சதுரத்தினை வரையவும். முதலில் நீளப்பகுதியில் 10" த்தினை அளந்து எடுத்து இவ் அளவிற்கு A,B,C,D எனப் பெயரிட்டுக் கொள்ளவும். 5" பகுதியையும் E,F எனப் பெயரிடவும். Aயில் Bயை நோக்கி கழுத்தகலத்திற்காக 2 1/4" அளந்து Gஎனப் பெயரிடவும். Aயில் இருந்து Dயை நோக்கி கழுத் தாழத்திற்கும் 2 1/4" அளந்து H எனப் பெயரிட்டு இவ்விரு புள்ளிகளான G,H புள்ளிகளை வளைவான கோட்டினால் இணைத்து கழுத்தினைக் கீறவும். G யில் இருந்து B யை நோக்கி தோள் அகலத்திற்காக 3" அளந்து I எனப் பெயரிடவும். Iயில் இருந்து 3/4" அளந்து கீழ் நோக்கி J எனப் பெயரிட்டு G,J புள்ளிகளை நேர்கோட்டினால் இணைத்து தோள் சரிவினைக் கீறவும். கழுத்தாழம் புள்ளியான Hஇல் இருந்து Aகோட்டிற்கு சமாந்தரக் கோடாக 2 வரைந்து Kஎனப் பெயரிட்டு முதலாவது குறுக்களவைக் கீறவும். Hஇல் இருந்து 2"கீழ் பதித்து Lஎனப் பெயரிட்டு Lஇல் இருந்து முதலாவது குறுக்களவுகளுக்குச் செங்குத்தாக கழுத்தகலப் புள்ளியான Gயில் இருந்து 6 1/4" வரைந்து N எனப் பெயரிட்டுக் கொள்ளவும். Nஇன்னூடாக A,B க்குச் சமாந்தரக் கோடு வரைந்து OP எனப் பெயரிடவும். Pயில் இருந்து மேல் நோக்கி 1/2" அளந்து Qஎனப் பெயரிடவும். பின் J,K,M,Q ஆகிய புள்ளிகளை வளைவான கோட்டினால் இணைத்து கை வளைவினைக் கீறவும். Fஇல் இருந்து மேல் நோக்கி 1/2" அளந்து R எனப் பெயரிட்டு E,Fநேர் கோட்டை R உடன் வளைவாக இணைத்துக் கீறவும். H,E புள்ளியிலிருந்து வெளிநோக்கி 1/2" H,E கோட்டிற்கு சமாந்தரமாக கோடு வரைந்து கழுத்து வளைவாக மேலே கீறவும்.

முன்பக்கம்



பின்பக்கம்



**பின்பக்கம்:**

முன் பகுதி கீறிய அளவுகளுடனேயே நீள்சதுரத்தினை வரைந்து பெயர்களிடவும். பின்பக்கத்திலிருந்து கழுத்தாழத்திற்கு 1/4" மட்டுமே எடுத்து H எனப் பெயரிடவும். கழுத்தகலம், தோள் அகலம் எல்லாம் முன்பக்கத்தைப் போன்றே கீறவும். தோள் சரிவுப் புள்ளியிலிருந்து அதே அளவு நேராக A,D க்குச் செங்குத்து வரைந்து முதலாவது குறுக்களவைக் கீறவும். இக்குறுக்களவிற்கு 5 1/4" நீளம் எடுத்தல் வேண்டும். இரண்டாவது குறுக்களவைக் கீறுவதற்காக முதலாவது குறுக்களவு Kயில் இருந்து 3" கீழ் நோக்கி எடுத்து Lஎனப் பெயரிட்டு முதலாவது குறுக்களவிற்கு சமாந்தரமாக 5"வரை கோடு வரைந்து M எனப் பெயரிடவும். முன்பக்கத்தைப் போன்றே 6 1/4"வரை செங்குத்துக் கோடு வரைந்து மிகுதி யாவும் முன்பக்கத்தைப் போன்றே கீறவும். A,C.E நேர்கோட்டை மடிப்பாகக் கொள்ளவும்.

உமா மனோகரன்
(பாரிஸ் ஈழநாடு)

## சமைப்போம் சுவைப்போம்

– ஆக்கித் தருபவர் – அன்னபூர்ணா–

### சாம்பார்

தென்னிந்திய உணவில் சாம்பார் பிரதானமான இடத்தை வகிக்கின்றது. மதியம் மற்றும் இரவு உணவில் சாம்பார் நிச்சயம் இடம் பெறும். காலை வேளையில் இட்லி, தோசை பிரதானமாக, இருக்குமானாலும் மற்றைய வேளைகளில் சாதம் இருந்தாலும் நிச்சயமாக சாம்பார் மூன்று வேளைகளிலும் தனி ஆட்சி புரியத் தவறுவதில்லை.

நமது நாட்டின் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் குறிப்பாக 30 சதவிகிதத்தினர் வரை மட்டுமே சாம்பாரின் உருசியையும் பயனையும் கண்டிருப்பார்கள். ஏனையோரும் இதனை அனுபவத்தில் கண்டு உண்டு பயனடைய வேண்டும் என்பதற்காக இங்கு சாம்பார் தயாரிக்க விரும்பினோம்.

சாம்பாருக்கு முக்கியமான ஓர் அம்சம் துவரம் பருப்பு. இது இந்தியாவிலிருந்தே இறக்குமதி செய்யப்படுவதால் விலை சற்று அதிகமாகவே இருக்கும். சாம்பார் உருசியாக இருக்க வேண்டுமானால் துவரம் பருப்பினைத்தான் தேடவேண்டும். மைசூர் பருப்போ அல்லது கௌபீயோ இதற்குப் பொருத்தமாகத் தெரியவில்லை.

சாம்பாருக்குரிய பொடியினை முன்னதாகவே தயாரித்து வைத்துக் கொண்டு தேவையானபோது பாவிக்கலாம். ஆகவே சாம்பார் பொடி செய்யும் முறையினை முதலில் பார்ப்போம்.

#### சாம்பார் பொடி

**தேவையானவை:**

| | |
|---|---|
| காய்ந்த மிளகாய் | - கால் கிலோ |
| கொத்தமல்லி | - கால் கிலோ |
| துவரம்பருப்பு | - 2 மேசைக்கரண்டி |
| உழுந்து | - 2 மேசைக்கரண்டி |
| வெந்தயம் | - 1 மேசைக்கரண்டி |
| கராம்பு | - 6 |
| ஏலக்காய் | - 5 |
| கறுவாப் பட்டை | - 1 1/2அங்குல அளவான துண்டு |

**செய்முறை:**

காய்ந்த மிளகாயை, மிளகாய்த் தூளுக்கு வறுத்தெடுக்கும் பக்குவத்துக்கு, ஒரு அகலமான தாச்சியிலிட்டு மிதமான சூட்டில் வறுக்கவும். பதத்துக்கு வறுபட்டதும் அதனை வேறாக எடுத்து வைத்துவிட்டு கொத்தமல்லியையும் தனியாக வறுத்தெடுக்கவும். இதே போல உழுத்தம்பருப்பு, வெந்தயம் ஆகியவற்றை வறுக்கும் போது அளவான பருவம் வந்ததும் ஏலம், கராம்பு, கறுவாவை நசித்து உழுந்துடன் சேர்த்து வறுத்தெடுக்கவும். எல்லாம் வறுக்கப்பட்டதும் எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து நன்றாக ஆறவிட்டு பின்னர் பொடியாக்கி ஈரமில்லாத பாத்திரத்தில் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

இனி சாம்பார் தயாரிக்கும் முறைக்கு வருவோம்.

#### சாம்பார் தயாரிக்கும் முறை:

**தேவையானவை:**

| | |
|---|---|
| துவரம் பருப்பு | - 100 கிராம் |
| ஈர வெங்காயம் | - 15 |
| மிளகாய்த் தூள் | - 1 மேசைக்கரண்டி |
| கடுகு | - 1 மேசைக்கரண்டி |
| தக்காளிப்பழம் | - 2 |
| பெருங்காயம் | - 2 சிட்டிகை |
| நல்லெண்ணெய் | - 3 மேசைக்கரண்டி |
| (வேறு தாவர எண்ணெய்களும் பாவிக்கலாம்) | |
| சாம்பார் பொடி | - 1 1/2 மேசைக்கரண்டி |
| புளி | - தேவையான அளவு |
| உப்பு | - தேவையான அளவு |
| காய்கறி | - 1/4 கிலோ |
| மஞ்சள் தூள் | - தேவையான அளவு |
| கறிவேப்பிலை | - ஒரு நெட்டு |

கத்தரிக்காய், உருளைக் கிழங்கு, போஞ்சி, அவரை, கரட் போன்ற காய்களில் தனியாகவோ அல்லது இரண்டு மூன்று வகைகளை ஒன்று சேர்த்தோ சாம்பாரில் சேர்த்துக் கொள்ளலாம்.

**செய்முறை:**

துவரம் பருப்பை முதல் நாளிரவே கழுவி நீரில் ஊறவைத்துவிட வேண்டும். பாத்திரத்தை அளவான சூடுதரும் அடுப்பில் வைத்து எண்ணெயை விடவும். எண்ணெய் கொதிக்கும் போது கடுகு, சிறிதளவு சீரகம் மற்றும் கறிவேப்பிலையை எண்ணெயில் போடவும். காய்கறிகளை சிறு துண்டுகளாக வெட்டி எண்ணெயில் சற்று வதங்க விடுங்கள். அத்துடன் வெங்காயத்தையும் மேல் தோலும் வேர்ப்பகுதியும் நீக்கிய பின் எண்ணெயில் போடவும். தக்காளியையும் துண்டுகளாக வெட்டிப் போடவும். அத்துடன் அரை கோப்பை தண்ணீருடன் சாம்பார் பொடியையும் மிளகாய்த் தூளையும் கலந்து காய்கறிகளுடன் கொதிக்க விடவும். காய்கறிகள் மெது மெதுப்பாக வெந்ததும் ஏற்கனவே நீரில் இளகிய துவரம் பருப்பை வடித்தெடுத்து அதே அளவு தண்ணீர் போல 4 மடங்கு தண்ணீர் விட்டு கொதிக்கும் காய்கறிகளுடன் சேர்க்கவும். பாத்திரத்தை மூடி 5 நிமிடங்கள் கொதிக்க விடும் போது கலவைகள் ஒன்றாகச் சேர்ந்திருக்கும். இவ் வேளையில் மஞ்சள் தூளையும் உப்பையும் அளவாகச் சேர்க்க வேண்டும்.

புளியை நன்றாகக் கழுவி ஏற்கனவே சில நிமிடங்கள் ஊற வைத்திருந்தால் இப்பொழுது கையால் கசக்கி சாற்றை மட்டும் பிழிந்து கொதிக்கும் கலவையிலிட்டு நன்றாகக் கிளறி விடவேண்டும். இதே வேளை பெருங்காயத்தை பாத்திரத்தில் உட்பகுதியின் மேல் விரலால் அழுத்தமாக ஒட்டி விட்டால் மூடியபின் கொதி நீராவி பட்டு அதன் சாரம் சாம்பாரில் அளவாக சேர்ந்து விடும்.

இப்பொழுது சுடச்சுடச் சாம்பார் ரெடி.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

முதற்பரிசு - பட்டுச்சேலை
ஆறுபேருக்கு இல்ல உபயோகப் பொருட்கள்
ஆறுதல் பரிசுகளாக காத்திருக்கின்றன.

மகளிர் மட்டுமே பங்குகொள்ளும் இப்போட்டியில் பங்கு கொள்வதும் சுலபம். பரிசுகளை பெறுவதும் மகா சுலபம்.

முரசு 9 முதல் தொடர்ந்து 27வது வரை (15 முரசுகள்) லேடீஸ் ஸ்பெசல் தரும் விடயங்களை அவதானமாய் படித்துவாருங்கள்.

பின்னர் உங்களை நோக்கி கேள்விகள் தரப்படும். ஆக பதினைந்து கேள்விகள் மட்டும்.

சரியான விடை எழுதுவோரில் ஏழு பேரை பிரபல பிரமுகர் ஒருவர் தெரிவு செய்வார்.

## அழகுக் குறிப்புகள்



எப்போது தலைக்குக் குளித்தாலும் தலைக்கு ஷம்பூ அல்லது சீயக்காய் தூள் போட்டுத் தேய்த்தாலும் சரி வெது வெதுப்பான நீரில் குளியுங்கள். இதனால் தலை முடி பாதிக்கப் படாமல் நன்றாக வளரவும் செய்யும்.



கழுத்து நீளமாகவும் ஒல்லியாகவும் இருப்பவர்கள் கோடுகள் போட்ட கழுத்து மூடும்படியாக உள்ள பனியன்களை பயன்படுத்தவும். அத்துடன் வீ வடிவில் தைக்கப்பட்ட ஓவர் கோட் போட்டுக் கொண்டால் குறை தெரியாமல், அழகாக இருக்கும்.



வெய்யிலினாலும், வெப்பக் காற்றினாலும், முகம் வரண்டு போய் சொர சொரப்பாக இருக்கிறதா? தினமும் பால் அல்லது மோரை முகத்தில் பூசி அரைமணி நேரம் ஊற வையுங்கள். பிறகு குளிர்ந்த நீரில் கழுவி விடுங்கள். வெள்ளரி பிஞ்சுச் சாற்றையும் பூசலாம். நாளடைவில் உங்கள் முகம் புதுப் பொலிவுடன் மெத்தென்று இருக்கும்.



கண்ணில் போடப்படும் மேக்-அப்பைக் கலைக்கும் போது, சின்ன ரிஷ்யூ பேப்பர் அல்லது பஞ்சில் சிறிதளவு பேபி ஒயிலை (கடைகளில் கிடைக்கும்) நனைத்து மேக்-அப்பைத் துடைத்து எடுத்து விடலாம். சுத்தமாகி விடுவதோடு கண்ணிற்கும் நல்லது. வெறும் தேங்காய் எண்ணையும் போடலாம். ஆனால் இது சிறிதளவு கண்ணில் பட்டாலும் எரிச்சல் ஏற்படும்.

●

உதட்டுச் சாயம் பூசுவதற்கு முன் ஷடோவை சிறிதளவு பூசி விட்டு அதன் பிறகு உங்களுக்கு விருப்பமான நிற லிப்ஸ்டிக்கை பூசிக் கொள்ளலாம். இப்படிச் செய்வதால் பளபளப்பு கூடும். லிப்கிளாஸ் பூசுவதை விட இது சிறப்பானது.

●

நகப்பூச்சு பூசுவதற்கு முன் நக வெட்டியில் இருக்கும் சொர சொரப்பான பகுதியினாலோ அல்லது நகத்தை ஷேப் செய்வதற்கென்று உள்ள பிளேட்டினாலோ நகத்தை நன்றாகத் தேய்த்து, ஷேப் செய்து கொண்டு பிறகு பொலிஷ் பூசுங்கள்.


## அள்ளி முடியுங்கள்

பெண்கள் நடக்கும் போது ஒரேயடியாக முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு நடக்கக் கூடாது. அப்படி நடந்தால் கன்னங்களில் தேவைக்கு மீறி சதை ஏற்பட்டு முகத்தின் அழகு குறைந்து விடும்.

பெண்கள் எவ்வளவுக்கெவ்வளவு குறைவாக நகைகளை அணிகிறார்களோ அவ்வளவுக்கு பெண்களின் அழகு சோபிக்கும். அளவுக்கு மீறி நகை அணிந்து தமது செல்வப் பெருமையை விளம்பரப்படுத்தலாம். ஆனால் அழகை மிகைப்படுத்திக் காட்ட முடியாது.

வீட்டிலிருக்கும் போது பெண்கள் தங்கள் கூந்தலை அள்ளி முடித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு அடிக்கடி செய்து வந்தால் கூந்தல் கொட்டுவது நின்றுவிடும். முடியும் அடர்த்தியாக வளரும்.


## வீட்டுக் குறிப்புகள்




வீட்டில் அழகுக்காக வைக்கப்பட்டிருக்கும் தொட்டிகளுக்கு அதிகளவு தண்ணீர் தேவைப்படாது. சிலர் தொட்டியை தண்ணீர் இருக்கும் தட்டின் மீது வைத்திருப்பர். இதனால் செடி விரைவில் அழுகி விடக் கூடும். ஒரு நாள் விட்டு தண்ணீர் ஊற்றினாலே போதுமானது.



வனிலா ஐஸ்கிறீம் செய்து விட்டீர்களா? கூடுதலாக விருந்தினர் வந்து விட்டனர். ஐஸ்கிறீம் போதவில்லை என்று கவலைப்படாதீர்கள். வீட்டில் வாழைப்பழம், அப்பிள், பேரிச்சம்பழம், உலர்ந்த திராட்சை, கொய்யாப்பழம், பலாப்பழம் எது எது இருக்கிறதோ, அந்தப் பழங்களை எல்லாம் துண்டு துண்டாக நறுக்கி ஐஸ்கிறீமுடன் கலந்து விடுங்கள். 'ஃப்ருட் சாலட்'டாக அனைவருக்கும் பரிமாறுங்கள். பற்றாக்குறை ஏற்படாமல் அனைவருக்கும் போதியளவு இருக்கும்.



சலவைக் கல்லால்ஆன தரையைச் சுத்தப்படுத்த வேண்டுமானால் சுண்ணாம்புத்தூள் (சோக் பவுடர்) ஒரு பங்கு, அப்பச் சோடா இரண்டு பங்கு நீருடன் கலந்து சலவைக் கல் தரையில் ஊற்றி, சிறிது நேரம் ஊற வைக்க வேண்டும். பிறகு 'ஸ்பொஞ்' கொண்டு அழுந்தத் துடைத்து விட வேண்டும். தரை பளபளப்பாகி விடும்.



வீட்டுச் சுவர்களுக்கு 'வோல் பேப்பர்' ஒட்டி விட்டீர்களா? அதில் மீதான வோல் பேப்பரைச் சுருட்டிப் பரணில் போட்டு விடாமல், அறையினுள் இருக்கும் குப்பைக் கூடை மீது ஒட்டி விடுங்கள். சுவருக்கு 'மச்'சாக இருப்பதோடு வித்தியாசமாகவும் இருக்கும்.




பாத்திரத்தையோ, தரையையோ சுத்தப்படுத்த நைலோன் பிரஷ் பயன்படுத்துவதற்குப் பதிலாக ஸ்பொஞ்சைப் பயன்படுத்துங்கள். சலவைத் தூள் வீணாகாமல் இருப்பதோடு, கைகளுக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

www.padippakam.com

# சினிவிசி

மூன் அட்டையில் இருப்பது
அட... மீனா—
அழகுதான்!



## அன்றைய நெப்போலியன் படைக்களத்தில் இன்றைய நெப்போலியன் படவுலகில்!

இயக்குநர் பாரதிராஜா புதிய முகங்களை பலரை திரை உலகுக்கு அறிமுகம் செய்தவர். தான் அறிமுகம் செய்தவர்களை தனது அடுத்தடுத்த படங்களில் அவர் நடிக்க வைப்பது மிகக் குறைவு.

ஆனால் நெப்போலியன் விஷயத்தில் கதையே வேறுதான். புது நெல்லு புது நாத்து படத்தில் வில்லனாக நெப்போலியனை அறிமுகப்படுத்தினார். அதிலிருந்து தொடர்ந்து பாரதிராஜாவின் சகல படங்களிலும் நெப்போலியன் உண்டு. நெப்போலியனின் திறமையில் பாரதிராஜாவுக்கு அத்தனை நம்பிக்கை. நெப்போலியன் இப்போது தமிழில் மட்டுமல்ல தெலுங்கு மலையாள படங்களிலும் படு பிசி. தமிழில் தாலாட்டு என்னும் படத்தில் அவர்தான் நாயகன் [illegible]

அந்தக்கால நெப்போலியன் படையெடுத்து முன்னேறினார். இந்த நெப்போலியன் படம் நடித்து முன்னேறுகிறார். வெற்றியே குறி!

## வெளுத்து வாங்கும் விஜயசாந்தி!

விஜயசாந்தி என்றால் அடி, பிடிக்கு குறைவில்லை. இடையே கவர்ச்சியும் பஞ்சம் வைப்பதில்லை.

போலீஸ் லாக்கப் விரைவில் தமிழுக்கு மொழி மாறி திரை அரங்குகளுக்கு வரப் போகிறது. விஜயசாந்தி இரு வேடங்களில் வெளுத்து வாங்கியிருக்கிறார்.

பல நடிகைகள் மூவரும் கூட அடி தடி விவகாரங்களுக்கு விஜயசாந்திதான் பொருத்தமான நடிகை என்பது ஒப்புக் கொள்ளப்பட்ட சமாச்சாரம். போலீஸ் லாக்கப் அதை மேலும் உறுதி செய்யலாம்.

## ஜனவரியில் ராஜகுமாரன் திரையில்!

[illegible]



போலீஸ் லாக்கப் படத்தில் விஜயசாந்தி

## இப்போது மணிரத்தினமும்

பாரதிராஜாவுக்கும்- பாலச்சந்தருக்கும் கூட குஷ்பூ தேவைப்பட்டார். குஷ்பூவை நம்பி படமெடுக்கும் கட்டாயத்தில் அவர்களும் சிக்கிக் கொண்டார்கள். ஆனாலும் படங்கள் ஓடவில்லை. இப்போது இயக்குநர் மணிரத்தினமும் குஷ்பூவை நோக்கி ஓடியிருக்கிறார். படத்தில் நடிக்க கூப்பிடவில்லையே தவிர பாடல் கசட்டை வெளியிட்டு வைக்க குஷ்பூவை அழைத்தார். திருடா-திருடா பாடல் கசட்டை வெளியிட்டது யார் என்கிறீர்கள்? சாட்சாத் குஷ்பூவேதான்.



## விஜயகாந்த் ஜோடி ஜெயசுதா

விஜயகாந்த் நடிக்கும் ராஜதுரை பற்றி ஏற்கனவே சொல்லியிருந்தோம். விஜயகாந்த் இரு வேடங்களில் நடிக்கிறார். தந்தை-மகன். தந்தைக்கு ஜோடி ஜெயசுதா. மகனுக்கு ஜோடி சிவரஞ்சனி.

வழக்கமாக இயக்குநர் சந்திரசேகர் விஜயகாந்த் கூட்டு வெற்றி பெறுவதுண்டு. ராஜதுரையும் வெற்றிநடை போடுமா? என்கிறார்கள்.

## காதோடு சொல்லுகிறோம்

★ [illegible]

★ [illegible]

★ [illegible]

★ [illegible]

★ [illegible]

★ [illegible]

# மாடியால் விழுந்த நட்சத்திரத்தால் கோடிகள் திட்டும் புதிய நட்சத்திரம்!

கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்குமாம். ரம்பாவுக்கு மாடியில் இருந்து விழுந்த நட்சத்திரம் சரண்கி நோட்டுக்களாகக் கொட்டுகிறது.

திவ்யபாரதி மாடியில் இருந்து விழுந்த போது தாமும் கூடவே விழுந்திருக்கலாம் என்று தலையில் கைவைத்தபடி இருந்த தயாரிப்பாளர்கள் ரம்பாவை தேடி படையெடுக்கிறார்கள்.

முதலில் திவ்ய பாரதி நடித்து பாதியில் விட்ட துறையை தொடரத்தான் ரம்பாவை அழைத்தார்கள். ரம்பா தன் திறமையை வெளிப்படுத்தியதால் இப்போது புதிய பட வாய்ப்புகளும் தேடி வருகின்றன. திவ்யா போனால் என்ன? திவ்யமான ரம்பா கிடைத்து விட்டார். ஆளைப் பிடி படத்தை எடு என்று வாரி கொட்டியில போடு. வியாபாரமே உலகம்.



## இமயத்தின் இல்லத்தில் முதல் இடம் கமலுக்கு!

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மீது மாபெரும் அன்பும் மரியாதையும் கொண்டவர் கமல். சிவாஜியும் கமலை தன் பிள்ளை போல என்று அடிக்கடி சொல்வதுண்டு.

சமீபத்தில் ஒரு பத்திரிகைப் பேட்டியில் பிரபு கூறியது இது "பிரபு நான் தான் உங்க அப்பாவுக்கு தலைப்பிள்ளை. அடுத்தது ராம்குமார். பிறகுதான் நீ" என்பாராம் கமல்.

## மினி சினி

★ பாக்கியராஜ் கதாநாயகனாக நடிக்கும் வீட்ல விசேஷங்க படத்தில் ஆம்னி என்னும் புதுமுகமும், ஒரு கீக கீக படத்தில் மோகனா, பிரகதி என்னும் இரு புது முகங்களும் பாக்கியராஜிற்கு ஜோடியாக நடிக்கிறார்கள்.

★ அக்கரைச் சீமையிலே படத்தில் மூன்று கதாநாயகர்களுள் ஒருவராக ராஜகாந்த் என்னும் மதுரைக்காரர் ஒருவர் அறிமுகமாகிறார். ரஜினிகாந்த் போல் வரவேண்டும் என்பதற்காகத்தான் பெயரை இப்படி வைத்திருக்கிறார்.

★ ராதாரவி தயாரித்து நடிக்கவிருக்கும் படத்திற்கு சின்னமுத்து என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தை அண்ணாமலை திரைப்படத்திற்கு வசனம் எழுதிய சண்முகசுந்தரம் இயக்குகிறார்.

★ எம்.ஜி.ஆர் நகரில், புத்தம் புது பயணம் போன்ற படங்களில் நடித்த கண்ணன் செண்பகம் படத்தில் வாலேரியுடனும், பட்டு வண்ணச் சிட்டு படத்தில் மீனாட்சியுடனும் ஜோடி சேர்ந்து கதாநாயகனாக நடித்து வருகிறார்.

★ உழைப்பாளி படத்தைத் தயாரித்த நாகிரெட்டி, பாலகிருஷ்ணா, ரோஜா நடிக்கும் பைரவதீபம் என்ற படத்தை தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் தயாரிக்கிறார். சிங்கீதம் சீனிவாசராவ் இப்படத்தை இயக்குகிறார்.

★ பொண்டாட்டி ராஜ்ஜம் படத்தில் இரண்டாவது கதாநாயகனாக நடித்த ராஜா ரவீந்தர், கேயார்ரவிக்குமார் இயக்கும் புருஷ லட்சணம் படத்தில் பிரதான வில்லனாக நடிக்கிறார்.

★ குடும்பக் கதைகளை வைத்துத் தரமான படங்களை வழங்கும் இயக்குநர் வி.சேகர், கல்யாணக் கூட்டணி என்னும் தொலைக்காட்சித் தொடரை உருவாக்குகிறார்.

★ தீவித்யாரிக்கும் படமொன்றில் கதாநாயகனாக சத்தியராஜ் நடிக்க இருக்கிறார். சூரியன் படத்தை இயக்கிய பவித்ரன் இயக்கும் இப்படத்திற்கு ஜென்டில்மேன் என்று பெயரிடப்பட்டுள்ளது.

★ பழம்பெரும் இயக்குநர் ஸ்ரீதரின் தயாரிப்பில் உருவாகும் படமொன்றில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிக்கவுள்ளார். இப்படத்தை ஸ்ரீதரிடம் உதவி இயக்குநராக இருந்து இப்போது நட்சத்திர இயக்குநராக இருக்கும் பீவாச இயக்குகிறார்.

★ அம்பாலயா பிரபாகரன் தயாரிக்கும் படத்தில் இராமராஜன் கதாநாயகனாக நடிக்கவுள்ளார். கங்கை அமரன் இயக்கும் இப்படத்திற்கு இளையராஜா இசையமைக்க மறுத்து விட்டார்.

## …த்தக்காலப் பாடல்கள் …த்தக் காலச் சிறுவர்கள்

…வதுக்கு வராதவர்களும் கண்டிப் … பார்க்கலாம். அப்படியொரு …ரம் போட்டால் கூட ஆச்சரிய… ஏன் எனில் இது 15 வயதிற்கு …ட்டவர்கள் நடிக்கும் படம். படத்தில் … புதிய உலகம்.

…தற்காக சிறுவர்களின் படம் என்று …சியமாக இருந்து விடாதீர்கள். …றையும் முன்னணிக் கதாநாயகர்கள் … தாங்கு முன்னர் இருந்தவர்களின் … பின்பற்றி நடிக்கிறார்கள். …தயெல்லாம் தூக்கிச் சாப்பிடும் … சிறுவர் சிறுமியர் எம்.ஜி.ஆர் … மற்றும் முன்னணி நாயகர்கள் … அவர்கள் பாணியில் நடித்து … எடுக்கப் போகிறார்களாம்.

…பெ வா படத்தில் எம்.ஜி.ஆர்-…தேவி ஜோடி நடித்த ராஜாவின் … பக்கம் பாடல் … போல் நடித்து அசத்தப் …றார்களாம்.

…னொரு செய்தி. அட்டகாசமான …ட் காட்சிகளிலும் புகுந்து விளை… போகிறார்கள்.

…டை ஓ.கே. நகைச்சுவை? அதுவும் … பாலையா முதல் … கவுண்டமணி செந்தில் வரை … பாணியிலும் சிறுவர்கள் …ப் போகிறார்கள் பாருங்கள்.

## பாடுவதில் மாத்திரமல்ல பண்பட்ட நடிப்பிலும்தான்!

அந்த பெரிய உடம்போடு பாடுகிறார் பாருங்கள். அதை விட அந்த உடம்போடு கதாநாயகனாக ரசிகர்களை கவர்கிறார் பாருங்கள். உண்மையாகவே அவர் பெரிய ஆள்தான்.

எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தைத் தான் சொல்லுகிறோம். கேளடி கண்மணியில் தன் அலட்டல் இல்லாத அடக்கமான நடிப்பால் நாளடி கண்ணு என்று சொல்ல வைத்தவர் பாலு.

அதன் பின் பல வாய்ப்புகள். இப்போது பூங்காற்று புதிதானது படத்தில் பாலுதான் நாயகன். ஜோடியாக ஒருவரல்ல இருவர். லட்சுமி மற்றும் நதியா.

நதியாவுக்கு பூ ராசி. பூவே பூச்சூடவா புகழ் நாயகி இப்போது பூங்காற்று புதிதானது படத்திலும் இரு நாயகிகளில் ஒருவராகி விட்டார்.

பாலுவுக்கு டாக்டர் வேசம். லட்சுமிக்கும் அதே வேசம். படம் முழுக்க முழுக்க பெண்களை முதன்மைப் படுத்தும் கதைதானாம்.

நடிப்பில் லட்சுமியோடு போட்டியிட வேண்டிய கட்டாயம் பாலுவுக்கு. அதனால் என்ன? பாலு வேசப் பட்ட ஆளா என்ன?





## கௌதமியின் கஷ்ட காலம்

படம்- ஜென்டில் மேன்
நாயகன்-அர்ஜுன்-நாயகி-மதுபாலா.
இயக்கம்-புதுமுகம் ஷங்கர்.
இசை. ஏ.ஆர்.ரகுமான்.

கல்வியை கடைச்சரக்காக்கி வியாபாரம் செய்யும் கும்பலை தோலுரித்துக் காட்டும் முயற்சி.

அர்ஜுனுக்கு அருமையான சந்தர்ப்பம்.

யாழைப்பழத்தை உரித்து வாயில் வைத்தமாதிரி, சண்டைக் காட்சிகளில் ஆக்சன் கிங் அதிரவைத்து நல்ல மார்க்கட்டை உரை வைத்துவிட்டார்.

மதுபாலா- மோசமேற்றுகிறார். கவுதி கவுண்டமணி தலைச்சுவையில் இரட்டை அர்த்தங்களுக்கு பஞ்சம் இல்லை. காஜிரம் தன்னிடம் இருப்பதை விருந்தாக்குவதில் வெட்கமே இல்லை.

முன்னாள் நாயகி கௌதமி சிக்கு புக்கு ரயிலு பாடலுக்கு வந்து பிரபு தேவாவுடன் ஆட்டமிருக்கு சவால் விடுகிறார் போங்கள். பிரபு தேவாவின் ஆட்டம் தூள். கௌதமிதான் பாவம் எப்படியிருந்தவர் இப்படியாகிவிட்டாரே.

தமிழகத்தில் சமீபத்தில் வந்த படங்களில் ஜென்டில் மேன் வசூலில் வெற்றியை பொடுகிறது. நம் நாட்டு சினிமாத்திரைகளிலும் நல்ல வரவேற்பு.

பொழுதைப் போக்குவதற்கு மஞ்சமில்லாத காட்சிகள் உள்ள படம் வருவதற்கு என்ன குறை?

இயக்குநர் ஷங்கருக்கு முதல் படமே வெற்றி. இனி புதுப்படங்கள் தேடி வரும். சோஷன்ஸ் இனி பிசி.



## இனிக்குமா முள்ளின் முத்தம்?

இலங்கையில் தமிழ் திரைப்படத் துறை தவழ்ந்து, எழுந்து, விழுந்து மீண்டும் தவழ்ந்து. பின்... இப்படியாக பெரிய முன்னேற்றம் இல்லாத நிலைதான் என்று தெரியுமதானே.

ஆனால் இலங்கையில் இருந்து தமிழ்நாடு சென்று தமிழ் திரையுலகில் தனியாசனம் தேடிக் கொண்டவர்கள் பலர்.

இப்போது மற்றுமொருவர்.

அவர்தான் சிலோன் விஜேந்திரன். ஊமை பிரேமராகத்தில் விழி உருட்டி மிரட்டியவர். வேறு சில படங்களிலும் தலை காட்டியவர். பெரிய வாய்ப்புகள் இல்லை. கலைஞர் கருணாநிதியின் திரை இசைப் பாடல்களை தேடித் திரட்டி புத்தகம் ஒன்றும் வெளியிட்டார். மேலும் சில புத்தக முயற்சிகள். இப்படியாகப் பட்ட நேரத்தில் இப்போது ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

கதை வசனம் பாடல்களை அவரே மொத்தமாகப் பொறுப்பேற்று ஒரு படம் செய்யப் போகிறார். பெயர் சற்று வித்தியாசமான ரகம். முள்ளின் முத்தங்கள். முயற்சி வாகைாமல் வெற்றியாக பலித்தால் சரிதான்.

## அடக்கமான ஐஸ்வர்யா

படங்களில் போலீஸ் வேசம் போடாத ஹீரோக்கள் அரிதிலும் அரிது.

ஹீரோவாக வளர்ந்து வரும் அருண் பாண்டியனும் போலீஸ் வேசத்தில் ஒரு போடு போடப் போகிறாராம்.

படத்தின் பெயரே அதிரடியான பெயர்தான். போலீஸ் அட்டாக்.

போலீஸ் அட்டாக் இப்போது சினிமாஸ்கோப்பில் தயாராகிவருகிறது.

முக்கியமான செய்தி- உள்ளே வெளியே புகழ் ஐஸ்வர்யா போர்த்தி மூடியபடி அடக்கமான குடும்பப் பெண்ணாக நடிக்கிறாராம். மனோரமாவும் முக்கிய வேடத்தில் தோன்றுகிறார்.

அது சரி-ஐஸ்வர்யாவை அறைந்த பட்சம் ஒரு கனவுப் பாடலில் என்றாலும் காற்றோட்டமான உடையில் உலாவ விடாமல் தடுக்கவோ போகிறார்கள். இல்லைத்தானே. பிறகென்ன.

## …முடி போச்சு …ைசை போச்சு

## …க்கட அவுட்டும் …மறைவில் …ரசிகரும்!





www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# பாப்பா முரசு

## முரட்டுப் பையன்

சத்திரப்பட்டி என்ற ஊரில் நல்லசிவம் என்றொரு பணக்காரர் இருந்தார். அவருக்கு மோகன் என்ற ஒரு மகன் இருந்தான். அவனுக்குப் பத்து வயது. பள்ளிக்கூடத்தில் படித்தான்.

நல்லசிவத்திற்கு அவன் ஒரே மகன். இதனால், அவன் மிகவும் செல்லமாக வளர்ந்தான். அளவுக்கு மீறி செல்லமாகவும், செல்வச் செழிப் புடனும் வளர்ந்ததால் கஷ்டம் என்றால் என்னவென்றே அவனுக்குத் தெரியாமல் இருந்தது. ஆகவே, அந்த சிறுவயதிலேயே அவன் மிகவும் முரடனாகவும், ஈவிரக்கமில்லாத குணம் கொண்ட துஷ்டனாகவும் இருந்தான்.

கண்ணில் படும் மிருகங்களையும், பறவைகளையும் கல்லாலும் வில்லாலும் அடித்து அவை துன்புறுவதைப் பார்த்துச் சந்தோசம் கொள்வான்.

அவன் வசிக்கும் தெருவில் ஏழ்மை நிலையில் உள்ள பலர் குடிசை போட்டு வசித்து வந்தனர். அவர்கள் நிறைய கோழிகள் வளர்த்தனர். அந்தக் கோழிகள் சில சமயம் அவன் வீட்டுப் பக்கம் வந்து விட்டாலே போதும், அவனுக்குச் சுரீர் என்று கோபம் வரும். உடனே கற்களை எடுத்து அவைகளின் மீது அடித்துத் துரத்துவான். கல்லடிபட்ட அவைகள் கத்திக் கொண்டே ஓடுவதைப் பார்த்துச் சந்தோசம் கொள்வான். அவனால் ரத்தம் சொட்டச் சொட்ட அடிபட்டு ஓடிய கோழிகளுக்கு அளவே இல்லை.

அவனது தாயார், வீட்டின் மொட்டை மாடியில் அப்பளம், வற்றல், வடாம் எல்லாம் போட்டு உலர வைப்பாள். அவற்றைக் கொத்தித் தின்ன நிறைய காக்கைகள் வருவதுண்டு. ஆனால் அவைகளும் அவனின் வில்லடியிலிருந்து தப்பாது.

வில்லில் சிறு கல்லை வைத்துக் குறி பார்த்து அடிப்பதில் அவன் வல்லவன். இதனால் பல காக்கைகள் அவனது அடியைத் தாங்காது அலறிக் கொண்டு ஓடும்.

இதே போல் அந்தத் தெருவில் வரும் நாய், பூனை, கழுதை முதலிய விலங்குகளையும் ஓட ஓட விரட்டி அடிப்பான்.

அவைகள் ஓலமிடுவதைப் பார்த்து மனம் நிறைய பூரித்துப் போவான். அவனது தாய், தந்தையருக்கும் அவனது இந்தக் கொடூர குணம் தெரியும். ஆனாலும் அவன் ஒரே செல்ல மகன் என்பதால், ஏனோ அவனைக் கண்டிக்க முன்வரவில்லை. அவன் மனம் எந்த விதத்திலும் துன்பப்பட்டு விடக்கூடாது என்பதே அவர்களின் விருப்பமாக இருந்தது. இதை நன்றாகவே அறிந்து வைத்திருந்தான் மோகன். அதனால், தன்னைக் கண்டிக்க யாருமில்லை என்கின்ற தைரியத்தில் அவனது கொடூரம் கொடி கட்டிப் பறந்தது.

ஆனால் எத்தனை நாள்தான் அந்தக் கொடூரம் நிலைக்கும்?

ஒரு நாள் அவன் தன் நண்பர்களுடன் மைதானத்தில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தான். அப்பொழுது ஒருவன் அடித்த பந்து மிகவும் வேகமாகப் பறந்து வந்து, சற்றும் எதிர்பாராத விதமாக அவன் தலையைத் தாக்க,

அடுத்த வினாடியே, "அம்மா!" என்று அலறிக் கொண்டே மைதானத்தில் விழுந்து துடித்தான். அந்த இடத்தில் சிறு சிறு கற்கள் வேறு கிடந்தன. அவற்றின் மேல் அவன் விழுந்ததால் கற்கள் வேறு அவன் உடலின் பல பாகங்களிலும் குத்தி இரத்தக் காயத்தை உண்டாக்கி விட்டன. இதனால் அவனுக்குத் தலை சுற்றி மயக்கமும் வந்து விட்டது.

நண்பர்கள் ஓடிப் போய் அவன் வீட்டில் விசயத்தைச் சொல்ல, அவன் தாய், தந்தை இருவரும் அலறியடித்துக் கொண்டு மைதானத்திற்கு ஓடி வந்தார்கள். அவனைத் தூக்கிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினார்கள். தலையிலும் உடம்பிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டிருந்ததால் அவன் பல நாட்கள் ஆஸ்பத்திரியிலேயே சிகிச்சைக்காகத் தங்க வேண்டி இருந்தது. அவனது காயங்கள் அவ்வளவு எளிதில் குணமாகவில்லை. இதனால் அவன் பெரிதும் துன்பப்பட்டான். தினமும் மருத்துவர் வந்து அவனுக்கு ஊசி போட்டு, எரிகின்ற மருந்தை அவனது காயங்களில் தடவிக் கட்டுப் போடும் போது, வலி தாங்காமல் கதறி அழுதான்.

அவன் படும் துன்பத்தைப் பார்த்து அவனது பெற்றோரும் துடித்துப் போனார்கள். கண் கலங்கினார்கள். அவன் பிற உயிரினங்களை அடித்து வதைத்ததால் தான் அவனுக்கு இப்படி ஒரு நிலைமை உண்டானது என்பதை அவர்களும் உணர்ந்தார்கள்.

விரைவில் மோகனும் அதை உணர்ந்தான்.

காயங்கள் ஆறி பூரண குணமடைந்து வீட்டிற்கு வந்ததும் அவன் குணமே மாறிவிட்டிருந்தது. வீட்டின் பக்கம் வரும் உயிரினங்களைக் கனிவோடு பார்க்க ஆரம்பித்தான். காக்கை கோழிகளுக்குத் தானியங்களை அள்ளிப் போட்டான். அவை மிகுந்த மகிழ்ச்சியோடு உண்பதைப் பார்த்து மிகவும் சந்தோஷம் கொண்டான்.

இனிப் பிற உயிர்களிடம் அன்பு செலுத்துவதைத் தவிர வேறு எந்தத் துன்பத்தையும் செய்யப் போவதில்லை என்று உறுதி எடுத்துக் கொண்டான்.



அவனது மனம் மற்றும் செயல் மாற்றங்களைக் கண்டு அவனது பெற்றோரும் அக மகிழ்ந்தார்கள்.

குழந்தைகளே! பிற உயிர்களிடம் நாம் மிகுந்த அன்பு செலுத்த வேண்டும். அவற்றைக் கொடுமைப்படுத்தும் போது அவற்றின் வேதனை நமக்குத் தெரியாது தான். ஆனால், அதே போன்ற ஒரு கொடுமை நமக்கும் ஏற்படும் போதுதான், பிற உயிர்களின் வேதனையை நாம் உணர முடிகிறது. இத்தகைய துன்பம் நமக்குத் தேவையா? உயிர்கள் மேல் அன்பு வைத்தால் நமக்குத் துன்பம் என்பதே இல்லை என்பதை உணர்ந்து கொண்டீர்களா? ●

## வர்ணம் தீட்டும் போட்டி இல.2

### பரிசிற்குரியவர்

எஸ்.பிரசாந்த்
விவேகானந்தா கல்லூரி
கொழும்பு-13.

### பாராட்டுக்குரியவர்கள்

* எஸ்.சகிலன்
  சிலாபம்.
* பா.பிரசாந்தன்
  திருகோணமலை.
* எம்.கே.சுபைதீன்
  மதீனா மகாவித்தியாலயம்-பகமுன.
* ஷிஹாபத் வஸீர் மொகமட்
  களு/ அல்-ஹுமைஸரா மத்திய கல்லூரி.
* கே.புஷ்பலதா
  வவுனியா.
* கல்யாணி சிவதேவப்பிரியா
  மெதடிஸ்த பெண்கள் கல்லூரி
  திருகோணமலை.
* உ.சிறீதரன்
  சிவானந்தா வித்தியாலயம்
  மட்டக்களப்பு.
* வி.சுதர்சன்
  கல்முனை-02.
* வி.பாரதி
  பொகவந்தலாவ.
* எம்.ஏ.சி.முகமட் பாஸி
  புத்தளம்.
* எஸ்.விஜயலட்சுமி
  கம்பளை.
* முகமட் பர்ஸான்
  பொலநறுவை.
* எம்.சுப்ரமணியம்
  றோ.க.தக.வித்தியாலயம், கிருலப்பனை.
* பசீனா இப்ராஹிம்
  கொழும்பு-10.
* சு.அருண்குமார்
  பதுளை.
* எஸ்.சிவப்பிரியா
  மாத்தளை.
* எம்.எஸ்.அமானுல்லா
  அக்குறணை.
* ராகுலராஜ் நடராஜ்
  நுவரெலியா.
* கே.எம். றிஸ்மினா
  மாத்தளை.
* எம்.ரேணுகா
  கண்டி.
* இ.தமிழினியன்
  கொழும்பு-13
* எம்.எவ்.எம். றின்சான்
  காத்தான்குடி-06.
* எஸ்.ஜெயலட்சுமி
  அரசினர் தமிழ் வித்தியாலயம்
  கொட்டாஞ்சேனை.

## காடுகளை அழித்தல் கூடாது

எமதுநாடு நீர்வளம் நிலவளம் நிறைந்ததாகும். இதன் பயனாக நாடெங்கும் அடர்ந்த காடுகள் காணப்படுகின்றன. முதிரை, தேக்கு, சென்டலை, பாலை, கருங்காவி, வேம்பு போன்ற உயர்சாதி மரங்கள் இக்காடுகளில் காணப்படுகின்றன. அத்துடன் வேறு பல மரங்களும் காணப்படுகின்றன.

ஆனால் இன்று அவை அனைத்தும் அழிக்கப்படுகின்றன. பாதைகளை அமைப்பதற்கும் புதிய கிராமங்களை அமைப்பதற்கும் விறகு, மின்சாரம், வீடுகட்டுதல் போன்றவற்றிற்கும் அவை அழிக்கப்படுகின்றன.

மழை பெய்வதற்கு வேண்டிய குளிர்ச்சியை மேகங்களுக்குக் கொடுப்பது மரங்களேயாகும். காடுகள் அழிக்கப்படுவதால் மழை பெய்யாது. மழை பெய்யாவிட்டால் உணவு தரும் தாவரங்கள் அழிந்துவிடும். தாவரங்கள் அழிந்தால் உயிரினங்களும் மடிந்து விடும்.

பல்லாயிரக்கணக்கான உயிரினங்கள் மரங்களிலேயே வாழ்கின்றன. மரங்களிலேயே இரை தேடுகின்றன. காட்டு விலங்குகள் மரங்களிலேயே மறைந்து வாழ்கின்றன. காடுகள் அழிக்கப்படுவதால் அவை அனைத்தும் அழிந்து விடும். காடுகள் அழிக்கப்படுவதால் மூலிகைகளும் அழிந்து விடுகின்றன. எனவே இத்தகைய பேரழிவைத்தரும் செயலைச் செய்யக்கூடாது.

காடுகளைப் பாதுகாப்பதற்கு பல புதிய மரங்களை நடவேண்டும். காட்டு வளத்தை பெருக்குவது நாட்டு வளத்தை அதிகரிக்கும் செயலாகும்.

ஏ.நஜீம்
கமு/அல் பாத்திமிய்யா வித்தியாலயம்
அக்கரைப்பற்று-01.

## தேசியக் கொடிகளில் இப்படியும் உண்டு?

'R' என்னும் எழுத்தை தமது தேசியக் கொடியில் பதித்துள்ள நாடு- ருவண்டா.
முற்றாக பச்சை நிறமுடைய தேசியக் கொடியை கொண்ட நாடு- லிபியா.
துப்பாக்கியை தேசியக் கொடியில் பதித்துள்ள நாடு- மொஸம்பிக்.
சேவலை தமது தேசியக் கொடியில் பதித்துள்ள நாடு- சிம்பாப்வே.
அதிகமான தேசியக் கொடிகளில் பதித்துள்ள சின்னம்- நட்சத்திரம்.
பாம்பையும் கருடனையும் தேசியக் கொடியில் பதித்துள்ள நாடு- மலேசியா.

பா.ஷிப்ரியா
தமிழ் மகா வித்தியாலயம் - ஹப்புத்தலை.

## என்ன காரம்?

புகழ் வாய்ந்த நூல் சிலப்பதிகாரம்.
பள்ளி செல்லுமுன் பார்ப்பது கடிகாரம்.
ஆணும் பெண்ணும் செய்வது அலங்காரம்
காலையில் உண்பது பலகாரம்.
தப்பு செய்தால் தேடுவது பரிகாரம்.


ஞா.தயாளினி
விபுலானந்த தமிழ் மகா வித்தியாலயம்
கொழும்பு.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்

### போட்டி இல—4

கீழே உள்ள படத்திற்கு அழகாக வர்ணம் தீட்டி அனுப்பி வையுங்கள். தெரிவாகும் அழகான வர்ணப்படம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. தபாலட்டைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். அனுப்பவேண்டிய கடைசித்திகதி 4.9.93.

வர்ணம் தீட்டும் போட்டி இல-04
தினமுரசு வாரமலர்
88/14 சோமாதேவி பிளேஸ்
கொழும்பு-5.



## நான்கு வகைகள்

சதுரங்கம்- தேர், கரி, பரி, காலாள்
அரண்கள்- மலை, காடு, மதில், கடல்
அளவுகள்- எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல்
வாழ்க்கை நிலைகள்- பிரமச்சரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், சந்நியாசம்
உபாயங்கள்-சாமம், பேதம், தானம், தண்டம்
உரைகள்- கருத்துரை, பதிவுரை, பொழிப்புரை, அகலவுரை
கவிகள்- ஆசுகவி, மதுரகவி, சித்திரக்கவி, வித்தாரக்கவி
பதவிகள்- சாலோபம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம்
பாக்கள்- வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா
யாழ்வகை- பேரியாழ், சகோடயாழ், மகரயாழ், சேங்கோட்டியாழ்
யுகங்கள்- கிரேதயுகம், திரேதயுகம், துவாபரயுகம்,' கலியுகம்
வர்ணங்கள்- பிரம, சத்திரிய, வைசிய, சூத்திர
வேதங்கள்- இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்.

செல்வி-த.சர்வேஷ்வரி
நல்லாயன் மகளிர் கல்லூரி
நுவரெலியா.


## கட்டெறும்பு

கட்டெறும்பு மாமாவே
கண்டுவிட்டேன் ஓடாதீர்
வீட்டில் குடி இருந்து நீர்
வீண் வம்பு பண்ணாதீர்.

"சுறுக்" கென்று எங்களை
உரிமையோடு கடிக்கிறீர்
விரைவாக ரயிலைப் போல்
எங்குதான் செல்கிறீர்?

படைகள் அதிகம் இருக்கு
என்று மனதில் எண்ணமா?
உடனே வெளியே கிளம்புங்கோ
உபத்திரவம் போதுங்கோ.

கே. யாழினி
சீ.சீ.தமிழ் வித்தியாலயம்
புஸ்ஸல்லாவ.




## இங்கே இவை

ஹொலிவூட் (அமெரிக்கா)-திரைப்படத்தொழில்
ஜொகனஸ் பேர்க்(தென் ஆபிரிக்கா)- தங்கச் சுரங்கம்
கிம்பர்லி(தென் ஆபிரிக்கா)-வைரச் சுரங்கம்
லீட்ஸ்(இங்கிலாந்து)-கம்பளி ரகங்கள்
மொரோக்கோ(வட ஆபிரிக்கா)-தோல்
வெனிஸ்(இத்தாலி)-கண்ணாடி
பிட்ஸ்பேர்க்(அமெரிக்கா)-இரும்பு உருக்கு
பாங்கொக்(தாய்லாந்து)-கப்பல் வணிகம்

## படைப்புக்களும்-படைத்தவர்களும்

1. திருக்குறள்- திருவள்ளுவர்
2. கீதாஞ்சலி- இரவீந்திரநாத்தாகூர்
3. பெரியபுராணம்-சேக்கிழார்
4. திருவாசகம்- மாணிக்கவாசகர்
5. சிந்தாமணி- திருத்தக்க தேவர்
6. சீறாப்புராணம்- உமறுப்புலவர்
7. கந்தபுராணம்- கச்சியப்ப சிவாச்சாரியார்
8. இலங்கை வளம்-நாவலியூர் சோமசுந்தரப் புலவர்
9. சிலப்பதிகாரம்- இளங்கோ அடிகள்
10. யாழ் நூல்- விபுலாநந்த அடிகள்



கே. இராமச்சந்திரன்
குழந்தைவேல்
சென்கூம்ஸ் வித்தியாலயம்
தலவாக்கொல்லை.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## மினிக் கதை

"நோயில்லா உடம்பிருந்தால் நூறுவரை காதல் வரும்!" என்று கவியரசு கண்ணதாசன் சொன்னதாக ஞாபகம். என்றாலும்; அதே காதல் என்னை நோயாளியாக ஆக்கிவிடுமோ என்றும் என் நெஞ்சுக்கொரு இனம் புரியாத அச்சமிருக்கிறது.

காதல் சுகமானதுதான்.... சுகந்த மானதுதான். பனித்துளிபோல் தூய்மை யான உறவுதான். அதைப் போலவே விபரீதமானது என்றும் எனக்குப் புரிகிறது. ஆனாலும்;

காதலை மறக்க முடியவில்லை.

என் காதல் தேவதை 'டினா'வை மறக்கமுடியவில்லை.

'என்னவள் எனக்கே சொந்தம்' என்று நான் அடிக்கடி நினைக்கிற அந்த நினைப்பை மறக்கமுடியவில்லை.

என் இனிய தேவதை அழகானவள். அடக்கமானவுள்.

ஆனால் எனக்கு மட்டும் அடங்கிப் போகாத, ஆபத்தானவள்.

இந்த 'அடங்கிப் போகாத ஆபத்து' அவளது பணக்காரத் தனத்தைக் குறிக்கிறது.

என்னவள் என்னைவிடப் பணக்காரி.

பணத்தையே வாழ்க்கையாக வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

நான் ஏழை!

சிகரட்டுக்கும் ரூபா முத்திரைக்கும் கூட பக்கத்துக் கடையில் கடன் சொல்கிறேன்.

இன்றைய திகதியில் வேலையில்லாப் பட்டதாரி. ஆனால்-

காதல் இருவருக்கும் பொதுவாகத்தான் இருக்கிறது.

காதல் பணத்தையோ ஏழ்மையையோ பார்ப்பதில்லை.

என் உதடுகள் அவளுதட்டில் ஒட்டிவிரிந்த போது கூட.... அதில் நான் பணக்காரச் சுவையை அனுபவிக்கவில்லை. அவளுக்கு என் ஏழ்மையும் ருசிக்கவில்லை.

அப்படியில்லாதுவிடின்-

முத்தத்தின் போது எம் உதடுகள் கூட அந்தஸ்த்து வித்தியாசமாய்ப் பேசிக் கொண்டிருக்கும். ஆனால் பேசவேயில்லை. எம்மிருவருக்கும் பொதுவாய் 'எச்சில்' ருசியே சிறக்கமளித்தது.

என் கனவில் அவளும்-

அவள் கனவில் நானும் காதலைத்தான் பேசிக்கொண்டோம்.

இனிமையான நிலைகளில் இயல்பாய் தொட்டுக் கொண்டோம்.

ஆக-

என் தேவதைக்கு என்மீது, என் ஏழ்மைமீதும் அனுதாபமிருக்கிறது.

அதையும் விட மேலாக அவளது பணக்காரத்தனத்தை நினைக்கும் போது எனக்குப் பயம்...மாயிருக்கிறது.

அவளோ என்னை உயிராக நேசிக்கிறாள்.

நானோ அவளை நேசிப்பதையே உயிராகக் கொண்டிருக்கிறேன்.

இப்படியானதொரு தூய்மையான காதல் எமக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

என்னையே எண்ணிக் கொண்டு அவள் உள்ளத்திலும், உடம்பிலும் வெகுசுகமாய் இருக்கிறாள். காபோவைதிரேற்று, கல்சியம், விட்டமின் என அவளுடம்பில் செழிப்பான ஊட்டம் தென்படுகிறது.

"நாயகனே...

நான் நலம்! நீ நலமா?"

என்று கூட நான்கு நாட்களுக்கு முன்னாடி மடல் எழுதியிருந்தாள்.

"நானும் நலமே" என்று நானுமொரு பொய் மடல் போட்டேன்.

ஆனால் உண்மையாய்.....நான் நலமாயில்லை.

என் சுகயீனமறிந்து அவளுள்ளம் சோர்வடையக்கூடாது என்பதற்காகவே ஒரு காதல்ப் பொய் சொன்னேன். என் நிலையறிந்து அவள் சந்தோஷப்பட்டி ருப்பாள் என்று எனக்குத் தெரியும்.

என் கண்ணா?"

என்று கவியாகக் கேட்டாள் என் கவி-காதல் நாயகி.

'சத்தமின்றி முத்தங்கள் கோடி தருகிறேன் கண்ணே!' என்று சத்தமின்றியே மனதுக்குள் சொல்லிக் கொண்டேன். ஏனெனில்- இலவசமாகக் கிடைப்பது அதுவொன்றுதான்.

ஆனாலும் அவளிடம் சொல்லமுடியவில்லை. காரணம்...அவளது காந்தக் கண்களில் தென்பட்ட ஒளியை நான் சிதறடிக்க விரும்பவில்லை.

"என்ன வேண்டும்?" என்றேன் மெல்லமாய்...

"எதுவானாலும் பரவாயில்லை. உந்தன் நினைவாக"

-என்றவள் ஏங்கிப் போனாள். அப்படியே என் மார்பில் தூங்கியும் போனாள்.



-மாவனல்லை ரிஸ்கி ஷெரீப்-

ஆனால்...என் நிலையறிந்து நான் வேதனைப்படுவது அவளுக்குத் தேரியாது.

தெரியாமலேயே இருக்கட்டும்.

ஏனெனில்-

என் வேதனையில் அவள் கண் சிந்தக்கூடாது.

கண்ணீரே என் வாழ்க்கையான போதும் 'நாயகனே7' என்று அவள் தொடர்ந்தும் என்னை அழைப்பதை நான் விரும்புகிறேன். அந்த அழைப்புக்காகவே வாழ ஆசைப்படுகிறேன்.

அப்படிப்பட்ட என் இதய சாம்ராஜ்ய இளவரசிக்கு......

நாளை பதினெட்டாவது பிறந்த நாள்!

போன வருடங்களிலெல்லாம் 'டடாவும் மமியும்' அனைத்தும் வாங்கிக் கொடுத்து வாழ்த்தினார்களாம். ஆனால், இந்த வருடமோ...காதல் உறவில் கைகோர்த்துப் பின்னிக் கொண்ட எந்தன் பரிசுதான் ஏற்றம் அளிக்குமாம். அதுவும்..... காதல் பரிசு. காதலன் பரிசு.... அவளே சொன்னாள்.

"என்ன தருவாய்...

நானோ தூங்காமலேயே யோசிக் கிறேன்.

"என்னவளுக்கு என்ன வாங்கிக் கொடுப்பது?"

போனமாதத்தில் வந்து போன என் பிறந்த நாளைக்கூட நான் கொண்டாட வில்லை. என் 'டினாவே' எனக்காகக் கொண்டாடினாள். என்னைவிட குதூகலித்தாள். வெள்ளையாயொரு மல்லிகைப் பூவும், கறுப்பாயொரு களிசான் பிடவையும் தந்து என்னை வாழ்த்தி... இனிப்பாய்- இதமாய் இரண்டு 'இச் இச்சும்' தந்தாள்.

அப்போது நான் சொக்கிப் போனது உண்மை.

ஆனால்..... இப்போது வெட்கித்துப் போகிறேன்.

என் கையாலாகாத தனத்தை நினைத்து கண்கலங்கி நிற்கிறேன்.

என் அழகிய இளவரசிக்கு,

அழகழகாய் ஆடைகளும்.....

வண்ண வண்ணமாய்ப் பூக்களும் வாங்கிக் கொடுக்க ஆசைதான்.

வசதியில்லாமைக்கு நானென்ன செய்வது?

வாரத் 'தினமுரசை' கூட வாசகியாய் நின்று, என் நேசகியே வாங்கித் தருவாள். நான் ஓசியில் படித்து மனம் கூசிப்போவேன். அப்படியிருக்க...பணமென்று வரும்போது வீட்டிலும் கேட்கமுடியாது. வீட்டார் என்னிடம் கேட்கிறார்கள்.

நண்பர்களிடம் கேட்கலாமென்றால்....

அவர்களுக்கும் என்னைப் போல் 'காதல்' பிரச்சினைகள்,

'வறுமை...வறுமை ரொம்பவும் கொடியது' என்பதைவிட,

'காதல் வயதில் வறுமை கொடியது' என்றும் நயமாகச் சொல்லியிருக்கலாம்.

எப்படிப் போனாலும்;

நாளைய விடியலுக்கு முன்...என் நாயகிக்கு நான் என்னவாவது வாங்க வேண்டும்.

விலைமதிப்பாய் என்னிடம் விற்பதற்கும் ஒன்றுமில்லை.

மாறாக.....

விலை போகாத என்னில் இருப்பது உயிரும், ரத்தமும், சதையும்.....! நட்சத்திரப் பொறியாய் மூளையில் உறைத்து.... திடுக்கென்று நிமிர்கிறேன்.

"என்னிடம் இருப்பது உயிரும், ரத்தமும், சதையும்......"

-உயிரும், ரத்தமும், சதையும்.....

ஆகா...ரத்தம்.....ரத்தம்.....ரத்தம்.

ஆம்! விலைமதிப்பான-விலைபோகக் கூடிய ரத்தம்.

என் அறுபது கிலோ உடம்பில் நிறைய ரத்தமிருக்கிறது.

ஆர்வமாய் எழுந்து.... சட்டையை மாட்டிக் கொண்டு.....வேகமாய் வெளியே வந்து நடக்கிறேன். "என்னவளுக்கு நாளை ஏதாவது விலைமதிப்பாய் கொடுக்க வேண்டும்!"

"ப்ளாட் பாங்க்" என்று போர்டு தொங்கிய அந்த 'இரத்த வங்கி' என்னை அமோகமாய் வரவேற்றுக் கொண்டிருந்தது.

(நிஜங்களும் கற்பனைகளும்)

## அதிரடியான ஒரு போட்டி

★ சுப்பர் ஸ்டார் ரஜினியை நேரில் காண விரும்புகிறீர்களா?
★ தமிழகச் சுற்றுலாவுக்கு நீங்கள் தயாரா?

### நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:

★ ஒன்றிலிருந்து இருபது வரையான கூப்பன்களை நிரப்பி பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.
★ போட்டி முடிவடைந்தவுடன் அனைத்துக் கூப்பன்களையும் எமக்கு அனுப்பி வைக்கலாம்.
★ போட்டி சம்மந்தமான எந்த விடயத்திலும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
★ போட்டியில் பங்குகொண்டு சரியான விடை எழுதுவோரில் ஒருவர் அதிஷ்டசாலியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.
★ ஏனைய ஜம்பது அதிஷ்டசாலிகளுக்கு சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் பெரிய அளவிலான வண்ணப்படங்கள் வந்து சேரும்.



இலக்கம்-05
சுப்பர் ஸ்டார் சந்திப்பு
காட்சி இடம்பெற்ற படத்தின் பெயர்:-..............................
படத்தின் இயக்குநர் பெயர்:-..............................
ரஜினியின் ஜோடி/ஜோடிகள் யார்:-..............................
இப்படம் வெளியான ஆண்டு:-..............................

பி.கு: இலக்க வரிசைப்படி 20 கூப்பன்களையும் நிரப்பி அனுப்புவோர் மட்டுமே போட்டியில் பங்குகொள்ள முடியும்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(29.08.93 முதல் 04.9.93 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| சிம்மம் | - சூரியன், புதன் |
| கன்னி | - வியாழன், செவ்வாய் |
| விருட்சிகம் | - இராகு |
| மகரம் | - சனி |
| இடபம் | - கேது |
| மிதுனம் | - வெள்ளி |

சந்திரன், மகரம், கும்பம், மீனம் இராசிகளில் சஞ்சரிப்பார்.

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | கருமங்களில் வெற்றி, பணவரவு. | பி.ப 4 மணி |
| திங்கள்- | குடும்ப நன்மை, வீண் மனஸ்தாபம். | பி.ப் 5 மணி |
| செவ்வாய்- | அந்நியரால் உதவி, புகழ், கீர்த்தி. | காலை 11 மணி |
| புதன்- | துயர் அதிகம், பணத்தட்டுப்பாடு. | காலை 10 மணி |
| வியாழன்- | மனமகிழ்ச்சி, திடீர் பணவரவு. | காலை 9 மணி |
| வெள்ளி- | உயர்ந்த வாழ்க்கை, உறவினரால் கலக்கம். | காலை 10 மணி |
| சனி- | செலவு மிகுதி, பெரியோர்களால் உதவி. | காலை 8 மணி |

அதிஷ்டநாள் - வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தன்னம்பிக்கை, வீண் பிரயாசம். | காலை 10 மணி |
| திங்கள்- | எடுத்த காரியம் வெற்றி, மனமகிழ்ச்சி. | பி.ப 3 மணி |
| செவ்வாய்- | உயர்ந்தோர் நட்பு, கீர்த்தி. | பி.ப 5 மணி |
| புதன்- | பெரியோர்களால் உதவி, காரியானுகூலம். | பி.ப 2 மணி |
| வியாழன்- | பகைவரால் தொல்லை, உடல்நலக்கேடு. | காலை 10 மணி |
| வெள்ளி- | மனக்குழப்பம், கடன் பயம். | காலை 11 மணி |
| சனி- | அந்நியர் சகவாசம், தேகசுக விருத்தி. | காலை 10 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனமகிழ்ச்சி, புதிய திட்டங்கள் வெற்றி. | காலை 7 மணி |
| திங்கள்- | அந்நியர் நட்பு, பணவரவு. | காலை 11 மணி |
| செவ்வாய்- | பெரியோர் உதவி, காரியசித்தி. | பி.ப் 3 மணி |
| புதன்- | தூரஇடப்பிரயாணம், மனச்சஞ்சலம். | பி.ப 5 மணி |
| வியாழன்- | தெய்வ நம்பிக்கை, இனசன மகிழ்ச்சி. | காலை 10 மணி |
| வெள்ளி- | தொழில் சிறப்பு, எதிர்பாரா விபத்து. | காலை 11 மணி |
| சனி- | பணத்தட்டுப்பாடு, மனக்கலக்கம். | காலை 9 மணி |

அதிஷ்டநாள் - வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பகைவர் வெற்றி, முன்னேற்றம். | பி.ப .2 மணி |
| திங்கள்- | தேகசுகம் பாதிப்பு, செலவு மிகுதி. | பி.ப 3 மணி |
| செவ்வாய்- | மனமகிழ்ச்சி, கடன் பயம். | காலை 11 மணி |
| புதன்- | அந்நியரால் தொல்லை, காரியசித்தி. | காலை 10 மணி |
| வியாழன்- | தூரஇடப்பிரயாணம், உல்லாசவாழ்வு. | காலை 9 மணி |
| வெள்ளி- | புதியமுயற்சி, பணவரவு. | பி.ப 2 மணி |
| சனி- | தனதானிய இலாபம், கடன்பயம் தீர்தல். | பி.ப 4 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-6

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ந்த வாழ்க்கை, புண்ணியப் பேறு. | காலை' 9 மணி |
| திங்கள்- | மனமகிழ்ச்சி, திடீர் பிரயாணம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | சிநேகிதர் உதவி, எடுத்த காரியம் வெற்றி. | பி.ப 3 மணி |
| புதன்- | பிரயாண மிகுதி, அகால போசனம். | பி.ப 4 மணி |
| வியாழன்- | வெளியிட நன்மை, எதிர்ப்புக்கள் நீங்கும். | பி.ப 3 மணி |
| வெள்ளி- | மனக்குளப்பம், பூரண சுகம். | காலை 9 மணி |
| சனி- | பயனுள்ள செயல், காரியசித்தி. | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள் - வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காணி பூமி பிரச்சனை, வீண் மனஸ்தாபம். | பி.ப 2 மணி |
| திங்கள்- | காரியசித்தி, பணவரவு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | மனமகிழ்ச்சி, சுபகாரியசித்தி. | பி.ப 3 மணி |
| புதன்- | உறவினர் வருகை, மகிழ்ச்சி. | காலை் 10 மணி |
| வியாழன்- | பணநெருக்கடி, உறவினர் மனக்கசப்பு. | காலை 11 மணி |
| வெள்ளி- | பெரியோர் சகவாசம், கருமங்களில் வெற்றி. | காலை 8 மணி |
| சனி- | தனலாபம், காரியங்களில் வீணான தடை. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம்-9

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனக்கவலை நீங்கல், காரியானுகூலம். | காலை 8 மணி |
| திங்கள்- | தெய்வ அனுகூலம், திடீர்பிரயாணம். | காலை 11 மணி |
| செவ்வாய்- | உறவினர் பகை, பணக்கஷ்டம். | பி.ப் 2 மணி |
| புதன்- | மனக்குளப்பம், காரியத்தடை. | பி.ப 4 மணி |
| வியாழன்- | பணவரவு, எதிர்பாரா துயரம். | காலை 10 மணி |
| வெள்ளி- | பெரியோர் நடபு, மனமகிழ்ச்சி. | காலை 11 மணி |
| சனி- | பணத்தட்டுப்பாடு, உறவினர் வருகை. | காலை 10 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப்பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பல்தொழில் விருத்தி, பரோபகாரம். | பி.ப 1 மணி |
| திங்கள்- | மனக்கலக்கம், மறைமுக எதிர்ப்பு. | பகல் 4 மணி |
| செவ்வாய்- | அந்நியரால் உதவி, அதிகார விருத்தி. | பி.ப 3 மணி |
| புதன்- | பொன் பொருள் சேர்க்கை, வாக்கு வசீகரம். | காலை 9 மணி |
| வியாழன்- | துயர் அதிகம், தூர இடப்பிரயாணம். | காலை 11 மணி |
| வெள்ளி- | மனச்சந்தோஷம், பணத்தட்டுப்பாடு. | காலை 10 மணி |
| சனி- | உயர்வு, கௌரவம் கீர்த்தி. | காலை 9 மணி |

அதிஷ்டநாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் மிகுதி, குடும்பப் பிரச்சனையுண்டு. | பி.ப. 1 மணி |
| திங்கள்- | மனஆறுதல், மறைமுக எதிர்ப்பு. | காலை 11 மணி |
| செவ்வாய்- | எதிரிகளால் தொல்லை, இழந்த பொருள் கிடைக்கும். | காலை 10 மணி |
| புதன்- | தனலாபம், தாரசுகத் தடை. | காலை 9 மணி |
| வியாழன்- | பெரியோர் அனுகூலம், சாதுரியத் தன்மை. | காலை 10 மணி |
| வெள்ளி- | துன்பம் அதிகம், பண நெருக்கடி. | பி.ப 3 மணி |
| சனி- | எண்ணிய கருமம் தடை, மனக்குழப்பம். | பி.ப 5 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-3

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தனவிருத்தி, குடும்ப மகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| திங்கள்- | மனமகிழ்ச்சி, எண்ணிய கருமம் வெற்றி. | பி.ப் 5 மணி |
| செவ்வாய்- | பணத்தட்டுப்பாடு, மன வேதனை. | பி.ப 3 மணி |
| புதன்- | பூமியால் லாபம், முன்னேற்றம். | காலை 9 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, பகைமை மறைதல். | காலை 11 மணி |
| வெள்ளி- | தூர இடச் செய்தியால் நன்மை, மன மகிழ்ச்சி. | காலை 10 மணி |
| சனி- | பணவரவு, காரியசித்தி. | காலை 8 மணி |

அதிஷ்டநாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, பணவரவு. | காலை 11 மணி |
| திங்கள்- | மனக்குளப்பம், காரியசித்தி. | காலை 10 மணி |
| செவ்வாய்- | புண்ணியப் பேறு, பூமிப் பிரவேசம். | காலை 7 மணி |
| புதன்- | தூரஇடப்பிரயாணம், மனமகிழ்வு. | பி.ப 2 மணி |
| வியாழன்- | தல யாத்திரை, உயர்வான வாழ்க்கை. | பி.ப 3 மணி |
| வெள்ளி- | மனமகிழ்ச்சி, உயர்ந்தோர் நட்பு. | பி.ப 4 மணி |
| சனி- | பணத்தட்டுப்பாடு, கடின உழைப்பு. | பி.ப் 1 மணி |

அதிஷ்டநாள் - வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தனலாபம், தந்தை வழி துக்கம். | பி.ப 2 மணி |
| திங்கள்- | வாக்குக் கலகம், இரக்க சிந்தை. | பி.ப 4 மணி |
| செவ்வாய்- | காணி பூமி பிரச்சனை, வசீகரம். | பி.ப 5 மணி |
| புதன்- | துன்பம் அகலும், காரியசித்தி. | காலை 9 மணி |
| வியாழன்- | மறைமுக எதிர்ப்பு, பொருள் சேதம். | காலை் 11 மணி |
| வெள்ளி- | தூரஇடப்பிரயாணம், முயற்சி. | காலை 10 மணி |
| சனி- | அந்நியரால் உதவி, அதிகார விருத்தி. | காலை 9 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

அறிந்து கொள்ளுங்கள் – ஆரோக்கியம் பெறுங்கள் – ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ + விந்தைகள்

## புதிய கருவி அறிமுகம்!

நோயாளி அசைந்து கொண்டிருக்கும் போதே அவருடைய உடல் உபாதையினைத் துல்லியமாகக் கண்டுபிடிக்கக் கூடிய புதிய பரிசோதனைக் கருவி உருவாக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக முதுகுத் தண்டின் எந்தப் பகுதியில் பாதிப்பு ஏற்பட்டாலும் அதனைத் தெளிவாகக் கண்டு பிடித்து விட ஏதுவாக 'ஸ்பைனோஸ்கோப்' எனும் புதிய சாதனம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப காலங்களில் 'எக்ஸ்றே' மூலம் நோய் தாக்கும் பகுதி படம் பிடிக்கப்பட்டது. 'ஸ்கானிங்' எனப்படும் முறை நவீனமானதாகும். செங்கதிர் வீச்சின் துணை கொண்டு, கணணியுடன் இணைக்கப்பட்ட கமராக்கள் உடலின் எந்தப் பகுதியையும் ஊடுருவி சின்னத் திரையில் பார்க்க வசதி செய்து தருகிறது. அத்துடன் புகைப்படங்களும் மிகத் தெளிவாகப் பிடிக்கப்பட்டு மருத்துவர்களுக்கு உதவுகின்றன. இம்முறையையும் 'பழமை'யாக்கிவிட்டது, இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ள அதி நவீன சாதனம். இதற்கு 'ஸ்பைனோ ஸ்கோப்' என்று பெயரிட்டுள்ளனர்.



நோயாளி படுக்கையில் கிடத்தப்படாமல் அவர் நடக்கும் போதும் குனியும் போதும் அவருடைய முதுகுத் தண்டு இப்புதிய-கணணியுடன் கூடிய சாதனத்தின் மூலம் கண்டறியப்படுகிறது. உடலின் எத்தகைய அசைவின் போது நோயின் தாக்கம் அதிகரிக்கிறது என்பதனையும் தெளிவாக இச்சாதனம் சின்னத் திரையில் காட்டி விடுகிறது. இதனால் சிகிச்சை முறைகளும் இலகுவாகின்றன.

நோயாளியின் முதுகுத் தண்டிலுள்ள கண்ணிகள் காணப்படும் 12 இடங்களில் -படத்தில் காட்டப்பட்டுள்ளது போன்று சிறிய எலத்து ரோட்டுகள் பொருத்தப்படும். இதிலிருந்து கணணியுடன் பொருத்தப்படும் கம்பிகள் கமரா ஒன்றுடன் இணைக்கப்படும். இதனை இயக்கும் போது இன்ஃப்ரா செங்கதிர்கள் முதுகுத் தண்டில் எவ்விடத்தில், எத்தகைய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதனை சின்னத் திரையில் காண்பிக்கிறது. அத்துடன் துல்லியமான வரை படத்தையும் பதிக்க உதவுகிறது.

இப்புதிய சாதனத்தை சேர்ஜ் கிராக்கோவெற்ஸ்கி என்ற விஞ்ஞானி கண்டுபிடித்துள்ளார்.

## புன்னகை ஒன்றே போதுமே! நோய்கூட தூர விலகுமே!!



உங்கள் முகத்தில் எப்போதும் புன்னகை இருக்குமானால் இருதயக் கோளாறு எதுவும் உங்களை நாடாது.

"நாம் துக்கமாகச் சோர்ந்திருக்கும் காலத்தை விட மகிழ்ச்சியாக இருக்கும் போது எத்தகைய நோயையும் எதிர்த்து நிற்கும் சக்தி நமது உடலுக்கு ஏற்படுகிறது. பிரபல உளவியலாளரான டேவிட் மேயேர்ஸ் அண்மையில் வெளியிட்டுள்ள 'பேசியூற் ஒஃப் ஹப்பினஸ்' (மகிழ்ச்சிக்கான முயற்சி) என்ற நூலில் இவ்வாறு கூறுகிறார்.

மிகப் பயங்கரமான துன்பத்தில் துவளும் போதும் முகத்தில் துயரம் சொட்டாமல் எல்லாருடனும் மகிழ்ச்சியாக சிரித்துப் பழகும் போது உங்கள் துயரம் தூரவிலகிப் போய்விடும். முக்கியமாக இருதய நோய்க்கு மகிழ்ச்சியும் புன்னகையும் இன்றியமையாத மருந்து, என்று மேயேர்ஸ் கூறுகிறார். 229 இதய நோயாளிகளை வைத்து டாக்டர் மேயேர்ஸ் பரிசோதனைகளை நடத்தியுள்ளார். துன்பத்தை வெளிக்காட்டாமல் எப்போதும் புன்னகையுடன் இருந்தவர்களில், ஐந்து வருடங்களுக்குள் இரண்டாவது தடவை இருதயத் தாக்கம் ஏற்பட்டமை மிகவும் குறைவாகக் காணப்பட்டது.

## கர்ப்பிணியா நீங்கள்? கவனியுங்கள் இதனை!

கர்ப்பிணிகள் கண் பார்வைக்காகப் பெறும் கண்ணாடிகளில் போதிய கவனம் செலுத்த வேண்டும். கண்மணியில் பொருத்தும் 'கொன்ராக்ற்' லென்ஸ்களை கர்ப்பவதிகள் ஒதுக்குவது நல்லது.

கர்ப்பம் தரித்ததும் பெண்களின் உடலின் சகல பாகங்களும் ஒரு வகை மாற்றத்துக்குட்படுகின்றன. அவர்களுடைய மனமும், எண்ணங்கள், சிந்தனைகள் ஆகியவையும் மாற்றமடைகின்றன. கண்களிலும் மாற்றம் ஏற்படுகிறது. விழியின் வெண்படலம் தடிப்பாகி அதன் உணர்ச்சியும் குறைகிறது. கண்ணீர் சுரப்பது குறைந்து கண் மண்டலத்தை சௌகரியமாக்குவதற்கு அளவாக மட்டுமே தேக்கி வைக்கப்படுகிறது. இதனால் கண் கருவிழிப் படலத்தில் பொருத்தும் கொன்ராக்ற் கண்ணாடிகளை அத்தருணத்தில் பாவிப்பதைத் தவிர்ப்பது நல்லது என வல்லுநர்கள் கூறுகின்றனர்.

## இந்தக் குறிப்புகளைப் படியுங்கள் வைத்தியச் செலவு மிச்சமாகும்!

பற்களை மட்டும் துலக்கினால் போதாது. நாக்கையும் சுத்தப்படுத்த வேண்டும். அப்போது தான் சுவாசத்தின் தரம் உயர்கிறது. பக்ரீரியாக்களும் இருப்பிடம் இல்லாமல் போகும். நாக்கு, வாயில் மூன்றில் ஒரு பகுதியை எடுத்துக் கொள்கிறது. பக்ரீரியாக்கள் செழித்தோங்க வெது வெதுப்பான, ஈரப்பதமான இருப்பிடத்தைக் கொடுக்கிறது. ஒரு வாரம் நாக்கு வழிக்காமல் இருந்தால் நாக்கில் தழைக்கும் பக்ரீரியாக்களின் எண்ணிக்கை பத்து மடங்காகப் பெருகி விடும். அதனால் 'ரங் கிளீனர்' கொண்டு தினமும் சுத்தம் செய்ய வேண்டும். இல்லாவிடில் பிரஷ் கொண்டாவது சுத்தம் செய்து விட வேண்டும்.

வெங்காயத்தை நன்றாகக் கசக்கி ஒரு மெல்லிய துணியில் முடிந்து முகர்ந்து கொண்டிருந்தால் மூர்ச்சை நீங்கும்.

வெங்காயச் சாற்றை இரண்டு மூன்று துளிகள் காதில் விட்டால் காது வலி போய்விடும்.

வெறும் வெங்காயத்தைப் பெண்கள் மாத விலக்கின் போது சாப்பிட்டு வந்தால் உதிரச் சிக்கல் நீங்கும்.

தேள், வண்டுக் கடிக்கு முதலுதவியாக வெங்காயத்தைக் கசக்கி கடிவாயின் மீது தடவலாம்.

வெங்காயத்தைச் சிறு துண்டுகளாக நறுக்கிப் பன்றி நெய்யில் போட்டு வதக்கி, பனங்கற்கண்டு கூட்டி தினமும் இரண்டு வேளை சாப்பிட்டு வந்தால் ரத்த மூலம் குணமாகும்.

நம் ஒவ்வொருவர் தலையிலும் ஒரு லட்சம் முடிகள் உள்ளன. ஒவ்வொரு முடியும் அது வெளிப்பட்டவுடனேயே இறந்து விடும். ஆனால் அது ஆறு ஆண்டு காலம் ஒருவருடைய தலையில் இருக்கும்.

புதிய முடிகள் மாதத்திற்கு பதின்னான்கு மில்லி மீற்றர் என்ற கணக்கில் வளரும். முடி கொட்டுவது இயற்கையானது. கொட்டும் முடியின் எண்ணிக்கை நூற்று ஐம்பது வரை இருந்தால் கவலைப்பட வேண்டியதில்லை. அழகிய, அடர்த்தியான கூந்தலை, பயன்படுத்தும் எண்ணெய் வகைகளில் பெற முடியாது. நாம் உட்கொள்ளும் உணவின் அடிப்படையைப் பொறுத்தே அமைந்திருக்கும்.

எண்ணெய்ச் சத்துள்ள தானிய வகைகள் உடம்பில் 'கேரட்டின்' என்னும் முடியின் கூட்டுப் பொருட்களில் ஒன்றை உற்பத்தி செய்ய உதவுகிறது.

அடர்த்தியான கூந்தலைப் பெற மீன், முட்டை, கஜு, பாதம் பருப்பு போன்றவற்றுடன் சோளம், பட்டாணி போன்ற தானியங்களையும் தாராளமாக உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். தானிய வகைகளில் ஆரோக்கியமான கூந்தலுக்கு அவசியமான சிலிக்கன் என்னும் தாதுப்பொருள் அதிகமாக உள்ளது. இவை மட்டுமல்லாது ஏ.பி.சி.டி.ஈ. போன்ற விற்றமின்களும் தலை முடிக்குத் தங்களாலான பங்கைச் செய்கின்றன.

ஆரோக்கியமான உணவால் அமையும் கூந்தலை சொடுகு, ஈறு, பேன், அணுகாமல் நன்றாகப் பராமரிக்கவும் வேண்டும்.

★ காலை, மாலை, இரவுச் சாப்பாட்டிற்குப் பின் தோடம்பழத்தைச் சாப்பிட்டு வந்தால் இரத்தம் சுத்தியாகும். இருதயத்திற்கும் பலம் ஏற்படும். ஜீரணத்திற்கும் நல்லது.

★ நம் உடலில் உள்ள 'மெலனின்' என்னும் பொருள் தோலுக்கு நிறத்தை அளிக்கிறது. சூரிய ஒளி பட்டால் இது அதிகமாகி தோலின் நிறம் கறுக்கிறது. தோலின் நிறம் கறுப்பாக இருப்பது நமக்குப் புற்று நோய் வராமல் இருக்க உதவுகிறது.

★ சற்றுக் கொடுமையான நோய்களில் நீரிழிவு நோயும் ஒன்று. இதைப்பற்றி ஆராய்ச்சி செய்த மருத்துவ நிபுணர்கள், இந்த நோய் உண்டாவதற்கான சில காரணங்களைக் கூறியிருக்கின்றார்கள். அவை அளவுக்கு மீறிய பரபரப்பு, பருமனான உடல், அளவுக்கு அதிகமாகப் பதப்படுத்தப்பட்ட உணவு உண்ணல், போதிய உடல் உழைப்பு இல்லாமை, பரம்பரைத் தன்மை ஆகியன.

★ கறிக்கு உதவும் பூக்களில் சிறந்தது வாழைப்பூ. வாழைப் பூக்களில் நூற்றுக்கு மேற்பட்ட வகைகள் உண்டு. வாழைப் பூவைப் பிரித்து அதனுள் இருக்கும் நரம்பை நீக்கி மென்மைப் பகுதியை உரலில் இடித்து 200 மில்லி லீற்றர் சாற்றுடன் இரண்டு தேக்கரண்டி தேனைக் கலந்து காலை ஆறு மணியளவில் வெறும் வயிற்றில் தொடர்ந்து 15 நாட்கள் அருந்தினால் பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை நோய் நீங்கும். மேலும் வயிற்றில் புண் ஏற்படாமல் தடுக்கும். வாய் நாற்றம், மூல நோயை போக்கும். மாத விலக்கு கோளாறுகளைச் சரி செய்யும். மலட்டுத் தன்மையை நீக்கும்.

★ அஜீரணக் கோளாறினால்' புளித்த ஏப்பம் வந்து கொண்டிருந்தால் வயிற்றைப் பட்டினி போட்டு ஒரு தேக்கரண்டி இஞ்சிச் சாறும், தேனும் கலந்த வெந்நீர் குடித்து வந்தால் நிலைமை சரியாகும்.

## குட்டிக் கதை

## "யார் பாவம்?"

-ஷர்மிளா இஸ்மாயில்- கண்டி-



"சில்லென்று ஒரு வார்த்தை பேசு
தென் பாண்டி காற்றாக வீசு
ஒரு காதல் பார்வை பார்த்தாலென்ன
இரு கையும் கையும் சேர்ந்தாலென்ன
எந்தன் கண்ணீரும் தீர்ந்தாலென்ன....."

ரேகா இமை மூடாது பார்த்தாள். அவை முத்து முத்தான கையெழுத்தில் எஸ்.பி.யின் பாடல் வரிகளோடு ஆரம்பித்துள்ள கடித வரிகள்....

"என் பிரிய ரேகாவுக்கு" என்று தொடங்கி மென்மையான உணர்வுகளை கவிதையாய் இழையோடவிட்டு தன் மனசைக் கொட்டியிருந்தான். முடிவில் "உங்கள் முடிவை எதிர்பார்த்து நான் இறுக்கிப் பிடித்திருக்கும் என் இதயம் சிரிக்கப் போவதும், அழுகையை துணையாக்கிக் கொள்வதும் உங்கள் கையில் தான்" என்று முத்தாய்ப்பு வைத்து முடித்திருந்தான்.

படித்து முடிக்கு முன் வியர்த்துப் போனவள் இறுதி வரியையும் வாசித்து முடிய நிதானித்தாள். "ம்ஹ்ம்..." பெருமூச்சு சொல்லிக் கொள்ளாமல் வெளியேறியது. பொறுத்திருந்தாள். டியூசன் முடிய பஸ் தரிப்புக்கு வேகமாய் நடந்தாள்.

ஓ....நின்றிருந்தான் பிரதாப். ஆவலாய் முகம் பிரகாசித்தது. அவஸ்தைப்படுகிறான் என்பதும் தெரிந்தது. வேகமாய் அருகில் போய் நின்றாள்.

"பிரதாப்"

அவன் இதயத்தில் திக்....திக். என்ன சொல்லப் போகிறாள்?

அவள் மனசுக்குள் நினைத்தாள். "பாவம் பிரதாப்...."

கணப்பொழுதில் கண்கள் குளமாக "என்ன மன்னிச்சுடுங்க பிரதாப்....நீங்க நெனக்கிற மாதிரி என் இதயம் வெறுமையா இல்ல. அங்க நரேன் எப்பவோ இடம் பிடிச்சுட்டார். இப்போ கெம்பஸ்ல படிச்சிட்டு இருக்கற அவர் வெளியானதும் அவரையே மெரி பண்றதா நான் தீமானிச்சு இரண்டு வருஷம். 'என் வாழ்க்கை உன்னோட தான்னு' சத்தியம் பண்ணிட்டு போய் இருக்காரு. ஒவ்வொரு நிமிஷமும் அவரோட, அவர் நினைவுகளோட தான் என் இதயம் துடிக்கிறது. என்னப் புரிஞ்சுக்குவீங்கன்னு நெனக்கிறேன். ப்ளீஸ், அண்டர்ஸ்டாண்ட் மை சிடுவேஷன் பிரதாப். அவர் இருக்கிற என் மனசுல வேற யாருக்குமே எண்ணைக்குமே இடமில்லை."

அவள் தொடர அவன் மனசு கனத்துப் போயிற்று. மௌனமாய் இதயம் வெடித்து துகளாயிற்று. தாங்கிக் கொண்டான். தொலைந்து போன வார்த்தைகளை தேடியெடுத்தான்.

"...ஐம் ஸோ ஸொரி ரேகா. என்னால உங்களுக்கு ஏதும் சிரமங்கள் ஏற்பட்டிருந்தா மன்னிச்சுடுங்க. இனிமே உங்க வழியில நான் தொடர மாட்டேன்.

"இது ப்ரொமிஸ்." சத்தியம் பண்ணியவனாய் விலகிப் போனான்.

"நரேன் நீங்க இருக்கும் மனசுல யாருக்குமே எப்பவுமே இடம் இல்லை." மானசீகமாக கூறியபடி மௌனமாய் நடந்தாள். "பாவம்... பிரதாப்.... மென்மையானவர். விலகிக்கிட்டாரு. ஜெண்டில்மேன் தான்." திரும்பிப் பார்த்தாள். குனிந்த படியே நடந்தான் அவன்.

"நரேன்...." இழைத்தது குரல்.

"யெஸ் டார்லிங்"

அவள் மடியில் தலை வைத்து கண் மூடி கனாக் கண்டு கொண்டிருந்த நரேன் தலை உயர்த்தினான். பூங்காவின் தென்றல் புது மணம் கலந்து சிறக்கூட்டியது.

"நரேன்....இந்த ஸோங்க கொஞ்சம் கேட்டு பாருங்க ஹவ் ஸ்வீட்", அவன் காதில் தான் மாட்டியிருந்த வோக்மேன் செட்டின் ஹெட் போனை ஒலிக்க விட்டாள்.

"சில்லென்று ஒரு வார்த்தை பேசு"

தென் பாண்டி காற்றாக வீசு...."

"ஓ...எஸ்.பி.யின் வொய்ஸ் ரொம்ப இனிமை!"

அவனும் ஒத்துக் கொண்டவனாய் அவளை அணைத்துக் கொண்டான்.

அவள்.....? அது ஸ்வப்னா! நரேனின் புதுக்காதலி.

அங்கு நிறம் மாறியவனுக்காய் இங்கு மனம் மாறாமல் காத்திருக்கும் ரேகா......

"பாவம் தானே? பாவம் ரேகா....

"அடுத்த முறை "சில்லென்று...." பாடல் போகும் போது ரேகாவை நினைப்பீர்களா?"

(கற்பனை தவிர வேறில்லை)

## நீரிழிவா உங்களுக்கு? கறுவா கை கொடுக்கிறது!

நீரிழிவினால் துயருறுவோருக்கு இனிப்பானதொரு தகவல்!

நாம் உண்ணும் உணவை சக்தியாக மாற்றி உடலின் சகல பாகங்களுக்கும் அனுப்பும் பணியினை இன்சுலின் எனும் சுரப்பு செய்கிறது. இதனைச் சுரக்கும் கணயம் எனும் சுரபி ஏதோ ஒரு காரணத்தினால் தன் இயக்கத்தைக் குறைத்து விடுவதனால் உணவு சக்தியாக மாற்றம் பெறாமல் சீனிச்சத்தாகவே இரத்தத்துடன் கலந்து சிறு நீருடன் வெளியேறி விடுகிறது. இதற்காக செயற்கையாகத் தயாரிக்கப்படும் இன்சுலின் ஊசி மூலம் நோயாளிக்கு ஏற்றப்பட வேண்டியிருக்கிறது.

இன்சுலின் செய்யும் பணியை கறுவா ஓரளவு ஈடு கொடுக்கிறது என்ற புதிய தகவல் இப்பொழுது வெளியாகியிருக்கிறது. ஊசி மூலம் உட் செலுத்தப்படும் இன்சுலினின் செயற்பாட்டை கறுவாப் பட்டை ஒரு துண்டு, மூன்று மடங்கு தூண்டுகிறது என்று புதிய ஆய்வுகள் கூறுகின்றன.

மேரிலாந்திலுள்ள பெல்ற்ஸ்வில்லி-மனிதருக்கான சத்துணவு ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த டாக்டர் றிச்சாட் அண்டர்சன் பல்லாண்டுகாலம் நடத்திய ஆராய்ச்சியின் முடிவில் இத்தகைய கருத்தை வெளியிட்டுள்ளார். இவரிடம் இந்த கறுவா சிகிச்சை பெற்ற நீரிழிவு நோயாளிகள் நூற்றுக் கணக்கானோர் நல்ல பலன் கண்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

நீங்கள் இன்சுலின் ஊசி மருந்து பயன்படுத்துகிறீர்களா? கறுவா சிகிச்சையைத் துவங்குமுன்னர் உங்கள் மருத்துவரிடம் ஆலோசனை பெற வேண்டியது அவசியமாகும்.

மேற்குலகில் தான் இப்பரிசோதனை நடந்துள்ளது. இருப்பினும் நம் நாட்டில் தாராளமாகக் கிடைக்கும் கறுவாதான் இம்மதிப்பைப் பெற்றுள்ளது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## புதுமைத் தொடர்

### அத்தியாயம்—9




"நிறுத்து நிருபராஜ்"

என்று கம்பீரக் குரலில் சொல்லி உள்ளே வந்தவள் முகம் பார்த்த குலாம்ஷா அதிர்ந்து போனார்.

"இவள் கோடீஸ்வரர் வைத்தியலிங்கத்தின் மகள் மதுமிதா அல்லவா?"

யோசித்தபடியே மறுமுறை அவள் முகம் பார்த்தார்.

முன்னர் ஒரு கேஸ் விசயமாக வைத்தியலிங்கத்தோடு குலாம்ஷாவுக்கு பரிச்சயம் ஏற்பட்டிருந்தது. ஒரு மாதத்தின் முன்னர் கூட வைத்தியலிங்கத்தின் வீடு சென்று விருந்துண்டதும், 'டியர் அங்கிள்' என்று மதுமிதா நலம் விசாரித்ததும் குலாம்ஷாவின் மனத்திரையில் ஓடியது.

குலாம்ஷாவின் அதிர்ச்சியை புரிந்து கொள்ளாமல் மதுமிதா உதடு திறந்தாள்.

"ஹலோ மிஸ்டர் குலாம்ஷா உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. நான் மதுமிதா"

குலாம்ஷா மேலும் அதிர்ந்தார். "என்ன சொல்கிறாள் இவள். மதுமிதா என்கிறாள். மறைக்க வில்லை. ஆனால், என்னை தெரிந்தவள் போல் காட்டிக் கொள்ளவில்லையே. மறந்திருக்க நியாயமில்லை. பலதடவைகள் பார்த்துக் கொண்ட முகம். பேசியதும் உண்டு. அப்படி எனில் தந்திரமோ? ஆயின் என்ன தந்திரம்? விட்டுப் பிடிக்கலாம். கட்டுமீறினால் விளையாடிப் பார்க்கலாம்"

குலாம்ஷா குழம்பியபின் ஒரு முடிவுக்கு வந்தார்.

"என்ன யோசிக்கிறீர்கள், எப்படித் தப்பிச் செல்லலாம் என்று கணக்குப் போடுகிறீர்களா?"

மதுமிதா கேட்டாள். குலாம்ஷாவின் முகம் பார்த்துக் கேட்டவள் மறுநொடியே தன் அருகில் பாதுகாப்பு மலையாய் நின்றவனை சைகையால் அருகில் அழைத்தாள்.

அவன் கையில் இருந்த ஏ.கே.47 ஆயுதம் தன் கையில் வாங்கி, ரம்யாவைப் பார்த்துச் சிரித்தாள்.

ரம்யா வியர்த்தாள்.

விபரீதம் நிகழப்போவது உணர்ந்து பயந்தாள். மதுமிதா ரம்யாவின் பயம் கண்டு நகைத்தாள். நகைப்பில் அலட்சியம் இருந்தது. திமிர் இருந்தது. அடுத்தவர் துயரம் பார்த்து ரசிக்கும் வக்கிரம் தெரிந்தது.

இந்தக் கூட்டத்தில் இந்த மதுமிதாவும் முக்கியமானவள் என்று குலாம்ஷாவின் கிரைம் மூளைக்கு புரிந்தது. ஒரு வேளை கோடிஸ்வரர் வைத்தியலிங்கம் தான் இப்படியொரு இரகசிய சாம்ராஜ்யத்தை நிர்வகித்துக் கொண்டிருக்கிறாரோ? அல்லது அவருக்கே தெரியாமல்......."

குலாம்ஷாவின் குழப்பங்கள் அதிகமாகிக் கொண்டிருந்தன. முடிச்சுக்களை அவிழ்ப்பதைவிட மேலும் முடிச்சுக்கள் விழுந்து கொண்டிருப்பதை நினைக்க குலாம்ஷாவுக்குள் கோபம் வந்தது. விழும் முடிச்சுக்களை அவிழ்க்க முடியாமல் இருக்கிறோமே என்று இயலாமை வதைத்தது.

மதுமிதா மீண்டும் சிரித்தாள். சிரிக்கும் போது இளமைகள் குலுங்கின. தலையை இடதுபுறம் சாய்த்து சிரித்தாள். குலாம்ஷா அதைக் குறித்துக் கொண்டார். சிரிக்கும் போது மதுமிதா இடது புறம் தலை சாய்த்து சிரித்தது ஞாபகம் இல்லை. ஆனால் இவள் இடது புறம் தலை சாய்த்து சிரிக்கிறாள். குலாம்ஷாவால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை.

அதே நேரம் ஒரு முடிவுக்கு வந்தவளாக மதுமிதா தன் கரங்களில் ஏந்திய ஏ.கே.47ஐ சற்று உயரத் தூக்கி, ரம்யாவை குறிபார்த்து சிரித்துக் கண்ணடித்தாள்.

துணிச்சலான ரம்யா கூட துவக்குமுனை வாய்திறக்கப் போவது உணர்ந்து நடுக்கமானாள்.

"வேண்டாம் மது. நாளை உனக்கும் இப்படித்தான் செய்வார்கள். ஒரு தோட்டாவால் உன் உழைப்புக்குப் பரிசு தருவார்கள். இன்று நான். நாளை நீ"

ரம்யா பேசி முடிக்க மதுமிதா சொன்னாள்–

"சரியாகச் சொன்னாய் ரம்யா. என் பிரிய தோழி நீ. உன்னைக் கொல்ல என்னை அனுப்பியிருக்கிறார்கள் பார்த்தியா!! ரம்யா நீ சொல். நான் என்ன செய்ய வேண்டும்? இந்த நிருபராஜ் இந்த இடத்திலேயே சாக வைக்கப்பட வேண்டுமா? அதற்கு என் துப்பாக்கியை உபயோகப் படுத்தவா?"

மதுமிதா அப்படிக் கேட்டதும் நிருபராஜ் என்ற மாமிச மலையின் முகத்தில் அதிர்ச்சி வந்து இருளாய் அப்பியது.

"மது....." என்று ஊளையிடுவது போன்ற குரலில் உரத்துக் கூப்பிட்டான்.

"பயந்துவிட்டாயா நிருபராஜ். சாவதற்கு பயப்படலாமா? அது கோழைத்தனம் அல்லவா. என்னை மன்னித்து விடு நிருபராஜ். பொஸ் இட்ட உத்தரவை மீறலாமா? கூடாதல்லவா?"

மறுவிநாடி துப்பாக்கி உயர்ந்தது. நிருபராஜை நோக்கி குறி பதிந்தது. திடீரென்று துப்பாக்கி திரும்பியது. குறியாக ரம்யாவை நோக்கியது.

....டுமீல்–டுமீல்......

குறி தவறவில்லை. தோட்டாக்கள் இரண்டும் ரம்யாவின் அழகான உடலில் போய் அமர்ந்து கொண்டன.

நெஞ்சில் தோட்டாக்கள் ஏந்தி நிலத்தில் சரிந்தாள் ரம்யா.

குலாம்ஷாவுக்குள் கோபம் குதிரை வேகத்தில் பாயத் தயாரானது.

கண்முன்னால் நடந்த கொலை. அதுவும் சில மணிகளுக்கு முன் அருகில் இருந்து அவரைத் தொட்டு அணைத்தவள் அவருக்கு உதவத் தயார் என்றவள். இறுதி நேரத்தில் இந்தக் கூட்டத்தை விட்டே விலக நினைத்தவள். உயிரோடிருந்திருந்தால் மிகவும் உபயோகமாக இருந்திருப்பாள். இந்தக் கூட்டத்தின் கடைசி ஆசாமி வரை வலைவீசிப் பிடிக்க அவள் உதவி பேருதவியாக இருந்திருக்கும். இனி கடினம்தான். கைக்கெட்டியது வாய்க்கு எட்டவில்லை.

குலாம்ஷா ரம்யாவின் மரணத்தால் மனதின் ஒரு புறத்தில் கவலை சுமந்தார். மறுபுறத்தில் கடும் கோபம் சுமந்தார். எனவே தீர்மானித்தார். எதிர்த்து போராடுவது தவிர வேறு வழியில்லை.

கற்றவித்தை கை கொடுக்கும். முயலலாம். முடியாவிட்டால் கூட வீரமாய் மடியலாம்.

"என்ன குலாம்ஷா உறைந்து போய் விட்டீர்கள். கிரைம்புலி நீங்கள். உங்களுக்கே சாவு கண்டு அச்சம் வரலாமா?"

கேட்டபடியே தன் கரம் இருந்த துப்பாக்கியை அருகில் நின்ற மாமிச மலையிடம் கைமாற்றினாள் மதுமிதா.

தனக்கும் மதுமிதாவுக்கும் இடையில் உள்ள தூரம் கணக்கிட்டார் குலாம்ஷா. மாமிச மலைகளாய் நிற்பவர்களின் மேல் விழிகளை எறிந்து நோட்டமிட்டார் குலாம்ஷா. மனதுக்குள் சொல்லிக் கொண்டார் குலாம்ஷா.

"இப்போது குலாம்ஷாவின் முறை."

■

மதுமிதா கட்டிலில் படுக்க வைக்கப்பட்டிருந்தாள்.

டி.ஐ.ஜி.டென்சில் கவலையோடு டாக்டரின் முகம் பார்த்தார்.

"கவலைப்பட ஒன்றுமில்லை டி.ஐ.ஜி. எதிர்பாராத அதிர்ச்சி. மயக்க மருந்தின் உபயம் எல்லாம் சேர்ந்து ஆளை மயக்கத்தில் போட்டுவிட்டது. இன்னும் பத்து நிமிடத்தில் ஓ.கே...."

என்று சொல்லிவிட்டு, தான் போகலாமா என்பது போல் பார்த்தார்.

"தாங்யூ டாக்டர். தேவை எனில் தொடர்பு கொள்கிறேன்"

டாக்டருக்கு விடை கொடுத்து மதுமிதா வீட்டின் முன்ஹாலில் இருந்த தொலைபேசி நோக்கிச் சென்ற டி.ஐ.ஜி டென்சிலின் பார்வையில் அது விழுந்தது.

கதவின் ஓரத்தில் தரையில் கிடந்தது அது.

விழிகளை விரித்து ஆச்சரியமாய் பார்த்தவர் அதை நெருங்கி குனிந்த நொடியில்....

முன்ஹாலின் வலது புறத்து ஜன்னலில் இருந்து நீண்டு கொண்டிருந்தது ஒரு துப்பாக்கி.

டி.ஐ.ஜி டென்சிலின் கரம் தரையில் கிடந்த பொருளை எடுக்க நீண்ட போது துப்பாக்கியை நீட்டிய கரமும் டி.ஐ.ஜி டென்சிலை விழுங்க தன் துப்பாக்கி விசைக்கு ஆணையிட்டது.

(இன்னும் வரும்)

---

## சிந்தியா பதில்கள் ?!

### பேசாமல் இருப்பது ஏன் பெண்கள்?

காதல் பிறந்தால் கவிதை கொட்டுமாமே காரணம் என்ன?

**தமீமா - கெலி ஓய.**

*மனசுக்குள் பெய்யும் மழை. அந்த மழைதான் (க)விதை வளரக் காரணம் ஆகிறது தமீமா.*

■

நன்றாக காதலிக்கும் போது பேசாமல் விடும் பெண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**இ.லெ.சூர்தீன் - கொழும்பு-13.**

*உம்மவள் அடிக்கடி ஊடல் கொள்கிறாளாக்கும். மனதில் உள்ளதை பேச வெட்கம் எழுந்து தடுக்கும் போது மங்கையானவள் மௌனத்தால் பேசுகிறாள். அது சரி சூர்தீன் அதென்ன நன்றாக காதலிப்பது?*

■

மது போதைக்கு அடிமையாகும் இளைஞர்களைப் பற்றி உம் அபிப்பிராயம் என்ன?

**ஐ.எல்.ஹசன் - பொத்துவில்.**

*தண்ணீரில் கரைகிறார்கள்.*

■

நடிகை வடிவுக்கரசி தற்போது ஏன் திரைப்படங்களில் தோன்றுவதில்லை?

**வி.கே.சுப்பிரமணியம் - தெல்தோட்டை.**

*தோன்றுவதுண்டே. அம்மா வேசத்தில் அவரை உமக்கு அடையாளம் தெரியவில்லையாக்கும்.*

■

டியர் சிந்தியா! தூய்மையான அன்பை அறிந்து கொள்வது எப்படி?

**செல்வி ஆர்.பபி - ராகம.**

*சோதனைகள் சூழ்ந்து வரும் போது தூரவிலகாமல் இருக்குமானால்.*

■

தற்போது பரவிவரும் 'ஹெரோயின்' என்ற எமனின் 'ஹீரோயின்' பற்றி சில வரிகள்?

**வீ.எல்.ரெஜினோல்ட் - கொழும்பு-02.**

*அவள் சந்தோசப்படுத்துவதால் திறக்கப்படுவது சொர்க்கம் அல்ல. நரகம்.*

■

தம்மைத்தாமே தாழ்த்திக் கொள்பவர்களைப் பற்றி?

**செல்வி ஜெயந்தி சிதம்பரம் - புத்தளம்.**

*தன்னம்பிக்கையை தவறவிட்டவர்கள்.*

■

நமது நாட்டில் துப்பாக்கிகளே இல்லாவிட்டால் நாடு எப்படி இருக்கும்? (ஒரு கற்பனைதான்)

**சாந்தி செல்வராஜ் - வட்டவளை.**

*பாலும் தேனும் பாய்ந்தோடும். நாளும் பொழுதும் அமைதி தவழும். (இதுவும் கற்பனைதானோ?)*

■

'கருணைக் கொலை' டாக்டர்களுக்கு அவசியம்தானா?

**நிஸ்மியா றஷான் - அக்குறனை.**

*சில சமயங்களில் மட்டும் என்பது என் கருத்து.*

■

பெண்ணைப்பற்றி தூற்றும் பெண் தானும் தூற்றப்படுவாள் என்று எதிர்பார்ப்பதில்லையே ஏன்?

**ஜெ.ஜெனிற்றா - பாலையூற்று.**

*பெண்ணே பெண்ணுக்கு எதிரி என்பதை அவ்வாறானவர்கள் விடயத்தில் ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கிறது.*

■

காதலில் தோல்வி அடைந்தால் அழுவதா அல்லது சிரிப்பதா?

**ரி.்.கா பிரேவுஸ் - தெமட்டகொடை.**

*"சிலர் சிரிப்பார்-சிலர் அழுவார். சிலர் சிரித்துக்கொண்டே......"*

■

2000ம் ஆண்டில் உலகம் எப்படி யிருக்கும்?

**அஸ்வர்தீன் - பொலன்நறுவ.**

*பொறுத்திருந்து பார்ப்போமே, என்ன அவசரம்? ஆனால் ஒன்று இப்போதிருப்பது போல் இருக்காது.*

■

பிறரைப்பற்றி பேசுவோரைப் பற்றி?

**எஸ்.லக்ஸ்மன் கஸ்தூரி - வெளிமட.**

*பேசப்படக் கூடிய பிறர் பற்றி பேசுவதில் தவறில்லை. பேசப்படக் கூடாத பிறர் பற்றி பேசுவதின் மூலம் அவர்கள் பிரபலமடையவும் காரணமாகிவிடுவதுதான் பிழை.*

■

இனப்பிரச்சனையே இல்லை என்கிறாரே ஜனாதிபதியின் செயலாளர்?

**வி.தர்மேந்திரன் - குருநாகல்.**

*அப்படியானால் பாராளுமன்ற தெரிவுக் குழுவின் முடிவைத்தான் எதிர்பார்க்கிறோம் என்று சொன்னதெல்லாம் பொய்யா? போய்யா ஒன்றுமே புரியவில்லை இலங்கையிலே.*

■

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்தி அரசியலில் பிரவேசிப்பாரா?

**செ.சிவபெருமான் - பலாங்கொடை.**

*மரம் ஒய்ந்தாலும் காற்று அதனை விடாது என்பது போல, அவர் விரும்பாவிட்டாலும் அரசியல் வாதிகள் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தர்களாக இருக்கிறார்கள். மனம் மாறுமோ தெரியவில்லை. நெற்றிக்கண்ணை காட்டாமல் கேள்வி கேட்டதற்கு தாங்ஸ்.*

தாங்கள் ஏன் கேள்வி கேட்பவர்களின் முழு முகவரியை தெரிவிப்பதில்லை.

**ஆர்.ராஜேந்திரன் - சிலாபம்.**

*சம்பந்தப்பட்டவர்களுக்கு சில சங்கடங்கள் ஏற்படக்கூடாது என்பதற்காக. முரசுக்கு பெண் வாசகர்களும் அதிகம். பங்குபெற்றலும் அதிகம்.*


■

---


## பேனா நண்பர் அரங்கம்



**பெயர்:** வி. கே. பிரேமா
**வயது:** 17
**முகவரி:** வி.சி.ரோட், தம்பிலுவில்-1
**பொழுதுபோக்கு:** வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.



**பெயர்:** எஸ். எம். இராமசாமி
**முகவரி:** ஒசுசல, பஸ்தரிப்பு நிலையம், அவிசாவளை.
**பொழுதுபோக்கு:** பத்திரிகை, கதை, கட்டுரை, நாவல் வாசித்தல், வானொலி கேட்டல், நண்பர் தொடர்பு.



**பெயர்:** ரி.எல். அஸ்வத்கான்
**வயது:** 14
**முகவரி:** ரம்ஸீன் மன்ஸில், ஹெல-முதுன்ன, பண்டாரவளை.
**பொழுதுபோக்கு:** ஓவியம் வரைதல், முத்திரை சேகரித்தல்.



**பெயர்:** எச்.எம்.எம். மஸ்னாரி
**வயது:** 25
**முகவரி:** இல.02, வீதி இல.8, கே.கே.வீதி, புத்தளம்.
**பொழுதுபோக்கு:** சினிமா, பத்திரிகை, வானொலி.

**பெயர்:** எம்.வை.எம். ஹாரூன்
**முகவரி:** 11, ஜெயரட்ன வீதி, ரப்பர் தோட்டம், நீர்கொழும்பு.
**பொழுதுபோக்கு:** முத்திரை சேகரித்தல், வானொலி கேட்டல், கதைப்புத்தகம் வாசித்தல், வெளிநாட்டு நாணயம் சேகரித்தல்.

**பெயர்:** ஞா. தயாளினி.
**வயது:** 15
**முகவரி:** 113/4, ஆராமய வீதி, தெமட்டகொட, கொழும்பு-9.

**பெயர்:** கனகராசா
**வயது:** 17
**முகவரி:** 01, பாடுமீன் லேன், மட்டக்களப்பு.
**பொழுது போக்கு:** பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி.

பேனா நண்பர் அரங்கம்
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை, கொழும்பு-05.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# 'குழந்தைக்காக'

-வை. நிரு-



அபர்ணா ஒருமுறை சுற்றும் முற்றும் திரும்பிப் பார்த்தாள். யாரும் தன்னைப் பார்த்துவிடுவார்களோ என்ற அச்சம் அவள் உடம்பை உதறச் செய்தது. ஒருவாறு துணிவை வரவழைத்துக் கொண்டு நர்சிங் ஹோமிற்குள் மெல்ல காலெடுத்து வைத்தாள். வருத்தமென்றால் டாக்டரைச் சந்திப்பது வழக்கம்தானே. இன்று மட்டும் ஏன் இந்த அச்சம், உதறல்? ஓ....தான் செய்யப் போகும் காரியம் தவறானது எனத் தெரிந்ததால் அந்த அச்சம் உதறல! உள்ளே நுழைந்தவள் 'இனி எப்படி டாக்டரிடம் கதைப்பேன்? எங்கள் குடும்ப டாக்டராயிட்டே! என்னைப் பற்றி என்ன நினைப்பார்?' மனதுக்குள் ஆயிரம் கேள்விகள் தோன்றிய போது அவள் நெஞ்சு பயத்தால் படபடத்தது.

"அபர்ணாவா? என்னம்மா வாசலிலேயே நின்றுவிட்டாய். சுகமில்லையா? கிட்ட வாம்மா" என்று டாக்டர் லட்சுமி அழைத்த போது அவள் திடுக்குற்றாள்.

"இ....ல்....லை டாக்டர் வ....ந்து..."

"ஏன் அபர்ணா தடுமாறுகிறாய்?"

இ....ல்லை டாக்டர் எ.....ப்படி சொல்வதென்று தெரியவில்லை."

"என்னம்மா நான் உன் குடும்ப டாக்டர் தானே. விசயம் எதுவானாலும் என்னிடம் சொல்ல என்ன தயக்கம்? பயம்?"

"டாக்டர் எனக்கு தலைச்சுற்று வாந்தியென்று நேற்று வந்து என்னை சோதித்த போது நான் கர்ப்பமாயிருப்பதாக சொன்னீர்கள். ஆனால் இன்று அபோர்ஷன் செய்யும் படி கேட்க வந்திருக்கிறேன் டாக்டர்."

"அபர்ணா...!" டாக்டருக்கே அதிர்ச்சி. என்னம்மா இப்படி சொல்கிறாய? கருவை கலைப்பது பாவமாயிட்டுதே. எங்கள் தொழிலுக்கே அது துரோகமாயிட்டுதே.

"எனக்கு அது புரியுது டாக்டர். இருந்தும் இந்தக் கருவைக் கலைப்பதைத் தவிர எனக்கு வேறு வழியே தெரியவில்லை."

"உன் கணவர் நிரஞ்சனுக்குத் தெரியுமா?"

"இல்லை டாக்டர். நான் கர்ப்பமாயிருப்பதோ அதை கலைப்பதோ எதுவும் என் கணவருக்குத் தெரியாது. தெரியவும் கூடாது" லட்சுமியின் கரங்களைப் பற்றி கெஞ்சினாள்.

"அப்படி என்ன காரணத்திற்காக அபோர்ஷன் செய்யப் போகிறாய்?" லட்சுமி கோபமாகத்தான் கேட்டாள்.

"ப்ளீஸ் டாக்டர். கோபப்படாதீர்கள். நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். காரணம் புரியும்" என்று காரணத்தை இரகசியமாகவே சொன்னாள்.

காரணத்தைக் கேட்ட டாக்டருக்கு அபர்ணாவின் துணிவைப் பார்த்து அதிசயப்படுவதா? அல்லது பாராட்டுவதா என்று தெரியவில்லை. ஆனாலும் நிரஞ்சனிலும் அளவு கடந்த அன்பை வைத்துக் கொண்டா அபர்ணா இப்படி நடந்து கொண்டாள? பாவம் அவளும் என்ன செய்வது? அவளின் எண்ணம் எதுவானாலும் வெற்றியளிக்கட்டும் என்று மனதினுள் வேண்டிக் கொண்டு,

"அபர்ணா, ஆரம்பத்திலே நீ கருவை கலைக்க வந்தது ஒரு வகையில் நல்லது தான். நான் கொடுக்கும் மாத்திரைகளை சாப்பிட்டாலே போதும். வேறொன்றும் செய்யத் தேவையில்லை" என்று கூறி மாத்திரைகளைக் கொடுத்தாள். அதைப் பெற்றுக் கொண்ட அபர்ணா டாக்டர் லட்சுமிக்கு நன்றியையும் தெரிவித்துக் கொண்டு விடைபெற்றாள்.

இரண்டாம் நாள் வழமை போல் நிரஞ்சன் அலுவலகத்தால் வந்ததும் வாசலிலே நின்று புன்னகையோடு அவனை வரவேற்று, அவனின் ஷேர்ட், சப்பாத்துக்களை தானே கழட்டிவிட்டாள் அபர்ணா. அவனும் வழமை போல அவளை அணைக்கப் போன போது "என்னங்க விடுங்கள் வேண்டாம்" என அவள் தடுத்தாள்.

அவள் தடுத்ததால்.....! அவனுக்கு விசயம் புரிந்து விட்டது. "சரிதான் இந்தமுறையும் ஃபெயிலியரா? எப்பதான் எனக்கு குழந்தையைப் பெற்றுக் கொடுக்கப் போகிறாயோ தெரியாது!"

"குழந்தையென்றால் அவ்வளவு விருப்பமா?" என அபர்ணாதான் கேட்டாள்.

"பின்னே இருக்காதா?" பதில் கூறிக்கொண்டே நிரஞ்சன் குளிக்கப் போனான்.

அன்றிரவு அபர்ணா வீட்டுக்கு பக்கத்து வீட்டு பங்கஜம் வந்திருந்தாள். அந்நேரத்தில் தான் அவளுக்கு ஒய்வான நேரம். அதனால்தான் இரவு என்றும் பாராது சுக நலங்களை விசாரிக்க அபர்ணா வீட்டுக்கு வந்தாள். அபர்ணா பங்கஜத்தோடு கதைத்துக் கொண்டிருக்கும் போது, பெண்களின் சமாச்சாரத்தில் அநாவசியமாக ஏன் தலையிடுவான் என்று எண்ணி நிரஞ்சன் தன் அறைக்குள் இருந்து கொண்டு அன்று நடந்த முக்கியமான விடயங்களை நாளேட்டில் எழுதிக் கொண்டிருந்தான்.

அப்போதுதான் பங்கஜம் அபர்ணாவைக் கேட்டாள். "கலியாணம் செய்து எவ்வளவு காலம் பிள்ளை? இன்னும் உன் வயிற்றில் குழந்தை குட்டி தங்கவில்லையா பிள்ளை?" என விசாரித்த போதுதான் அபர்ணாவின் மூளையில் மின்னலாய் ஒரு திட்டம் தோன்றியது. தன் திட்டத்திற்கும் பங்கஜமக்கா கேட்ட கேள்விக்கும் இதுதான் சந்தர்ப்பம் என எண்ணி,

"ம்....."என்ற ஒரு பெருமூச்சுடன் "அக்கா நீங்கள் கேட்டது போல வேறு சிலரும் என்னை கேட்டுட்டார்கள். என்னால் என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. குழந்தையில்லையென்றால் பெண்களைத்தான் மலடியென்று பகிடி பண்ணுவார்கள். ஆண்களைக் குறை சொல்ல மாட்டார்கள். அதனால் நான் டாக்டரிடம் என்னை சோதித்துப் பார்த்தேன். என்னில் எந்தக் குறையுமில்லையாம். சில வேளை அவரில் தான் குறைபாடுகள் இருக்குதோ தெரியாது. எப்படி அவரை நான் டாக்டரிடம் சோதிக்க அழைப்பதென்று தெரியவில்லை. சில வேளை சோதித்துப் பார்த்தபின் அவர்தான் மலடு என்று டாக்டர் சொல்லிவிட்டால் அது அவருக்கும் அவமானம். என்னாலும் அதைத் தாங்க முடியாது. அதனால ஏதோ விதிப்படி நடக்கட்டும் என்று நான் பொறுமையாக இருக்கிறேன் அக்கா" என்று அபர்ணா பங்கஜத்துக்கு கூறிக் கொண்டிருந்தாள்.

அபர்ணா சத்தமாக கூறிக்கொண்டிருந்ததால் அக்கதை நிரஞ்சனின் காதிலும் விழுந்தது. அதைக் கேட்டதிலிருந்து அவனுக்கு அபர்ணா மேல் கோபம் கோபமாக வந்தது. "அவள் உள்ளுக்குள் வரட்டும் நான் ஆண்மையுள்ளவனா இல்லையா என்று நிரூபிக்கிறேன். என்ன சொன்னாள்?டாக்டர் சோதித்துப் பார்த்து நான் மலடு என்றால் எனக்கு அவமானமாம். தனக்கு அதை தாங்க முடியாதாம். வரட்டும்.... உள்ளே வரட்டும் சனங்கள் தன்னை மலடியென்று சொல்லப் போகிறார்களே என்பதை மறைக்கவா அவள் என்னை மலடு என்று சொல்கிறாள்." அபர்ணா சொன்ன கதையைக் கேட்டதிலிருந்து அவன் உள்ளமும் ஆத்திரத்தால் கொந்தளித்தது. 'எவ்வளவு நேரமாக கதைத்துக் கொண்டிருக்கிறாள். உள்ளே கூப்பிடுவோமா....இல்லை நான் வெளியே போகட்டா.... வேண்டாம்.... தானாகவே உள்ள வரட்டும்' என சஞ்சலப் பட்ட மனதுக்கு ஆறுதல் கூறிவிட்டு கட்டிலில் படுக்கப் போன போது அபர்ணாவும் உள்ளே நுழைந்தாள்.

அவளைக் கண்டது தான் தாமதம் எட்டி அவள் பின்னலைப் பிடித்திழுத்து கன்னத்தில் விட்டான் ஓர் அறை.

தன் கணவன் கோபப்பட்டதை ஒரு நாளுமே கண்டிராத அபர்ணாவுக்கு அந்த அடி எதிர்பாராததுதான். அவன் அடித்ததற்கான காரணத்தை அவள் புரிந்து கொண்டதால் பேசாமல் இருந்தாள்.

நிரஞ்சனின் கோபத்தைப் பார்த்தால் பிரச்சினை பெரிசாகத் தோன்றுமோ எனப் பயந்தாலும், பரவாயில்லை பிரச்சினைக்குப் பின்னராவது ஒரு முடிவு வரட்டும் என்றெண்ணி அபர்ணா எதுவுமே பேசாதிருந்தாள். அவளின் மௌனம் நிரஞ்சனுக்கு மேலும் கோபத்தை தூண்டியது. "என்னடி அப்பாவி போல் நடிக்கிறாய். நான் உள்ளே இருக்கும் போதே என்னை மலடு என்று சொல்லி கதைக்கிறாயே. நான் இல்லாத போது என்னைப் பற்றி எப்படியெல்லாம் கதைத்தாயோ தெரியாது. உன்னுடைய மலட்டுத்தன்மையை மறைக்கவா என்னை மலடு என்று நினைக்கிறாய்?"

"நான் ஒன்றும் மலடியில்லை." வாய்க்குள் முணுமுணுத்தாள்.

"என்னடி முணுமுணுக்கிறாய்? நீ மலடியில்லையென்று டாக்டர் சொல்லித் தான் தெரியுமா? டாக்டர் சொல்லாமலே நான் மலடனல்ல என்று எனக்குத் தெரியுமடி."

"தெரிந்திருக்கும் சில வேளை ஏற்கனவே உங்களுக்கு பிள்ளை பிறந்திருந்தால் தெரிந்திருக்கும்."

"என்னடி சொன்னாய்? என்னை அவ்வளவு கேவலமாக நினைச்சுட்டியா?" என கேட்டு அபர்ணாவுக்கு அடிக்க கைகளை ஓங்கினான். ஆனால் அடிக்கவில்லை. அவனின் குற்ற உணர்வுகள் அடிக்க விடாமல் தடுத்தது.

"அபர்ணா என்னை மன்னித்திடு. நான் கோபத்தில் பொறுமையை இழந்து உன்னோடு சண்டை பிடித்திட்டேன். நான் செய்த தவறு நாளாந்தம் என் மனசாட்சியைக் கொல்லுது. எப்படி உனக்கு சொல்வதென்று தெரியவில்லை. நான் நல்லவனல்ல. என்னை நீ நம்பாதே. நான் ஏமாற்றுக்காரன், கொலைகாரன்" அழுது புலம்பிக் கொண்டு சுவரில் தன் தலையை மோதி மோதி அடித்தான்.

அபர்ணாவுக்கு ஏன்தான் அவரின் கோபத்தை தூண்டிவிட்டேனோ எனப் பயந்து அவனை கட்டிப்பிடித்து சுவரில் தலையை மோதவிடாது தடுத்தாள். "நீங்கள் நல்லவர். நான்தான் உங்களின் கோபத்தை தூண்டிவிட்டு பொறுமையை சோதித்தவள். என்னைத்தான் நீங்கள் மன்னிக்க வேண்டும்"கெஞ்சினாள்.

நிரஞ்சன் அழுது புலம்புவதைவிட்டு நிதானத்திற்கு வந்தான். "அபர்ணா, நான் ஒரு பெண்ணுக்குத் துரோகம் செய்துவிட்டேன். அதனால் எனக்கு மனதில் நிம்மதியில்லை" கூறியபோது அபர்ணா ஆச்சரியப்பட்டாள். ஆனால் ஆத்திரப்படவில்லை. "என்ன நீங்கள் சொல்வது உண்மையா?" என சிறிதும் சலனமுமில்லாமல்தான் கேட்டாள்.

"உண்மைதான் அபர்ணா. மாகாண சபையில் எனக்கு வேலை கிடைத்த போது நான் மட்டக்களப்பைவிட்டு திருகோணமலைக்குச் சென்றது தெரியும்தானே. அங்கே என்னுடன் பல இடத்து ஆட்களும் வேலை செய்தார்கள். அதோடு கீதா என்ற திருகோணமலைப் பெண்ணும் வேலை செய்தாள். அவள் இளமையின் அழகைப் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கலாம். அந்தளவிற்கு பார்ப்பவர்களை மயங்கவைக்கும் ஒரு வசீகரத் தோற்றம், அவள் அழகு. அவள் விதம்விதமாக அணியும் நாகரிக உடைகள்கூட என்மனதை கொள்ளைக் கொள்ளும். எப்பவும் கவலையில்லாதவள் போல் எல்லோருடனும் கலகலப்பாக கதைத்துச் சிரிப்பாள். கீதாவை காதலிக்க எத்தனையோ ஆண்கள் ஏங்கிக் கொண்டிருக்கும் போது, அவள் என்னிடம் வந்து, "ஹலோ நிரஞ்சன் உங்களின் அமைதியான குணம் எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. நான் நாகரிகத்தில் வளர்ந்தாலும் ஒரு நல்ல குணமுள்ளவருக்கு அடக்கமாக வாழ விரும்புகின்றேன். ஐ மீன், அதாவது நான் உங்களை காதலிக்கிறேன்."

"நான் வேலைக்குச் சேர்ந்து சரியாக ஒரு மாதம் கூட ஆகவில்லை. அதனால் எவருமே பழக்கமில்லாததால் நான் அமைதியாக இருந்தேன். அந்த அமைதியிலேயே என்னைப்பற்றி எல்லாம் தெரிந்தவள் போல் எடுத்தவுடனே என்னை காதலிக்கிறேன் என்று சொல்கிறாளே. ஒரு வேளை இவள் காதலை பொழுதுபோக்காக நினைக்கிறாளோ? என்றுதான் நான் நினைத்தேன். பரவாயில்லை. எத்தனையோ பேர்கள் இவள் காதலுக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் போது எனக்கு தானாக கிடைத்த சான்ஸை ஏன் வீணாக்குவான் என்று என் குரங்குமனம் சொன்னது. அதனால் எனக்கும் உனக்கும் நிச்சயமான திருமணத்தைப்பற்றி நான் எதுவுமே அவளிடம் சொல்லாமல் அவளைக் காதலிப்பது போல் பழகினேன். என் மனதைக் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அவளுடன் நெருங்கிப் பழகிவிட்டேன். அவள் என்மீது உயிரையே வைத்து பழகுவது எனக்கு நன்கு விளங்கினாலும் அதைப் பொருட்படுத்தாதுதான் நான் பழகினேன்.

"எங்கள் பழக்கத்திற்குப் பின்பு ஒரு நாள் தான் கர்ப்பமாக இருப்பதாகவும், தன்னை விரைவில் கலியாணம் செய்யும் படியும் என்னை வற்புறுத்தினாள்.

"அதைக் கேட்டவுடன் எனக்கு என்ன செய்வதென்றே தெரியாமலிருந்தது. எனக்கு நிச்சயமான திருமணத்தைப் பற்றி முன்னரே சொல்லியிருந்தால் ஒரு வேளை என்னோடு அவள் பழகாமல் விட்டிருப்பாள். அதை மறைத்துப் பழகி அவளுக்குத் துரோகம் செய்துவிட்டேனே என நினைத்த போது என் மனசாட்சி என்னைக் கொன்றது. இருந்தும், நான் அவளிடம், "கீதா கருவைக் கலைத்திடு. சிறிது காலம் போனபின் கலியாணத்தைப் பற்றி யோசிப்போம்" என்றேன்.

"அதைச் சொன்னதுதான் தாமதம் அவள் கோபத்தில் சீறினாள். "ஏன் கலியாணத்தை பிறகு யோசிக்க வேண்டும்? முதன் முதலாக உருவான கருவை எப்படி நான் கலைப்பது? உங்களை நம்பித்தானே நான் பழகினேன். இப்ப இப்படிச் சொல்கிறீர்களே இது நியாயமா?" என வாதாடினாள்.

"சும்மா போடி நானா உன்னைக் காதலிக்கிறேன் என்று சொன்னேன். நீதானே என்னை காதலிக்கிறேன் என்று சொன்னாய்" என்றேன்.

"அப்படியென்றால் ஏன் என்னோடு பழகினீர்கள்? நீங்கள் என்மேல் காட்டிய அன்பு எல்லாம் போலியா? உங்களை நம்பித்தானே நான் பழகினேன். பிளீஸ் என்னைக் கைவிடாதீர்கள்" என்று அழுது கெஞ்சியபோதும் என் மனம் ஏனோ தெரியவில்லை அவள் மேல் இரக்கம் காட்டவில்லை. அன்று சந்தித்து கதைத்த அவளை நான் மீண்டும் சந்திக்கவேயில்லை. அவளும் வேலைக்கு வரவில்லை.

"அந்நேரம்தான் கல்யாணத்திற்கு நாள் எடுத்துவிட்டாச்சு. விரைவில் வா என்று அப்பா கடிதம் போட்டிருந்தார். அதைச் சாதகமாக வைத்து மட்டக்களப்பிற்கு ரான்ஸ்ஃபர் கேட்டேன்- கிடைத்து விட்டது. உடனே புறப்பட்டுவிட்டேன்.

"ஊருக்கு வந்ததும் திருமணம் நடந்து விட்டது. என் மனதுக்குள் கீதாவைப் பற்றிய எண்ணம்தான். அவளுக்குத் துரோகம் செய்துவிட்டேனே என்றுதான் என் மனம் சொன்னது. ஆனாலும் அன்று சந்தித்தபின் கீதா மீண்டும் என்னைச் சந்திக்காததால் கருவை கலைத்திருப்பாளோ, அல்லது என்னை மறந்திருப்பாளோ என்றுதான் நான் எண்ணினேன். அனால் எனக்கு கல்யாணம் முடிந்து பத்து மாதத்திற்குப் பின்னர் அவளிடமிருந்து. ஒரு லெட்டர் வந்தது. அதுதான் இந்த லெட்டர் படித்துப்பார்" என தன் டயறிக்குள் இருந்த கீதாவின் லெட்டரை அபர்ணாவுக்கு எடுத்துக் கொடுத்தான் நிரஞ்சன்.

அபர்ணாவும் அதை வாங்கிப் படித்தாள்.

**அன்பின் நிரஞ்சனுக்கு,**

*உங்களை நம்பி மோசம் போன நான் உங்களுக்கு உருவான குழந்தையை சுகமாக பெற்றெடுத்துவிட்டேன். அதுவும் ஒரு பெண்குழந்தைதான்.*

*கருத்தரித்த போது சுகயீனமாக இருந்ததால் 3 வாரங்கள் அலுவலகத்திற்கு போகமுடியாமல் பின்னர் போனபோது நீங்கள் கல்யாணத்திற்காக ரான்ஸ்ஃபர் எடுத்துப் போன செய்தி கேட்டு நான் அதிர்ச்சிக்குள்ளானேன். என் நிலையை நண்பர்களுக்குத் தெரிவித்த போது அவர்கள் உங்கள் முகவரியைத் தந்து உங்களுக்கு நடக்கவிருக்கும் கலியாணத்தை தடுக்கும்படி கூறினார்கள். ஆனால் நான் அப்படிச் செய்யவில்லை. ஏனெனில் உங்கள் மேல் கொண்ட தூய அன்பை நீங்கள் புரியாத போது வற்புறுத்தி உங்களை கல்யாணம் செய்ய நான் விரும்பவில்லை. ஆனால் உங்களுக்கு உருவான குழந்தையை என்னால் அழிக்க முடியாமல் போய் விட்டது. கலியாணம் ஆகாமல் பிள்ளையைச் சுமக்கும் என்னைப் பார்த்து ஊரவர்களும், உறவினர்களும் கேலி பண்ணியும், நையாண்டி பண்ணியும் என்னை ஒதுக்கிவிட்டார்கள். இந்த நிலையிலும் உங்கள் பிள்ளைக்காக நான் உயிர்வாழ்ந்து பிள்ளையை சுகமாக பெற்றெடுத்து விட்டேன். அந்தப் பிள்ளைக்கு நீங்கள் தான் தகப்பன் என்று ஏற்றுக் கொள்ள வேண்டும்.*

*என்னை ஒதுக்கிவிட்ட சமூகத்தின் மத்தியில் நான் பிள்ளையோடு எப்படி தனியாக வாழ்வது? அதனால் பிள்ளையை அனாதையில்லாத்தில் ஒப்படைத்துவிட்டு, நீங்கள் வந்து கேட்டால் கொடுக்கும்படியும் வறி உங்கள் பெயர் விபரங்களை கொடுத்திருக்கிறேன். நீங்கள் விரும்பினால் பிள்ளையை பொறுப்பேற்கலாம். ஆனால் இக்கடிதம் உங்கள் கையில் கிடைக்கும் போது நான் உயிருடன் இருக்க மாட்டேன்.*

**இப்படிக்கு,**
**கீதா.**

கடிதத்தைப் பார்த்த அபர்ணாவின் முகத்தில் எந்தவித மாற்றமும் இல்லை. மௌனமாகவே தலையை நிமிர்த்தி நிரஞ்சனைப் பார்த்தாள்.

அவள் பார்வையையும், மௌனத்தையும் அவதானித்த நிரஞ்சன், "அபர்ணா உனக்கு கோபமே வராதா? இவ்வளவும் தெரிந்த பின்னும் எனக்குப் பேசாமல் பொறுமையாக இருக்கிறாயே? ஏன்"

"அதுவா? ஏற்கனவே எனக்கு எல்லாம் தெரிந்தபடியால் பொறுமையாக இருக்கிறேன். எப்படித் தெரியும் என்று யோசிக்கிறீர்களா? உங்களுக்கு கடிதம் வந்த அன்றே எனக்கும் கீதாவிடமிருந்து கடிதம் வந்தது. அதாவது அனாதையில்லத்தில் ஒப்படைத்த உங்களின் குழந்தைக்கு என்னை தாயாக நினைத்து எடுத்து வளர்க்கும்படி எழுதியிருந்தாள். அதுமட்டுமல்ல நீங்களாக உண்மையைச் சொல்லும் வரை எனக்குத் தெரிந்தமாதிரி காட்டிக் கொள்ள வேண்டாம் என்றும் எழுதியிருந்தாள். அதனால் தான் நீங்களாக சொல்லும் வரை பொறுமையாகக் காத்திருந்தேன். அந்தக் குழந்தைக்காகத்தானோ இதுவரையும் எனக்கும் குழந்தைப் பாக்கியம் கிடைக்காமல் இருந்ததோ தெரியாது. இருந்தும் இம்முறை அந்தப் பாக்கியம் எனக்கு கிடைத் போதும் நான் அதை விரும்பாமல் கலைத்துவிட்டேன். ஏனெனில் ஏற்கனவே தகப்பன் இருந்தும் அனாதையாக ஒரு குழந்தை வளர்கிறது. இந்த நிலையில் அந்தத் தகப்பனுக்கு இன்னுமொரு குழந்தையா? முறையாக ஒரு பிள்ளை கிடைத்தால் தவறாக கிடைத்த பிள்ளையை மறந்துவிடுவீர்கள் என்று நினைத்தேன். அதுமட்டுமல்ல பிள்ளையில்லாமல் மலடியென்ற பட்டத்தை நான் பெற்றாலும் பரவாயில்லை. ஏற்கனவே குழந்தையுள்ள உங்களை மலடன் என்று சொன்னால் சில வேளை அவமானத்திலாவது இல்லையேல் கோபத்திலாவது சரி உண்மையை ஒத்துக் கொள்ள வைக்கலாம் என்ற திட்டம் எனக்கு குழந்தைப் பாக்கியம் கிடைத்த போது தோன்றியதால் எங்கள் குடும்ப டாக்டர் லட்சுமியின் உதவியோடு என் கருவைக் கலைத்துவிட்டேன். அந்த நேரம் பார்த்து பங்கஜமக்காவும் குழந்தையில்லையா என்று கேட்ட போது என் திட்டத்திற்கும், அவ கேட்டதற்கும் இதுதான் சந்தர்ப்பம் என்றெண்ணி உங்களை அப்படி கதைத்தேன். என் திட்டம் வீணாகவில்லை. உங்களுக்கு கோபத்தை உண்டாக்கி உண்மையை வரவழைத்துவிட்டேன்."

"அபர்ணா என்னை மன்னித்துவிடு. உண்மையைச் சொன்னால் நீ என்னை எந் நேரமும் சந்தேகத்தோடு பார்ப்பாய் என்று பயந்துதான் சொல்லாமல் மூடி மறைத்தேன். இருந்தாலும் நான் ஏமாற்றியதால்தான் கீதா தற்கொலை செய்து கொண்டாள் என்பதை அறிந்த நாள் தொடக்கம் என் மனதில் வேதனையும், கவலையும் தான். ஒருவகையில் தற்கொலையைத் தூண்டிவிட்ட நானும் ஒரு கொலைகாரன்தான்....."

"போதும் நிற்பாட்டுங்கள்! அவளது நாகரிகத்தையும், அழகையும் இரசித்த உங்களால் அவளின் மனதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவள் வாழ்க்கையைப் பொழுது போக்காக நினைப்பவள் என்று நீங்கள் தப்பாக எண்ணிவிட்டீர்கள். அது போல் அமைதியாக இருந்த உங்களை நல்ல குணமுள்ளவர் என்று நம்பி கண்டவுடன் காதல் கொண்டு பழகிவிட்டாள். இரண்டு பேரும் ஒருவரையொருவர் அறியாமலும், புரியாமலும் பழகியது தப்புதான். அதனால் வந்த விளைவுதான் இது. இனி நடந்ததை நினைத்து வருந்துவதில் பலனேதுமில்லை. அதை மறந்து முதலில் கீதாவின் ஆத்ம சாந்திக்காக ஐந்து மாதமாக அனாதையில்லத்தில் வளரும் குழந்தையை நாங்கள் பொறுப்பேற்க வேண்டும். திருகோணமலைக்கு பறப்படச் சம்மதமா?"

மனதினுள் குமைந்து கொண்டிருந்த கவலைகள் தற்போது கண்ணீராக கண்ணருகே வழிந்ததை சுண்டுவிரலால் சுண்டிவிட்டு, "அபர்ணா, பெற்றால்தான் பிள்ளையா? யார் பெற்றாலும் பிள்ளைதான் என என் குழந்தைக்காக பொறுமையாக இருந்து நீ செய்த தியாகத்தை நான் மறப்பேனா? அப்படிப்பட்ட உன் சொல்லை நான் மீறுவேனா? எல்லாவற்றுக்கும் நான் சம்மதம்" எனக் கூறிக் கொண்டு அவளுக்கு ஓர் அன்பு முத்தம் பதித்தான் நிரஞ்சன்.

(யாவும் கற்பனை)

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

சிறு கதை

# ஓவியக் காதல்

-எஸ்.ஏ. உதயன்- மன்னார்

அன்றைய தினசரிப் பத்திரிகையில் கட்டம் போட்டு செய்தி வ்ந்திருந்தது. ஆசிய நாடுகளின் ஓவியக் கண்காட்சியில் சூரிய நாராயணனின் 'ஒரு தேவதையின் ஊர்வலம்' என்ற ஓவியம் முதல் பரிசு பெற்றது.

சூரிக்கு இருப்புக்கொள்ள முடியவில்லை..... அந்தப் பத்திரிகையை எடுத்துக் கொண்டு பொன்னியைத் தேடி ஒடினான்.

"நான் தீட்டிய ஓவியம் பரிசு பெற்றிருக்கிறது... பொன்னி" கூவினான். அவளின் கையைப் பிடித்துக்கொண்டு கூத்தாடினான்.

அந்தப் பெண்ணும் சிரித்தாள்... அவளுக்குத் தெரியும்... சூரிக்கு தன்னை விட்டால் வேறு யாருமில்லை என்று... சூரியின் ஓவியத்தில் வண்ணங்களாக பரிமளித்த தேவதை பொன்னிதானே... என்பது உலகிற்குத் தெரிவதற்கு நியாயமில்லை, ஆனால் சூரியென்கிற ஓவியனை, படியேற்றி விட்டது இந்தப் பொன்னிதான் என்பது சூரிக்குத் தெரியும்.

சூரி பயிற்றப்பட்டவனில்லை..... பிறவிக் கலைஞன். சிறு வயதிலேயே வண்ணங்களால் ஜாலம் செய்ய முயன்றவன். அந்தக் கலைஞன் உருவானபோது பெற்றவர்கள் கூடத் தடையாகத்தான் இருந்தார்கள். "இது வெட்டி வேலை... உருப்படாதவன்... நாளெல்லாம் தூரிகையோடு என்ன உறவோ? ... ச்சீ அவனை விரட்டி வெறுத்தார்கள். சூரி தீட்டிய ஓவியங்களைத்தானே பார்த்து, வியந்து, சிரித்து, பாராட்டி மற்றவர்கள் அறியாது பெட்டிக்குள்ளே பூட்டி விட்டு விசனப்பட்டுப் போவான். அவனுக்குள்ளிருந்து எழுந்து வருகின்ற ஒரு சிருஷ்டியை யாரும் உணரவில்லை. அதனால்தான் வீட்டை விட்டு, அந்த ஊரை விட்டு ஒடி வந்தான்.

அவன் ஓடி வந்த கிராமம், எழில் கொஞ்சிப் பேசியது... சூரி பச்சைப் புல்வெளிகளின் கண்ணுக்குத் தெரியாத தாகத்தைக் கற்பனையில் வரைந்தான். மலை முகடுகள் மேகத்தை முத்தமிட்டதை வர்ணங்களால் சித்தரித்தான். பகலவனின் உதயத்தை தூரிகையால் முத்தமிட்டான். பூச்சூடிய புதுப் பெண்ணின் உள்ளத்தில் எழுகின்ற ஆசைகளை சித்திரத்தில் பூசினான்.

அந்த அற்புதக் கலைஞனோடு கைகோர்த்துக் கொண்ட கலா ரசிகைதான் பொன்னி........

தான் வரையும் சித்திரங்கள் கதை பேச வேண்டும்..... மனதுக்குள் நடமாட வேண்டும் என்று கனவு கண்ட போது பொன்னியின் அழகு உருவம் இந்த ஓவியனுக்காய் இறங்கி வந்தது. கிராமத்து செழுமையை மேனியில் வாரி இறைத்துக் கொண்டு ஓவிய இலட்சணங்களோடு ஒன்றித்து கொடியாய், மலராய், புனலாய், நிலவாய் இந்த சித்திரக்காரனின் தூரிகைக்குள் கட்டுப்பட்டுப் போனவள் பொன்னி.

'முகமில்லாத கிராமத்திற்குள் தொலைந்து விடுவானோ' இந்த சூரியன் என்ற கவலையில் பொன்னி சொன்ன யோசனையால் நாட்டின் தலைவரை ஓவியத்தில் சிறை வைத்து அவருக்கே பரிசளித்த சூரி... க்கு எதிர் காலத்தில் தங்கரதம் காத்திருந்தது... அந்த முயற்சியே சூரிய நாராயணன் என்ற ஓவியக் கலைஞனை உலகிற்கு முரசறைந்து காட்டியது.... அப்போது நாடு சூரியன் கலை வண்ணத்தைப் பேசிக் கொண்டது. நகரத்தின வியாபாரிகள் ரசிகர்களுக்கு முகவர்கள் ஆனார்கள். சூரியின் தூரிகை பிரசவித்தவைகள் ஏராளமாய் விலை போனது.

சித்திரமாய் தீட்டப்படுகின்ற உருவங்களுக்கு உயிரூட்டும் வித்தையை தொழில் ரகசியமாகப் பாதுகாத்தான் சூரி. அதுதான் அவனது ஆற்றலுக்கு வெற்றியென்று நம்பினான்.

இன்று பரிசு பெற்ற 'ஒரு தேவதையின் ஊர்வலம்' ஓவியம் மனதுக்குள் கருக்கொண்ட பொழுது அங்கே தேவதையாகப் பொன்னியைப் பார்த்தான். அவளின் சிரிப்பின் வசீகரத்தை பக்கத்திலிருந்தே படித்தான். சித்திரக் கூடத்தில் இவனுக்காய் நடமிட்ட பொன்னியை தன் வெற்றிக்கு பங்காளியாக்கினான்.

நேற்றுவரை கலையுலக ஜாம்பவான்களை மனனம் செய்த சூரியை... இந்த தூரிகைக்காரனை ... காற்றுக்கூட இன்று மனனம் செய்தது.

கலாசார அமைச்சு தலை நகருக்கழைத்தது. புகழாரம் சூட்டியது. பரிசு பெற வெளிநாடு செல்ல வேண்டும் என்றது...

பிறந்த இடத்தில் சிடு சிடுத்த அப்பா தேடிவந்தார். "சூரி.. நான் தான் உன்னைப் பெற்றேனென்று இந்த உலகிற்குச் சொல்ல மாட்டாயா?" என்று கெஞ்சினார். சூரிக்கு கோபம் வந்தது. "அப்பா.. நம் வீட்டுப் பெட்டியொன்றில் வைத்துப் பூட்டிய எனது கலையுலக அரிச்சுவட்டைப் பார்த்தாயா? ... நான் பாதம்பதித்த தளங்களெல்லாம் அங்கு தானே இருக்கின்றன பார்த்தாயா?... சூரியென்ற சூரியனை மறைக்க நினைத்தாயே!" பெற்றவர் தவித்துப் போனார்..

"சூரி உன்னைப் பெறுவதற்குத் தானே.. நான் பிறவியெடுத்தேன்."... அவர் உறவுக்குத் தந்த வியாக்கியானம் சரிதானா? அப்படியானால் பொன்னி! என் வெற்றியின் வேர்களுக்கு அவளின் எண்ணங்கள்தானே உரமானது!

"எனக்கு யர்ரும் வேண்டாம்.. பொன்னிதான் வேண்டும்." சூரியின் மனம் விசும்பியது.

உலகம் அவன் தூரிகையை நேசித்த போது... இறக்கை கட்டிப் பறந்தான் சூரி. இப்போது உலகின் கலைக் களஞ்சியங்கள் எல்லாம் சூரியின் வண்ணங்களை அடை காத்தன... நாளொரு நாடென்று வலம் வந்தான்.

போர் மேகங்களின் ஆக்கிரமிப்பில் பிறந்த மண் சீரழிந்து போன கொடுமை இந்த நேரத்திலேதான் நடந்தது. உடன் பிறப்புக்களின் மூச்சுக்கள் மரித்துப் போனது... கிராமத்தின் எழில் எரிந்து போனது. எஞ்சிய முகவரிகள் கடலுக் கப்பால் இந்தியாவின் எங்கோ ஒரு மூலையில் அகதியாய் இடம் பெயர்ந்த போது பொன்னியும் அந்நிலைக் காளானாள்.

எங்கோ ஒரு தேசத்தில் சூரி புகழப்பட்டான். அவனது கற்பனைக்குள் வாழ்ந்த ஜீவன் வற்றிப் போனதை யுணர்ந்தான். அவன் வானம் சிறுத்துப் போனது. பொன்னியின் அருமை தெரிந்ததும் சொந்த நாட்டிற்கு பறந்து வந்தான். கிராமம் கரைந்து காணாமற் போயிருந்தது. பொன்னி எங்கே?... அந்தக் கலைஞனின் கண்களுக்குள் இருதயம் எட்டிப் பார்த்தது. காணாமற் போன பொன்னியைத் தேடினான். நகர மத்தியில் சூரியன் சித்திரக் கூடத்தில் ஓவியம் பயில வந்த மாணாக்கர்களில் பொன்னி போன்ற தேவதை பிறக்கவில்லையே!

ஒரு ஓவியனை நேசிக்கத் தெரிந்த மானுடம் அவனுக்குப் புலப்படவில்லை. வெறும் வியாபாரத்துக்காய் ரவி வர்மன்களும், லதாக்களும், ராமுக்களும் உருவாகிக் கரையொதுங்கினார்கள். ஆனால் விளம்பரம் விரும்பாத பொன்னி.. கிடைக்கவில்லை.

இந்த ஐந்து வருடங்களில் சூரி நிறம் மாறிப் போனான். யாரோ வெல்லாம் சூரியைத் தோற்கடித்தார்கள். சூரியின் தூரிகை பலமிழந்து போயிற்று. சூரி ஒரு முன்னாள் ஓவியன் ஆனான். வானொலியில் பழம்பெரும் கலைஞன் என்று சூரியைப் பேட்டி கண்டார்கள். சூரிக்கு இறங்கு திசையென்று ஜோஸ்யம் சொன்னார்கள். இந்த வருடம் ஓவியக் கண்காட்சியில் சூரிக்கு இடமில்லை என்று பரணி பாடினார்கள்.

"என்னுடன் பொன்னியிருந்தால் தெரியும் சேதி" மனதுக்குள் சூளுரைத்தான் சூரி.

அப்பா மீண்டும் தேடி வந்து கேட்டார். "சூரி... நீயும், பொன்னியும் இரட்டைப் பிறவிகளா? அவளில்லாது உன்னால் வரைய முடியாதா?"

"அப்பா நீங்கள் விரும்பும் நிலவையும், சூரியனையும் என் தூரிகையால் பிடித்து உங்கள் கைகளில் தருகிறேன்.. ஆனால் என் பொன்னியை எனக்குப் பிடித்துத் தருவீர்களா?" சூரி இப்படித்தான் பதிலளித்தான். இதற்குப் பதில்கொடுக்க யாரும் இருக்கவில்லை. மனமுடைந்து போனான் சூரி. தான் பிறந்த குடிசைக்குள்ளே முடங்கிப் போனான்.

யாரோ சொன்னார்கள்... 'இந்தியாவிலிருந்து அகதிகள் திரும்புகிறார்கள்.'

உடலுக்குள்ளிருந்து உணர்வு ஒன்று துடித்து.. எழுந்தான்... நடந்தான்... தென்னங்கீற்றுக் கொட்டில்களுக்குள் அடைக்கலமான மண்ணின் மைந்தர்கள் கூட்டம் கூட்டமாய் மலர்ச்சி மறந்த மனிதர்கள். இவர்களுக்குள்ளே பொன்னியிருப்பாளா? அந்த மின்னலைத் தேடினான். அப்போது....

'சூரி...' இவன் நரம்புகளைக் கட்டிய அழைப்பு.. உற்சாகமாய்த் திரும்பினான்.. ஒல்லியாய்... குறுகிப் போன ஒரு பெண்...

இவள்... இவள்... இல்லை பொன்னியில்லை.. அவன் தீர்மானிக்க.. அவள் வரட்சியாய் சிரித்தாள்.. ஓ! இந்தக் கண்களுக்குள் ... மின்னலாய்.. அந்த நேசம் ...இது பொன்னிதான்.... சத்தியமாக இது பொன்னிதான்.

"பொன்னி! இதென்ன கோலம்... "

"பொன்னி.... பொன்னி" சூரிக்குள் மின்சாரம் பாய்ந்தது. தாவினான்.... அவளின் கைகளைப் பிடித்து முத்தமிட்டான்... இவன் முகத்தில் அவள் எலும்பு துருத்தியது.

"பொன்னி... என் சீவனுக்குள் வாசம் செய்பவளே.... ஏன் இப்படி மாறினாய்?"

பொன்னி சொன்னாள் "இது கலை.. சூரி.. இந்த மண்ணின் பிரதி பிம்பம் தானே கலை.." துடித்துப் போனான் சூரி.

"பொன்னி.. வா... என்னோடு. என் பயணத்தில் நீதான் நாயகி" சூரிக்குள் ஞானம் பேசியது.. தூரிகையோடு எழுந்தான்... மீண்டும் அந்த ஓவியன் 'ராஜ தர்பார்' நடத்த வருகின்றான். இப்போது அவனது வண்ணக் கலவையில் ஒரு

'யுத்தமும், கோலமும்' எழுந்தது.

மெலிந்து வற்றிப்போன பொன்னி.. கன்ன எலும்புகள் துருத்திப் போய் துயரத்தை பூசிக் கொண்ட பொன்னி... கையில் தட்டோடு யாசித்து நிற்கும் பொன்னி... ஆடைகளில் அழுக்குப் பிடித்த பொன்னி. ...

சூரியின் 'யுத்தமும், கோலமும' ஓவியத்தின் நாயகியானாள் பொன்னி.

உலகம் வியந்தது... சூரிக்கு இன்னுமொருவானம் விரிந்தது... சூரி ஓவியக் கண் காட்சியில் 'யுத்தமும், கோலமும்' ஓவியத்தை தந்ததற்காக மீண்டும் பரிசு பெற்றான்.. இது சூரியின் இரண்டாவது பயணம்.. அழைப்புக்கள் வந்தன.... பாராட்டுக்கள் குவிந்தன... பொன்னியின் கரத்தைப் பற்றிக் கொண்டே வெற்றி நாயகனாய் வலம் வந்தான் சூரி.

உலகம் பேசியது "சூரி ஒரு இறவாக் கலைஞன்" அதற்கு சூரி சொன்னான்,

"பொன்னி
என்னுடன்
இருக்குமட்டும்"




நிமிடக் கதை

**பாலியல் என்பது அழகானதுதான், அந்தரங்கமாக இருக்கும்வரை!!**

# இரவுக்குள் எத்தனை கரும்புள்ளிகள்

- எம். சுரேஷ் (கொழும்பு வளாகம்)



இரவு சில மனிதர்களின் முகங்களுக்குத் திரைபோட, மழை வெளியே பெய்தது. மனதிற்குள்ளும் தூறல்கள்...! கண்கள் இருளைத் துளாவி கைகள் லேசாக நடுங்கின. எங்குமே மயான அமைதி. நேரம் இரவு 12 மணியைத் தாண்டியிருக்கும். அந்தப் பாழடைந்த மாளிகையின் தெற்கு மூலையில் முடங்கிக் கிடக்கும் களஞ்சிய அறையில் தன்னைத்தானே எரித்துத் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டிருக்கும் மெழுகுவர்த்தியை நோக்கிக் கால்கள் நகர்ந்தன. கொஞ்சம், கொஞ்ச நேரம்தான்..... எதிர்பாராத விதமாக அந்த மெழுகு வர்த்தியும் உயிரைவிட, பயம் முகத்தைக் கௌவியது. வீடு இயற்கை இருளுக்குள் மூழ்கிப் போனது. 'மூன்றாம்பிறை' நிலவின் மங்கலான ஒளியைத் தவிர அங்கு வேறு வெளிச்சமேயில்லை.

சில நிமிட நகர்விற்குப் பின் மெல்லிதாய் காலடி ஓசை....அதே உருவம். வழமைபோல் புணர்ச்சிக்காக அலைந்து கொண்டிருந்தது! இந்த மண் தின்னும் உடலுக்குத்தான் எத்தனை "தசை" தின்னும் ஆசை... யாராக இருக்கும்? சந்தேகமேயில்லை பெஞ்சமின் தான் .... ஸ்டோலன் நிச்சயித்துக் கொண்டான்.

மூன்று மனைவிகளுக்கு வேட்டு வைத்துவிட்டு, நான்காவதாக பணிப் பெண்ணை வளைத்துப் போட்டுக் கொண்டிருக்கும் பெஞ்சமின் -60 வயதைத் தொட்டுக் கொண்டிருக்கும் கிழவன்!....ச்சே....இவன் தனக்கு, தோளுக்குமேல் வளர்ந்த பிள்ளைகள் இருப்பதைக் கூட மறந்து விட்டானா? என்ன?" ஆத்திரத்தில் மீண்டும் கைகள் நடுங்க, ஸ்டோலன் கட்டுப்படுத்திக் கொண்டான்.

புணர்வதில் பிரச்சனையில்லை, ஆனால் புணர்வதற்கும் கால நேரம் இருக்கிறது. அருவருப்பான புணர்ச்சியைப் பார்க்கக்கூடாதவர்கள் பார்க்க நேரும்போது ஏற்படும் உளவியல் பாதிப்புகள் மிகப்பெரியவை. அந்தச்சில நிமிடக் காட்சியில் உள்ளம் சுக்குநூறாய் உடைந்து சிதறியபின் மனிதன் கிட்டத் தட்ட ஒரு மனநோயாளி தான் ... கிழவனுக்கு இது எங்கே தெரியப் போகிறது? கண்ணை மூடிக் கொண்டால் "மனிதர்கள்" உறக்கமென்று நினைப்பவனல்லவா அவன். பற்களை நற நறவெனக் கடித்தான் ஸ்டோலன். ஆத்திரத்தில் உதடு கடிபட்டு ரத்தம் வழிந்தது. துடைத்துக் கொண்டான். வலிக்க வில்லை. வலி மனதிற்குள்தான்!

சில மனிதர்கள், சில நேரங்களில் செய்யும், சில செயல்கள் பலரது உள்ளத்தை வெகுவாகப் பாதிப்பதை அவர்கள் புரிந்து கொள்வதில்லை.

உணர்ச்சிகள் மதிக்கப்பட வேண்டியவைதான். மகிழ்ச்சி, சோகம், காதல், பசி, தாகம் போன்று காமமும் ஒரு மதிக்கப்படவேண்டிய உணர்ச்சி தான்- ஒரு எல்லைக்குட்பட்டு செயற்படும் வரை!

வானத்தை ரசிக்கிறோம். வயலை வர்ணிக்கிறோம். அதே போல் காமத்தையும் ஆராயுங்கள். அமெரிக்காவில் காதல் ஜோடிகள் கடற்கரையில் நிர்வாணமாக சூரியக் குளியல் செய்கிறார்கள் என்பதற்காக, நம்மவர்கள் காலிமுகத்திடலில் அப்படிச் செய்ய முடியுமா? பாலியல் என்பது அழகானதுதான், அந்தரங்கமாக இருக்கும்வரை!

அந்த உருவம் பணிப்பெண்ணின் ரூமுக்குள் நுழைந்து வெகு நேரமாகி விட்டது. சடுதியான அசைவுகள், தேடல்கள்.... வழமையானவைதான். சிறிது நேர அமைதிக்குப்பின் வெளிக் கிளம்பிய உருவம் மீண்டும் தன் ரூமுக்குள் புதைந்து கொண்டது.

"இன்று இவன் செயலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்" ஸ்டோலன் துடித்தான். யாரைக் கொலை செய்வது? பணிப் பெண்ணையா? பெஞ்சமினையா?

ஸ்டோலன் அவசரப்பட்டான். தலை இருந்தால்தானே வால் ஆடும்? பணிப்பெண்ணை கொலை செய்தால் இவன் இன்னொரு பணிப்பெண்ணை வைத்துக் கொள்ளமாட்டான் என்பதில் என்ன நிச்சயம்? மனதிற்குள் விடை கிடைக்க, சடுதியாகச் சென்று, மேசையில் பழங்கள் நறுக்குவதற்காக வைத்திருந்த கூர்மையான கத்தியை எடுத்துப் பத்திரப்படுத்திக் கொண்டு, ரூமுக்குள் நுழைந்தான்.

ஜன்னல் இடுக்கினூடே வந்த மெல்லிய நிலவொளி பெஞ்சமினைக் காட்டிக் கொடுத்தது. பெஞ்சமின் மிகுந்த அசதியால் குப்புறப் படுத்திருந்தான். சத்தமின்றி கட்டிலை நெருங்கிய ஸ்டோலன், சரியாகக் கழுத்துக்குக் கத்தியைக் குறிவைத் தான்...."கூடாது...". இவனை இவ்வளவு இலகுவாகக் கொலை செய்யக் கூடாது. இவன் அணு அணுவாகச் சித்திர வதைப்பட்டு இறக்க வேண்டும். கண்ணீர் வடிக்க வேண்டும். உளவியல் பாதிப்பென்றால் என்னவென்று அறிய வேண்டும். நினைத்தபடி கத்தியைவிட பயங்கரமான ஒரு ஆயுதத்தைத் தேடி ரூமுக்குள் அலைந்த அவனது விழிகள், கடைசியில் மேசைமீது நிலைகுத்தி நின்றன. ஸ்டோலன் மெல்லச் சிரித்தான்.

கத்தியை மேசைமீது போட்டுவிட்டு, அங்கிருந்த பேனாவை எடுத்துக் கொண்டான். மீண்டும் கழுத்துக்குக் குறிவைத்தான். ஆனால் குத்தவில்லை. திரும்பி வெளியே நடந்தான். அவன் கைகளில் அந்த "பாக்கர்" பேனா மின்னிக்கொண்டிருந்தது.

## அரைப்பக்க கற்பனை இதழ்

# காதலி

### இது ஒரு குடும்பப் பத்திரிகை

## அரைப்பக்க சுவாரசியம்

### அமுதரின் சிலைக்கு பிரபா சூட்டிய மாலை!

நேற்று யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் அமரர் அமிர்தலிங்கத்தின் பெரியளவிலான உருவச்சிலையை புலிகளின் தலைவர் பிரபாகரன் திறந்து வைத்தார்.

அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்திலும் பிரபா உரையாற்றினார்.



அமுதரின் கொலைக்கு காரண மானவர்களை கண்டுபிடித்துத் தண்டிக்க அரசு தவறிவிட்டது. அதன் மூலம் இனத்தின் தொடர்ச்சியான ஜனநாயகத் தலைமை பலவீனப்படவும் அழியவும் அரசு துணை நின்றுவிட்டது என்று பிரபா காட்டமாகக் குற்றம் சாட்டினார்.

அமுதர் கொலையாளிகளைப் பிடிக்க அரசு முயலுமானால் புலிகள் அதற்கு உதவத் தயாராக இருக்கிறார்கள் என்றும் அவர் உறுதியளித்தார்.

தமது தலைவரை ஒழித்துக் கட்டிய வர்கள் யார் அவர் என்று இனம் காட்ட மறுப்பதன் மூலம் கூட்டனியினர் தவறு செய்கிறார்கள். அதனை நான் கண்டிக்கிறேன். முன்பு என்றால் மரண தண்டனை என்று மட்டுமே கூறியிருப்பேன். ஜனநாயகத்தில் குதித்து விட்டதால் கண்டிக்க மட்டுமே முடிகிறது என்றும் பிரபா வருத்தத்தோடு கூறினார். (கரகோசம்) இந்த இடத்தில் பொதுமக்கள் கரகோசம் செய்த காரணம் இதுவரை மர்மமாகவே உள்ளது.

### பாசிசப் புலிகள் அல்ல பாசப்புலிகள்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினர் மீது பாசிசப் புலிகள் என்று குற்றம் சாட்டுவோரை ஈ.பி.டி.பி கண்டித்துள்ளது. ஜனநாயக வழிக்கு புலிகள் திரும்பிவிட்டதால் அவர்கள் பாசப் புலிகள் என்றே அழைக்கப்பட வேண்டும் என்று ஈ.பி.டி.பி அடித்துக் கூறியுள்ளது.

### நீரை விடு அல்லது சாகவிடு! பிரபல நடிகர் உண்ணும் விரதம்

தமிழ்நாட்டின் தலைச்சிறந்த நடிகராக தற்போது பிரகாசித்து வருபவர் ஓடிக்குச்சி நரசிம்மன்.

தலைச்சிறந்த நடிகராக இருக்கும் போதும் அவரது உடல் இன்னும் மெலிந்தேயிருக்கிறது.

நேற்று முன்தினம் சென்னை மெரினாக் கடற்கரையில் உள்ள காற்றோட்டமற்ற இடத்தில் ஓமக்குச்சி நரசிம்மன் உண்ணும் விரத மொன்றை ஆரம்பித்தார்.

அதனையறிந்த அவரது ரசிகக் கண்மணிகள் மூன்று நான்கு பேருக்கு மேல் பெருந்திரளாகக் கூடினார்கள். தாமும் உண்ணும் விரதத்தில் கலந்து கொள்ளப் போவதாக ஒற்றைக் காலில் நின்று உரத்துக் கூவினார்கள். பொது நலம் மற்றும் தனது பொக்கற் நிலவரம் கருதி அவர்களது முயற்சியை ஓமக்குச்சியவர்கள் தடுத்தாட் கொண்டார்கள்.

தாய்க்குலம் ஒருவர் ஓமக்குச்சிக்கு உணவு கொண்டு வந்து கொடுத்த போது கண்ணீர் விட்ட ஓமக்குச்சியார் வறியவர்களை வாட்டுவதற்கு தன் மனம் இடம் தரவில்லை என்று கூறினார். உணவை வாங்க மறுத்துவிட்டார். பின்னர் சென்னையின் பிரபல நட்சத்திர ஓட்டலில் இருந்து தருவிக் கப்பட்ட விசேச உணவு வகைகளை சாப்பிட்டார்.

'நீரை விடு அல்லது சாக விடு' என்று நீளமான ஆனால் மெல்லிய பதாதைகள் உண்ணாவிரத மேடையில் காட்சியளித்தன.



### இனப்பிரச்சனைக்கு முக்கிய அரசியல் தீர்வு! கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடத்தப்படும்!!

இலங்கையில் இனப்பிரச்சனை வேரோடும் வேரடி மண்ணோடும் ஒழிந்து போனதாக நமது அரசாங்கம் கூறியிருக்கிறது.

அதனை மெய்ப்பிக்கும் வகையில் கிழக்கிலும் மற்றும் தமது கட்டுப் பாட்டில் உள்ள வடக்கின் சில பகுதிகளிலும் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் தேர்தல்கள் நடத்த முடிவு செய்துள்ளது. தேர்தல்கள் சிறப்பாக நடை பெற்று முடிந்தால் இனப்பிரச்சனை என்பது கற்பனை என்று அகில உலகமும் ஏற்றுக் கொள்ளும் என்று கூறப்படுகிறது.

கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் நடத்துவது மூலம் தமிழர்கள் கேட்டதையெல்லாம் அரசு வழங்கி விட்டதாக எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் கடும் கண்டனம் தெரிவித் துள்ளார்.

சினிமா


### திரையுலகில் மீண்டும் ஜெயலலிதா

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா மீண்டும் திரைப் படத்தில் நடிக்க முன்வந்துள்ளார். அன்னை இந்தியா என்றொரு படத்தில் சகல பாத்திரங்களிலும் அவரே தோன்றி நடிக்கப் போகிறார்.

இது பற்றி கருத்துத் தெரி வித்த கலைஞர் மு. கருணாநிதி அவர் எப்போது நடிக்காமல் இருந்தார். இப்போது புதிதாக கருத்துச் சொல்ல இதொன்றும் புதிய முயற்சியல்லவே என்று கூறினார்.

ஸ்போட்ஸ்

### நடுநிலை தவறாத நடுவர்கள்! இலங்கையருக்கு பாராட்டுக்கள்!



இலங்கையில் உள்ள கிரிக்கெட் விளையாட்டுலக நடுவர்களுக்கு உல கெங்கும் இருந்து பாராட்டுக்கள் வந்து குவிந்த வண்ணம் உள்ளன. ஆட்டத்தில் ரன் குவிவதைப் போல பாராட்டுக்கள் அதிகமாகக் குவிவதாக நடுவர் ஒருவர் கூறினார். அப்படி சொல்லும் போது ஒன்றுக்கு மூன்று தரம் யோசித்து விட்டே அவர் அதைக் கூறினார்.

இலங்கை நடுவர்கள் கிரிக்கெட் விளையாட்டில் விருப்பம் உள்ளவர்கள். சமயத்தில் மெய்மறந்து தாமும் கிரிக்கெட் விளையாடுவதாக நினைத்துக் கொள் வார்கள். அந்தளவுக்கு ஈடுபாடான வர்கள் என்று இலண்டன் பி.பி.சி வானொலி விமர்சனம் வெளியிட்டது. இத்தகைய விமர்சனங்களால் நமது நாட்டின் கிரிக்கெட் நடுவர்கள் என்றால் உலக கிரிக்கெட் வீரர்களை நடுக்கம் கொள்ளவைத்திருக்கிறது.

"இலங்கை அணியைப் பற்றி நாம் பயப்படவில்லை. ஆனால் நடுவர்களின் விளையாட்டு ஆர்வத்திற்கு ஈடு கொடுக்க முடியுமா என்பதே எமது கவலை என்கிறார்கள்" அவர்கள்.



## இலக்கிய நயம்

### இசையாகிவிட்டவள்!



கலைஞர் மு.கருணாநிதியின் 'சங்கத் தமிழ்' தெவிட்டாத தேன்சுவைக் கடல். அந்தக் கடலில் இருந்து இங்கே ஒரு துளி.

மணம் புரிந்து இல்வாழ்வு நடத்துகின்ற-தன்
மனங்கவர்ந்த தலைவியினைக் காண்பதற்கு
மாலைப் பொழுதொன்றில் தோழியொருத்தி-அவள்
மனைநாடி ஆவல்மிக ஓடோடி வந்தாள்!

இல்லத்துக் கதவு கொஞ்சம் திறந்திருத்தல் கண்டு
மெல்லத் தன் கைகளாலே மேலும் சிறிது தள்ள; அங்கு
கண்ட காட்சியினால் கையது கொண்டு கண்ணது பொத்தி
காந்தள் விரல் இடுக்கால் கடை விழி போக்கித் தலைகவிழ்ந்தாள்!

கூடத்தில் விரித்திருக்கும் பாய் ஒன்றில்
ஆடை திருத்தல் பற்றிக் கவலையின்றி-கோயில்
மாடத்துப் புறாப் போன்றாள் அவள் தலைவி படுத்திருக்க;
அவள்
மேடிட்ட மார்பகத்தில் முகம் புதைத்துக் கணவன்;
குழந்தை போல் குறும்புத்தனம் பல செய்ய- அதற்கு
உடந்தையாய் இருந்த தலைவி; உயிர்த்தோழி வருதல் கண்டு
இலந்தைப் பழ மேனியினைத் துகிலால் மூடித் திடுமென
எழுந்தனள் எனினும் அவளை அவன் விடவே இல்லை!

கட்டித் தழுவிக் காமதாகம் முழுமையாய்த் தணித்துக் கொள்ள
எட்டியவள் எழிலிடையைப் பற்றிக் கொண்டு-உடலில்
ஒட்டிக் கொண்டிருந்த மிச்சம்மீதி துணியினையும்
தொட்டிழுத்துத் துகிலுரியத் தொடங்கிவிட்டான்.

"விடுங்கள் என்னை" யென்று விழிமீன்கள் இரண்டும் துள்ள
கடுங்கோபமுற்றவள் போல அவன் கையைத் தள்ளி;
"தோழி; நீ எப்போது வந்தாய்!" என்று நழுவிக் கொண்டாள்!
"வாழி; நீ பல்லாண்டு!" என்று உரைத்தவாறு தோழியவள்;
"தலைவனுக்குத் தலைசாய்க்கத் தலையணையில்லாக் காரணத்தால்
தலைவியின் மார்பகத்தில் முகம் புதைத்துக் கிடந்த போது
வந்து விட்டேன்" என்று வக்கணையாய்ப் பேசிக் கொண்டே
"குந்துதற்கு இங்கே அனுமதி உண்டா?" என்றாள்.

அவசரமாய்
ஆடையுடுத்தி ஆணழகன் நிமிர்ந்து நின்று அவளைப் பார்த்து;
"கோடை வெய்யில் காமத்தைத் தாங்காமல்-குளிர்
ஓடையில் நான் குளித்தெழ முனைந்த போது;
சாடை தெரிந்து ஒதுங்காமல் எங்கு வந்தாய்?" என்று கேலி
செய்தான்!

குறும்பாகப் பேசுவதில் குமரருக்கு ஈடு கொடுக்கும்
கோதையாம் அத்தோழி; கொஞ்சமும் அஞ்சாமல் அவனை
நோக்கி.
"கரும்பனைய தலைவியைச் சந்திக்க முடியாமல்
கார்த்திகைப் பிறை காண்பது போல் என்றோ ஒரு நாள்;
காணுகின்ற நிலையாலே பெருங் கவலை நீயுற்று
கன்னத்தில் கைவைத்து அமர்ந்திருந்த காட்சியினை
அன்று நாங்கள் பார்த்துப் பார்த்து பரிதாபமுற்று
அந்தோ பாபம் என அடிக்கடி பேசிக் கொண்டோம்!

ஆனால் இன்றோ
ஆமிரை மீன் அடர்ந்து நீந்தும் அழகுறு பொய்கையிலே,
ஆம்பல் மலர் பறிக்க இறங்கிடுவோர்
அப் பொய்கை நீரின் நடுவிலே நின்று கொண்டு
'அப்பப்பா; தாகவிடாய் தாங்கவில்லை' என்பது போல்
அணுப்போதும் பிரியாமல் தலைவி அருகிருக்க
அவசரம் ஏன்; நேரம்-காலம்-தெரியாமல்" எனக் கேட்டாள்....

"தாகம் தணிப்பதற்குத் தகுந்த நேரம் எது வென்று; உன்
தலைவியிடம் குறித்துக் கூறிவிட்டுப் போ!-அதனையவள்
மனப்பாடம் செய்து வைத்தாலும் சரி- அல்லால்,
மண்சுவரில் எழுதி வைத்தாலும் சரி; சொல்லுக்குச்
சுவை கூட்டிப் பேசுகின்ற பாவாய்; ஒருண்மை நீ அறிக!
சொல்லிவிட்டு வருவதல்ல இன்ப உணர்வு" என்றுரைத்தான்
தலைவன்.

"இன்று நீ தவிக்கிற தன்மையினைப் பார்க்குங்கால்
அன்று களவொழுக்கத்தில் தலைவிதனைக் காணமுடியாமல்
உனைக்
கொன்று குவித்த இன்ப உணர்வுத் தூண்டுதலை எப்படித்தான்
மென்று விழுங்கி வந்தாயோ என எண்ணி வருந்துகின்றேன்"
என உரைத்து;

அவன் பதிலுக்கு காத்திராமல்
அந்தப் பைங்கிளியாள் பறந்தே விட்டாள்

மூடாமல் இருந்த கதவுகளை மூடித் தாழிட்டு
பார்டாமல் குறையிருந்த முழுப்பாட்டை முடிப்பதற்கு
முனைந்தான் தலைவன்.
இசையாமல் ஊடல் கொண்டாள் தலைவி எனினும்-பின்னர்
இசையாமல் என்ன செய்வாள்? இசையாகிவிட்டாள்!

"ஆமிரை பரந்த அம் தண் பழனத்து
ஏந்து எழில் மலர தூம்புடைத் திரள்கால்
ஆம்பல் குறுநர் நீர்வோடங்கு, இவள்
இடை முலைக் கிடந்து, நடுங்கல் ஆனீர்;
தொழுதுகாண் பிறையின் தோன்றி, யாம் நுமக்கு
அரியம் ஆகிய காலம்
பெரிய நோன்றனீர்; நோகோ யானே"

(குறுந்தொகை- பாடல்: 178)
பாடியவர்: நெடும்பல்லியத்தை, (பெண்பாற் புலவர்)

நன்றி - கலைஞரின் 'சங்கத்தமிழ்'

## தேன் கிண்ணம்

**சிகரட்**

வெள்ளைச் சேலை உடுத்த-விதவையே!
சீதனமும் தந்து உன்னை மட்டும்-மணக்க
ஆயிரம் ஆண்கள் முன்வருகிறார்கள்

சுதா
நீர்கொழும்பு.

**உஷ் இரகசியம்!**

இரவு
பேசிக் கொண்டது
மனிதன்
வாழத் தெரியர்த
உயிரினம்
என்று.

ஆலம் குளத்தூர்
ரோஷான் ஏ.ஜிப்ரி.

**நன்றிக்கடன்...?**

பேணி வளர்த்த றோஜா
குத்திக் காட்டுகிறது.
சப்பித் துப்பிய
மா வித்து
நிழல் தருகிறது.

சுதா
நீர்கொழும்பு.

**வரதட்சனையில் வாழ்வு**



மருதாணி பூசிய கைகள்
சிவந்தன
மங்கள நாளை நினைத்த
உள்ளம் சந்தோஷித்தது
பூசிய மருதாணியின்
சிகப்பில் பூரிக்க
முடியவில்லை
பேசிய மண வாழ்வு
பேரம் பேசியதால்
முறிந்ததென
அறியும் போது.

சாந்திமலர்.

**முரண்பாடுகள்**

காதல் எனும்
காட்டில் மட்டும்
மான்கள்
வலை விரிக்க
வேடர்கள்
மாட்டி கொள்கின்றனர்.

ரகு.



**இரண்டு கவிதைகள்**

தேச மரங்களுக்கு
நிசப்தமாய்
இருக்கத்தான்
விருப்பம்
ஆனால்-
இனவாதப்
பேய்க்காற்று
அவர்களை
ஒரு வினாடியும்
விட்டபாடில்லை!

■

வடகிழக்கு மாதிரி
இந்த-
நூற்றாண்டு
இப்படியே
நீண்டு கொண்டே
போனால்
வருகின்ற
நூற்றாண்டில்
மனிதர்களின்
சுவடுகள் கூட
இங்கு மிஞ்சாது
ஆனால்-
சில வேளை
மிருகங்களின்
சுவடுகள்
சிதையாமல்
இருக்கலாம்!

-மருதமுனை ஜெமீல்-




# நிரந்தர வெற்றி எது?

அவன் ஒரு மீனவர் தலைவன். அவனுக்குப் பரிமளகந்தி என்று ஒரு வளர்ப்பு மகள். ஒரு முனிவர் அருளால் அவள் உடலிலிருந்தும் வாசனை, வெகுதூரத்திற்கு வீசும்.

அங்கே ஒரு நதி உண்டு. அதில் அவன் படகோட்டிப் பணம் சம்பாதிப்பவன். தந்தைக்கு உதவியாகப் பரிமளகந்தியும் படகோட்டுவாள்.

ஒரு நாள் மதிய நேரம். வேட்டைக்கென அங்கு வந்திருந்த மன்னன், இந்தப் பெண் மலரைக் கண்டான். மணத்தை முகர்ந்தான். தன்னை மணந்து கொள்ள வேண்டுமென பரிமளகந்தியை வேண்டினான்.

அவள் "தந்தை அனுமதியோடு என்னை மணந்து கொள்ளுங்கள்" என்று கூறி விட்டாள்.

மன்னன் மீனவர் தலைவனை நாடிச் சென்றான். தன் விருப்பத்தைக் கூறினான்.

அந்த மீனவன் ஒரு நிபந்தனை விதித்தான். "இவளுக்குப் பிறக்கும் பிள்ளைக்கே முடிசூட்டுவதாயிருந்தால் இவளை மணக்கலாம்", என்றான்.

மனம் தொய்ந்து அரண்மனைக்குத் திரும்பினான் மன்னன் சந்தனு. மன்னனுக்கு ஏற்கனவே ஒரு மகன் உண்டு. அவன் கங்கை பெற்ற அருமை மகன். கிடைத்தற்கரிய தவப்புதல்வன் பீஷ்மன். விஷயம் தெரிந்த பீஷ்மன், மீனவர் தலைவனிடம் வந்து தன் தந்தைக்குப் பெண் கேட்டான். அவன் போட்ட நிபந்தனைக்கு ஒப்புக் கொண்டான். "உங்களது மகள் பெற்ற மகனே அரசாளட்டும், எனக்கு அரசு வேண்டாம், என்றான். "நீங்கள் இப்போது அரசு வேண்டாம் என்கிறீர்கள், நாளை உங்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் அரசைக் கேட்டால் என்ன செய்வது?" என்றான், மீனவர் தலைவன்.

அல்ப புத்தி கொண்ட அவனிடம், "நான் மணந்து கொண்டால் தானே அந்தக் கவலை? நான் பிரம்மச்சாரியாகவே வாழ்வேன்," என்று வீரசபதம் செய்தான் பீஷ்மன். பரிமளகந்தியைக் கொண்டு வந்து தந்தைக்கு மணம் முடித்து வைத்தான்.

தனக்கே தெரியாமல் தன்னை மீறி நடந்து விட்ட இந்த விசயத்தில் மனம் நொந்து போனார் மன்னன் சந்தனு. விரைவில் இறந்தும் போனார். அதற்குள் பரிமளகந்திக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்து விட்டனர்.

பீஷ்மர் தான் அவர்களை வளர்த்தார். மணமுடித்து வைத்தார். முதலில் ஒருவனுக்கு முடிசூட்டினார். அவன் எதிரியிடம் அகப்பட்டு இறந்தான். இரண்டாவதாக அடுத்தவனுக்கு முடி சூட்டினார். அவன் நோய்வாய்ப்பட்டு இறந்து போனான்.

மன்னனாக விரும்பி வந்து, தன் தகுதியை மறந்து பெண் கேட்டார் என்பதற்காக, ஏற்கனவே அரசுரிமைக்குரிய மகன் இருக்கும் போது தகாத நிபந்தனை போட்ட மீனவர் தலைவனின் ஆசை நிறைவேறியதா?

நல்ல மனம், அடுத்தவருக்கு பாதிப்பு ஏற்படுத்தாத விருப்பம், முயற்சி இவையே நிரந்தர வெற்றி.

■

## ஆன்மீகம்

# வாக்கின் பிரகாரம் வாழ்ந்து காட்டியவர்

மௌலவி அல்ஹாஜ் ஐ.ஏ.காதிர்கான் (தீனி)

ரசூலுல்லாஹி (ஸல்) அவர்கள் "ரபீஉல் அவ்வல்" மாதம் பிறை 12ஆம் நாள் திங்கட்கிழமை (கி.பி 571ம் ஆண்டு) வைகறைப் பொழுதில், "அப்துல் முத்தலிப்" என்பவரின் மகனார் "அப்துல்லாஹ்"வுக்கும் "வஹ்ப்" எனும் பெரியாரின் மகளார் அன்னை "ஆமினா"வுக்கும் மகனாகப் பிறந்தார்கள்.

முதல் மனிதனும் முதல் நபியுமான நபி ஆதம் (அலை) அவர்களின் 51 ஆம் தலைமுறையிலும், நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் 40 ஆவது வம்சத்தில் நின்றும் அல்லாஹ் இவ்வுலகில் அவர்களை மலர வைத்தான்.

வல்ல அல்லாஹ்வின் "நல்லருள்" என்னும் பேரொளி நிரம்பப் பெற்று, அழகுவடிவமாய்த் திகழ்ந்த எம் ரசூலுல்லாஹி (ஸல்) அவர்களின் வாழ்க்கை முறை, அறிவும் ஆரோக்கியமும் கொண்ட ஒரு சீரிய அடிப்படைத் திட்டமாகவே அமைந்திருந்தது. நடை, உடை, பாவனைகளில் மட்டுமல்லாது மற்றைய எல்லாப் பழக்க வழக்கங்களிலும் பிறருக்கு சிறந்த எடுத்துக்காட்டாகவே விளங்கினார்கள். ரசூலுல்லாஹி (ஸல்) அவர்கள் - ஏழையாகப் பிறந்தவர்; எளியவராகவே வாழ்ந்து, ஏழ்மையாகவே மரணித்தவர்கள்.

எனவேதான், எளிய வாழ்க்கையில் இன்பம் கண்டு, ஏழை எளியவர்களுடன் அன்பாதரவுடன் நடந்தார்கள். "நீ விரும்புவதையே அடுத்தவருக்கும் கொடுத்துதவ வேண்டும்" என்பது ரசூலுல்லாஹி (ஸல்) வாக்கு. அந்த வாக்கின் பிரகாரமே அவர்கள் வாழ்ந்தும் காட்டினார்கள். எவராவது வந்து எதையாவது கேட்டால், "இல்லை" என்று சொல்லாது எடுத்துக் கொடுத்து விடும் தாராள மனப் பண்பு அவர்களிடம் நிறையவே குடி கொண்டிருந்தது. அவர்களின் "சொல்-செயல்" இரண்டிலும் பரிபூரண ஒருமைப்பாடு இருந்தது. எதைச் சொன்னார்களோ, அதையே செயலிலும் கடைப்பிடித்தார்கள். அது போன்றே வாழ்ந்தும் காட்டினார்கள்.

அவர்களிடம் சுயநல வேட்கையோ, "பெருமை-பொறாமை" போன்ற பொல்லாக்குணங்களோ துளியளவும் இருக்கவில்லை. உயர்ந்த அந்தஸ்துகளைப் பெற்றிருந்தும், தங்களை மற்றவர்களுக்கு சமமாக மதிக்கும் "தயாளகுணம்" உடையவர்களாகத் திகழ்ந்தார்கள்.

"நாம் யார்-நம்மைப் படைத்தவர் யார்- எப்படி இவ்வுலகில் பிறந்தோம். எப்படி வளர்கிறோம்-யாருக்காக பிறந்தோம்-யாருக்காக வாழ்கிறோம்?" என்று வாலிபப் பருவத்தை எட்டிப்பிடிக்கும் நேரத்தில் இரவு பகலாக இடைவிடாது சிந்தித்தார்கள். இருள் படர்ந்த "ஹிரா" எனும் மலைக்குகைக்குள் சென்று, பல நாட்கள் தனிமையில் தங்கி இரவைக் கழித்தார்கள். அப்பொழுது, "இக்ரஃ" (ஓதுவீராக) என்ற அல்லாஹ்வின் அருள் வாக்கியம் முதலாவதாகக் கிடைத்தது. இதன் மூலம் -கல்வியின் மகிமையை முதலில் உலகுக்கு எடுத்துக் காட்டினார்கள். ரசூலுல்லாஹி (ஸல்) அவர்கள் அப்படிப்பட்ட நபியின் அத்தனை முத்தான செய்கைகளையும் ஒவ்வொன்றாகத் தீட்ட, நமது அறிவும் ஆற்றலும் போதாது. எனினும் ரசூலுல்லாஹ் (ஸல்) பிறந்த இம்மாதத்தில், அவர்களின் அடிச்சுவட்டின் கீழ் நாமெல்லோரும் அடியெடுத்து வைக்க வேண்டும். (ஸல்லல்லாஹு அலா முஹம்மத்)

●

# ஆறுதல் தர வல்லவர்

மனித வாழ்க்கை இன்பம், துன்பம் இரண்டும் கலந்ததுதான். ஆனால் இன்பங்கள் மட்டும் தொடர்ச்சியாக வந்தாலும் மனிதன் அவற்றினை மிக்க சந்தோசத்தோடு ஏற்றுக் கொள்கிறான். துன்பம் வரும் போது அதனை ஏற்றுக் கொள்ள இயலாமல் 'எனக்கு ஒரு ஆறுதல் இல்லையே. என்னைத் தேற்ற ஒரு கரம் இல்லையே என் மனதின் பாரத்தினை, என் துக்கத்தினை, என் வியாகூலத்தை நான் யாரிடம் பகிர்ந்து கொள்வேன்?' என அங்கலாய்க்கிறான், கண் கலங்குகிறான்.

வேதம் சொல்கிறது, 'கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்' (சங்கீதம் 55:22)

பொதுவாக நாம் நமது பாவத்தினை சக மனிதர்களிடையே பகிர்ந்து கொள்ள நினைப்பதுண்டு. சில சமயங்களில் நமக்கு ஆறுதல் சொல்ல வந்தவர்களால் கூட நமது பாரம் அதிகரித்து விடலாம் என்பதற்கு யோபு என்னும் பக்தனின் வாழ்க்கை எடுத்துக்காட்டு. யோபுவின் தொடர்ச்சியான துன்பங்களுக்கு, மனப்பாரங்களுக்கு அவனுக்கு ஆறுதல் சொல்ல வந்த அவனது நண்பர்களாலே அவன் மேலும் மனமுடைந்து போனான். ஆனால் அவன் இறைவனிடத்தில் தனது இதயத்து சிந்தனைகளை விண்ணப்பத்தால் கண்ணீரோடு வெளிப்படுத்தின போது, இறைவன் அவனுக்கு இரங்கினார். அவனது பாரங்களை ஏற்றுக் கொண்டு அவனுக்குச் சந்தோசத்தை அருளினார்.

"ஒருவனை அவன் தாய் தேற்றுவது போல நான் உங்களைத் தேற்றுவேன்" என்கிறார் இயேசு பெருமான்.

"வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கின்றவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத்தேயு 11:28)

என்று வாக்குத்தத்தம் அருளியிருக்கும் பரம தகப்பனிடம் பிரார்த்திக்கும் போது உங்கள் பாரம் குறையும். துக்கம் சந்தோசமாய் மாறும்.

■

# நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பற்றி பிற மத அறிஞர்களின் கருத்துரைகள்

ஆட்சிபுரியும் அமைச்சர்கள் நபி பெருமானின் நேரிய பண்புகளை, நீதி முறைகளைப் பின்பற்றி செயற்பட்டால் இன்றைய உலகில் நீதியும் சமாதானமும் ஓங்கும். —காந்தி அடிகள்—

முஹம்மது நபியின் நற் பண்புகளை நான் நேசிக்கிறேன். அந்த மா மனிதரின் கொள்கைகளை நான் ஆதரிக்கிறேன். மனித வாழ்வின் லௌகீக-ஆத்மீக நடை முறைகளை உள்ளடக்கிய சத்திய சன்மார்க்க மொன்றை அவர் விட்டுச் சென்றுள்ளார். —நெப்போலியன்—

ஒரே இனம்-ஒரே மறை-ஒரே குலம்-ஒரே வணக்கம்- இவை பற்றி நான் சிந்தித்தேன். இஸ்லாம் ஒன்றைத் தவிர வேறெதுவும் எனக்கு விடை தரவில்லை.

நபியவர்கள் பல்வேறு சோதனைகளின் போது மனந்தளராது திட உறுதியுடன் செயற்பட்டார்கள். ஏக இறைவன் மீது அசையாத விசுவாசமும்-திடமான நெஞ்சுறுதியுமே அவருக்கு மாபெரும் வெற்றியைக் கொடுத்தன. —அறிஞர் அண்ணாதுரை—

தொகுப்பு—எம்.எச்.எம். ஹாரித்—

## ஸ்போர்ட்ஸ்

—பிரட்மனபிமானி—

# இரு நாடுகளின் கிரிக்கெட் அணிகளில் இடம்பெற்ற கெப்லர் வெஸ்ஸல்ஸ்!

தென்னாபிரிக்கா அதன் இன ஒதுக்கல் கொள்கை காரணமாக வெளி உலகத் தொடர்புகளிலிருந்தும் பன்னெடுங்காலம் துண்டிக்கப்பட்டிருந்தது.

இத்துண்டிப்பின் காரணமாக தென்னாபிரிக்காவில் பிறந்த எவரும் வெளி உலகில் எத்தகையதொரு நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றும் சந்தர்ப்பத்தை இழந்திருந்தனர்.

ஒலிம்பிக் பந்தயங்கள் உட்பட,





உலகக்கிண்ண கால்பந்தாட்டம், மற்றும் வேறு உலக ரீதியிலான போட்டிகளில் தென்னாபிரிக்கா பங்குபற்றுவதை சர்வதேச சமூகம் நிராகரித்திருந்தது.

ஆனால் கடந்த சில வருடங்களாக தென்னாபிரிக்காவில் கறுப்பினத்தவர்கள் மீதான கடும் போக்கில் வெள்ளை இன ஆட்சியாளர்கள் மாற்றங் கொண்டு வந்ததையடுத்தே சர்வதேச சமூகத்தினால் தென்னாபிரிக்கா ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது.

இதனையடுத்து 1991ம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் சபை (International Criket Council) தென்னாபிரிக்கா மீது விதித்திருந்த தடையை நீக்கியிருந்தது. இதன் பின்னர் தென்னாபிரிக்க அணி அதே ஆண்டில் அவுஸ்திரேலியாவிலும், நியூஸிலாந்திலும் இடம் பெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் பங்கு பற்றி ஏனைய கிரிக்கெட் பந்தய நாடுகளுடன் விளையாடும் சந்தர்ப்பத்தைப் பெற்றிருந்தது.

தற்போது தென்னாபிரிக்க அணி இலங்கை வந்துள்ளது. மூன்று டெஸ்ட் பந்தயங்கள், மூன்று ஒரு நாள் பந்தயங்கள், இரு மூன்று நாள் பந்தயங்களை தென்னாபிரிக்க அணி இலங்கையில் ஆடுகின்றது.

தென்னாபிரிக்க அணித்தலைவர் கெப்லர் வெஸ்ஸல்ஸ் (Kepler Wessels) உலக கிரிக்கெட் வீரர்கள் வரிசையில் சிறப்பிடம் பெறுகிறார். சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் பலரும் கூடுதல் ஓட்டங்களைப் பெற்றும், கூடுதல் விக்கெட்டுக்களை வீழ்த்தியும் சாதனை வீரர்களாகத் திகழ்கின்றனர்.

ஆனால் கெப்லர் வெஸ்ஸல்ஸ், இரு டெஸ்ட் பந்தய நாடுகளில் விளையாடிய ஒரு டெஸ்ட் கிரிக்கெட் வீரராக முக்கியத்துவம் பெறுகிறார்.

தென்னாபிரிக்காவில் 1957ம் ஆண்டில் பிறந்த கெப்லர் வெஸ்ஸல்ஸ் தமது 16வது வயதில் தென்னாபிரிக்க அணியில் இடம் பெற்றார். ஆயினும் அவரால் வெளிநாடுகளில் விளையாட முடியவில்லை. ஏனெனில் தென்னாபிரிக்காவுக்கு வெளிநாடுகளுடன் விளையாடத் தடை விதிக்கப் பட்டிருந்தது.

இதனையடுத்து 1978ம் ஆண்டில் கெப்லர் வெஸ்ஸல்ஸ் அவுஸ்திரேலியாவுக்குச் சென்று குடியேறினார். தொடர்ந்து அந்நாட்டின் டெஸ்ட் பந்தய வீரராக கெப்லர் வெஸ்ஸல்ஸ் ஏற்றுக் கொள்ளப் பட்டார்.

அவுஸ்திரேலிய அணியில் கிரேக் சாப்பலின் (Greg Chapell) தலைமையின் கீழ் வெஸ்ஸல்ஸ் அங்கம் பெற்றிருந்தார்.

1983ம் ஆண்டு அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இலங்கை வந்த போது அந்த அணியில் கெப்லர் வெஸ்ஸல்ஸ் இடம் பெற்றிருந்தார். அத்துடன் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் வெஸ்ஸல்ஸ் 143 ஓட்டங்களையும் பெற்றிருந்தார்.

அவுஸ்திரேலியா அணியில் அங்கம் பெற்ற கெப்லர் வெஸ்ஸல்ஸ் அந்த அணியின் சார்பில் 24 டெஸ்ட் போட்டிகள், 54 ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றியிருந்தார்.

தொடர்ந்து சர்வதேச கிரிக்கெட் சபை (ICC) தென்னாபிரிக்காவை 1991ம் ஆண்டில் அங்கீகரித்ததையடுத்து கெப்லர் வெஸ்ஸல்ஸ் தாயகம் திரும்பினார்.

தென்னாபிரிக்க கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபையும் எது வித சர்ச்சைக்கும் இடம் தராமல் கெப்லர் வெஸ்ஸல்லை தென்னாபிரிக்க கிரிக்கெட் அணித் தலைவராக்கிவிட்டிருந்தது.

தற்போது தென்னாபிரிக்க அணியில் இடம் பெறும் அனுபவமிக்க ஆட்டக்காரராக கெப்லர் வெஸ்ஸல்ஸ் விளங்குகின்றார்.

சர்வதேச கிரிக்கெட் சபை அங்கீகாரம் பெற்றபின்னர் தென்னாபிரிக்க அணி உலக கிண்ணப் போட்டிகளில் பங்குபற்ற அவுஸ்திரேலியா, நியூஸிலாந்துக்கு முதல் தடவையாகச் சென்றிருந்தது.

தொடர்ந்து இந்தியாவில் டெஸ்ட் பந்தயங்களில் விளையாட அங்கு சுற்றுப்பயணமொன்றை தென்னாபிரிக்கா கடந்த ஆண்டில் மேற்கொண்டிருந்தது. இந்தியாவும் பின்னர் தென்னாபிரிக்கா சென்று பந்தயங்களை ஆடியிருந்தது.

இந்தியாவையடுத்து மேற்கிந்தியத் தீவுகள் அணி தென்னாபிரிக்கா சென்று விளையாடியிருந்தது.

இதனைத் தொடர்ந்து தென்னாபிரிக்க அணி தற்போது இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளது.

தென்னாபிரிக்கா மீதான சர்வதேச கிரிக்கெட் சபையின் தடை அமுலில் இருந்த போது இலங்கையும் அத்தடையை கண்டிப்பாக அனுசரித்தது.

ஆயினும் சில வருடங்களுக்கு முன்னர் இலங்கைக் கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபையின் அனுமதியின்றி இலங்கையின் பிரபல கிரிக்கெட் வீரர்கள் சிலர், இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவர் பந்துல வர்ணபுர தலைமையில் தென்னாபிரிக்கா சென்று ஆட்டங்களில் ஈடுபட்டனர்.

எனவே பந்துல வர்ணபுரவையும், அவருடன் சென்றவர்களையும் இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இலங்கையின் கிரிக்கெட் அணியிலிருந்தும் இடைநிறுத்தியிருந்தது.

தற்போது தென்னாபிரிக்க அணி சர்வதேச சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப் பட்ட நிலையில் இலங்கை வந்துள்ளது. இந்த அணியில் பல தரமான ஆட்டக் காரர்கள் இடம் பெறுகின்றனர்.

**அவர்கள் பெயர்விபரம் வருமாறு:**

1. கெப்லர் வெஸ்ஸல்ஸ்,
2. ஜேம்ஸ் குக்,
3. அன்ட்ரு ஹட்சன்,
4. டாரில் குலினன்,
5. ஹான்ஸி குரொன்ஜே,
6. பானி டி வில்லியர்ஸ்,
7. அலென் டொனால்ட்,
8. கினளவ் எக்ஸ்டீன்,
9. பிறியன் மாக் மில்லன்,
10. ஸ்டீவன் பல்பெராமன்,
11. ஜொன்டிரோட்ஸ்,
12. டேவ் ரிச்சாட்சன்,
13. பிறெட் ஷுல்ட்ஸ்,
14. ரிச்சாட் ஸ்நெல்,
15. பட்றிக் ஸிமொக்ஸ்.

●

* இந்த கிரிக்கெட் சீசனில் இந்தக் கவிதை பொருத்தமாயிருக்கும் என்று நினைக்கிறேன். இந்தக் கவிதை 1975 ஆண்டு ஆனந்தவிகடனில் வந்தது. நான் மிகவும் ரசித்த கவிதையை எல்லோரும் ரசிக்கட்டுமே.

## போனால் போகட்டும் போடா

போனால் போகட்டும் போடா- இந்த
மாட்சினில் நீதியாய் அடித்தது யாரடா
-போனால்....

வந்தது பந்து போனது ஸ்டம்பு
அவுட்டானதே தான் தெரியாது
வந்தவரெல்லாம் தங்கிவிட்டால் - இந்த
இன்னிங்ஸ் முடிவது எப்போது?
கிரிக்கெட் கேமே சான்ஸாகும் - ஒரு
செஞ்சரி அடிப்பதும் ஜெயிப்பாகும் - அதில்
'டக்' அடிப்பதுதான் நிலையாகும்!
-போனால்....

அம்பயர் சொன்னான் அவுட்டென்றே - அதை
இல்லையென்றால் அவன் விடுவானா?
திறமையை சொல்லி அழுவதனாலே
திரும்பவும் ஆட விடுவானா?
கூக்குரலாலே கிடைக்காது - இது
போர்ட்டுக்கு போனால் ஜெயிக்காது - ஆட்டம்
கோட்டை விட்டாலே திரும்பாது.
-போனால்....

ஸிக்ஸரும் பௌண்டரியும் லீக்கினில் அடித்தேன்
இங்கே ஒரு ரன் எடுத்தேனா?
அடித்திருந்தால் தலைகுனிந்தே நானும்
பெவிலியனுள்ளே நுழைவேனா
நமக்கும் நேரே அம்பயர்டா - அவன்
எல்லா ரூலும் தெரிந்தவன்டா ? இந்த
பெஸ்ட்மேனை ஆட்டும் மனிதனடா
-போனால்....

தொகுப்பு — அ. லதா, கலஹா.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

F.R. VIDEO VISION

எந்தவொரு மங்கள வைபவங்களானாலும், வேடை நிகழ்ச்சிகள் எதுவானாலும், யாழ்நகரில் சேவையாற்றிய சிறந்த தொழில்நுட்பக்கலைஞர்களைக் கொண்டு சிறந்த முறையில் வீடியோ படம் பிடித்துக் கொடுப்பதுடன், சிறந்த முறையில் 'மிக்ஸிங்' (MIXING) செய்து கொடுப்பதற்கும்

சிறந்த ஒரே இடம்


F.R. VIDEO VISION
206, GEORGE R. DE SILVA MAWATHA, KOTAHENA, COLOMBO-13.
TEL: 439136 332298

# மீலாத் வாழ்த்துக்கள்


தரம் குறையாத தங்க-வைர நகைகள்
மெருகூட்டும் வடிவான தயாரிப்புக்கள்
குறித்த நேரத்தில் ஓடரை முடித்துத் தருவதே
எங்கள் தனிச்சிறப்பு.

அருள் ஜுவலர்ஸ்
இல. 3, செட்டியார் தெரு,
கொழும்பு—11.
தொ.பேசி: 436331

நபிகள் (ஸல்) பெருமானின் திருக்குமாரியான பாத்திமா அல்-ஸஹ்றா அவர்களின் பெயரால் கட்டப்பட்ட "அல்-அஸ்ஹர்" என்ற பள்ளிவாசலின் புகைப்படம் இதுவாகும். எகிப்து நாட்டின் கெய்ரோ நகரின் மையப் பகுதியில் இக்கட்டிடம் அழகுடன் திகழ்கிறது. 10-ஆம் நூற்றாண்டிலும் அதன் பின்னரும் கட்டப்பட்ட அழகு கொழிக்கும் பல இஸ்லாமியக் கலைப்பொக்கிஷங்கள் இதனைச் சூழ்ந்திருக்கின்றன.



## சகோதரத்துவத்தின் மாண்பினை உணர்வோம்



தமிழ்—முஸ்லிம் தேசிய இனங்கள்
பிரிந்து மோதி
இரத்தம் சிந்தலில்
இரு சமூகமும்
தன் பலம் தொலைத்தது.

சகோதரர்களாய் அணைத்துக்கொண்டு
சமூக ஒற்றுமையால்
எட்ட வேண்டிய இலக்குகளை
தொலைதூரத் தள்ளிவைத்தனர்.

பிரிந்து பிளந்து மோதி மடிந்தது போதும்
சகோதரத்துவத்தின் மாண்பினை உணர்வோம்
தமிழ்—முஸ்லிம் மக்கள்
ஓர் குலமாய்
பெருமையுடன் நிமிர்வோம்.

அகதி வாழ்வில்
நெஞ்சு நிறைந்த சோகம் சுமந்து
விடியலைத் தேடி
அகதி முகாம்களில் காத்திருக்கும்
மக்களுக்கு
விடிவினைக் காணும்
நாள்வர உழைப்போம்!

வாரமலர் தினமுரசு

## கோழிச் சோறு கிளறல்

பிரியாணி என்று நாமெல்லாம் தயாரித்து முக்கியமான நாட்களில் பரிமாறும் உணவு வகையைப் போன்றதே இக்கோழிச் சோறு கிளறலாகும். இதற்கு பிரியாணிக்குப் பயன்படும் அரிசியைப் பயன்படுத்துவது உசிதமானது.

பொதுவாக அரை மணி நேரத்தில் இதனைத் தயாரித்துக் கொள்ளலாம். நான்கு பேருக்கு ஏற்ற அளவுக்குத் தேவையானவை:


கோழி இறைச்சி (எலும்பும் பகுதிச் சதை) - 400கிராம்
(சிறு சிறு துண்டுகளாக வெட்டப்பட்டது)
அரிசி - 500கிராம்
காரட் - 2
கோவா - 1/4 கிலோ
மசாலாத்தூள் - 2 மேசைக்கரண்டி
பூண்டு - 8
பல்லாரி வெங்காயம் - 3
இஞ்சி - அளவாக
சீரகம் - 1 தேக்கரண்டி
பெருஞ்சீரகம் - 1 தேக்கரண்டி
ஏலக்காய் - 4
கறுவாப்பட்டை - 1 அங்குலத்துண்டு
மஞ்சள் தூள் - அளவாக
முந்திரிப் பருப்பு - 8 (துண்டுகளாக)
தாவர எண்ணெய் - 3 மேசைக்கரண்டி
உப்பு - அளவாக
கறிவேப்பிலை - அளவாக

செய்முறை:

முதலில் அரிசியைக் கழுவி வேகவைக்கவும். முக்கால் பதம் வெந்ததும் தனியாக எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

இறைச்சியையும் நன்றாகக் கழுவி, ஒரு பாத்திரத்தில் எண்ணெயை விட்டு வறுக்கவும். இறைச்சி வெந்ததும் அதனுள் துண்டுகளாக வெட்டப்பட்ட வெங்காயம், சீரகம், பெருஞ்சீரகம், ஏலக்காய், கறுவாய், பூண்டு ஆகியவற்றை சற்று நசித்துப் போடவும். கறிவேப்பிலையையும் அதனுள் போடவும். இவை எண்ணெயில் பொரிபடும் போது நல்ல மணம் பரவும். அதேவேளையில் மசாலாத்தூளுடன் இரண்டு கோப்பை நீரை விட்டு மூடி விடவும். 5 நிமிடங்களின் முடியைத் திறந்து ஏற்கனவே தயாரிக்கப்பட்ட சோற்றைப் போடவும். கூடவே கழுவி, ஒரளவு துண்டுகளாக வெட்டப்பட்ட காரட், கோவா மற்றும் முந்திரிப் பருப்பு ஆகிய வற்றையும் சேர்க்கவும்.

மேலும் 5 நிமிடங்கள் கொதிக்கவிடவும். பின்னர் மூடியைத் திறந்து அளவாக மஞ்சள் தூளையும் உப்பையும் விட்டு நன்றாகக் கிளறிய பின் இரண்டு நிமிடங்கள் வரை அடுப்பிலிருக்க விட்டபின் இறக்கவும்.



வாளாய் நீளும்
வன்முறைக் கரங்களில்
ஜனநாயகமும்
மனிதாபிமானமும்
குரல்வளை நெரிந்து
குற்றுயிராய்
தவிக்கையில்
தெருவில்
கிடக்கிறது
வாழ்க்கை!

